விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (28.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 191

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-1411)

## தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்காத

# அரச அதிகாரிகளுக்கு நீதிமன்றத் தண்டனை



### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலை நீதியான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு நீதிமன்ற தண்டனை விதிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேஷப்பிரிய எச்சரித்திருக்கிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முத்தரப்பு மோதலாகும் நாடாளுமன்றத் தேர்தல்





(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் முத்தரப்பு மோதலாக அமையும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தலைமையில் மூன்று குழுக்கள் தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த - மைத்திரி தரப்புக்கு இடையில் நடைபெற்ற அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தரப்புடன் இணைந்து செயற்படுவதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்று முழுதாக நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழிநடத்த

02ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலில் ஐ.தே.க வெற்றி பெறும் இரகசிய கருத்துக் கணிப்பில் தகவல்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிப்பெறும் என்று இரகசியமாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் கூறப்படடுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பு இந்த இரகசிய கருத்துக்கணிப்பை நடத்தியிருக்கிறது.

இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் வெற்றி பெறும். இரண்டாம் இடத்தை முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அணி பெறும்.

மூன்றாம் இடத்தை மைத்திரிபால சிறிசேனவின் அணி பெறும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலைமையை தவிர்க்கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மூன்று உயர்மட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி சிங்கப்பூரின் லீ குவான் யூ மற்றும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்டன் போன்றவர்களை போன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உயர்நிலை முக்கியஸ்தர் என்ற தரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, நாமல் ராஜபக்ஷவை

02ஆம் பக்கம் பார்க்க....

## குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்

### புலித்தேவனின் மனைவி அழைப்பு

(கொழும்பு)

தமிழினப் படுகொலை விவகாரத்தில் இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனின் மனைவி அழைப்பு விடுத்துள்ளார்.

இறுதிக்கட்டப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள், தளபதிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தது தொடர்பில் ஐ.நாவின் நேரடிச் சாட்சியங்களாக மாறியுள்ளவர்களில் ஒருவராக புலித்தேவனின் மனைவியிருக்கின்றார்.

இந்நிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பில் இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐ.நாவைக் கோரும் கையெழுத்துப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு இந்த அழைப்பினை இவர் விடுத்துள்ளார்.

சிங்கள அரசினது இனஅழிப்பு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்க வேண்டி முன்னெடுக்கப்படுகின்ற இந்த கையெழுத்துப் போராட்டத்தில் அனைவரும் பங்கெடுத்து ஒத்துழைபபுடன் வலுவூட்ட வேண்டுமெனவும அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இரண்டு இலட்சங்களைக் கடந்து ஒரு மில்லி

15ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...




## மகிந்தவை பிரதமராக்குவேன பசில் ராஜபக்ஷ திட்டவட்டம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாட்டின் அடுத்த பிரதமராக்குவதற்கு தான் முழு அளவிலான பரப்புரைகளை மேற்கொள்ளப் போவதாக அவரின் சகோதரரும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் இச்செவ்வியில் அவர்

16ஆம் பக்கம் பார்க்க....

## சரியான பாதையில் இலங்கை பயணிக்கிறது

(கொழும்பு)

இளைஞர் சமுதாயத்தின் தெளிவான சிந்தனையும் ஆற்றலுமே நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும்.

இலங்கையில் இளைஞர் சமூகம் மிகச்சரியான தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி கலாநிதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

இலங்கை இன்று சரியான தொரு பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. அதேபோல் பசுமையான நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் மீள் சுழற்சி வளங்கள் பாவனை பற்றி சிந்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அறிவுப் பொருளாதாரத்தில் சக்தி சவால்கள் எனும் தலைப்பிலான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருக்கும் இந்தியாவன் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்களை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சந்தித்தார். இந் நிகழவில் உரை

02ஆம் பக்கம் பார்க்க....

SONY 32" SONY வட்டி இல்லை விசேட விலை ரூ.54,999
SAMSUNG SMUA32H4100 32" SAMSUNG வட்டி இல்லை விசேட விலை ரூ.54,999
SINGER 32" வட்டி இல்லை விசேட விலை ரூ.49,999
TCL 32" The Creative Life விசேட விலை ரூ.39,999
SISIL WORLD
இச் சலுகை சிசில் வேல்ட் இடம் இருந்து
இலவசம் Dialog DISH
TCL 28" விசேட விலை ரூ.35,999
TCL 24" வட்டி இல்லை விசேட விலை ரூ.26,999
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335 (C-1414)
இல.17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
மூன்று வருட உத்தரவாதம் இலவசம்
நிபந்தனைக்கு உட்பட்டது

நடுவுநிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை கோரி மூதூரில் நேற்று ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

மூதூர் பிரதேச செயலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

காணாமற்போனோரின் உறவுகளால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு அழைக்கப்பட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இது தொடர்பில் சர்வதேச தரத்திலான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (எ-11)

# வாக்குறுதியை நிறைவேற்றவே நாடாளுமன்றம் கலைப்பு!

(கொழும்பு)

ஐ.நா பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் நாடாளுமன்றத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15-ம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதன்போது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஐ.நா விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கூட்டத்தொடருக்கு முன்னதாக இலங்கையில் பொறுப்பு வாய்ந்த புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்த ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் இதுகுறித்து வலியுறுத்தியிருந்தார்.

எதிர்வரும் செப்ரெம்பரில், ஜெனிவாவில் கூட்டம் ஆரம்பமாகும்போது, இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியில் இருக்கும் என இலங்கை ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். புதிய அரசின் பிரதிநிதிகளுடன் தாமும் ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்பேன் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே, செப்ரெம்பர் முதலாம திகதி புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டும் வகையில், ஓகஸ்ட் 17ஆம் திகதி தேர்தலை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். (எ-11)

## மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் நாளை சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.

காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட அபிஷேகங்கள் இடம்பெறும்.

சங்காபிஷேகத்தை வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)

**வீடு வாடகைக்கு**

அளவெட்டி ஜெயாபிறஸ்ஸிற்கு அண்மையில் 3 அறைகளுடன் தனிவீடு வாடகைக்குண்டு. (969)

தொடர்பு T.P:-0114949234

**வகுப்புக்கள்**

Grade 10,11, A/L வணிகக் கல்வி பாடங்கள் கற்பிக்கப்படும். (968)

கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம். T.P:-0770782326

**வாடகைக்கு**

நல்லூரில் பருத்தித்துறை வீதிக்கு அண்மையாக அனெக்ஸ் (முற்றிலும் தனிமையானது) ஒரு அறை, குளியலறை, சமயலறை, பெரியகோல் வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர் குடும்பம் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். முற்பணம் 250,000/= (974)

தொடர்பு: 0785210573

# ரணில் தலைமையிலான அமைச்சரவை தொடரும்

## சட்ட விரிவுரையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை கலைக்கப்படாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மேனக ஹரன்கஹா தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், அதுவரை இருந்த பிரதமரும் அமைச்சரவையும் தொடர்ந்தும் ஆட்சி நடத்தும். தேர்தல் நடந்து முடிந்த பின்னர், பிரதமர் உட்பட அமைச்சரவையின் செயற்பாடுகள் முடிவுக்கு வரும் என அரசியலமைப்புச் சட்டத்தின் 48 (1) குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் முடியும் வரை பிரதியமைச்சர்களும் பதவிகளை வகிக்க முடியும்.

எவ்வாறாயினும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், பிரதமர் அல்லது அமைச்சர்களை மாற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்புச் சட்டத்தின் 48 (2) மற்றும் 48 (3) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போன வயோதிபப் பெண்ணொருவர் கோவில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். கல்வியங்காடு பகுதியிலுள்ள இலங்கை நாயகி அம்மன் கோவில் கிணற்றிலிருந்தே மேற்படி வயோதிபப் பெண்ணின் சடலம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.கல்வியங்காடு செம்மணி வீதியைச் சேர்ந்த மேவின் பீலிப் கமலபூஷணி (வயது - 62)என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 6 மணயளவில் காணாமற் போயிருந்த நிலையில் இவர் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளார்.குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(எ- 6)

## முத்தரப்பு...

உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் வழிநடத்த உள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒரு தரப்பும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் இணைந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## சரியான பாதையில்...

யாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இளைஞர் சமூகம் சரியான தலைமைத்துவத்தை கையில் எடுக்க வேண்டும். எமது வாழ்க்கையில் மனிதனது தன்மைகள் நான்கு வகைகளாக பகுக்கப்படுகின்றது. அதில் சிறுவர் பராயம், இளம் பராயம், வளர்ந்தோர் பராயம், தலைமைத்துவ பராயம் என்பனவே அவையாகும்.

இந்த நான்கு தன்மையில் முன்னைய மூன்று நிலையிலும் ஒருவர் தனக்கான உரிமைகளையும் சலுகைகளையும் கேட்பவராக மட்டுமே வாழ்கின்றார். சிறுவர் பராயம் தனக்கானதை தா என்று கேட்கின்றது. இளம் பராயம் தன்னை அனைத்து கட்டுப்பாட்டில் இருந்தும் விடுவிக்கக் கேட்கின்றது. வளர்ந்தோர் பராயத்தினர் தமது சுயநல மற்றும் தனிப்பட்ட நோக்கங்களை எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் அடுத்தது நான் என்ன செய்ய வேண்டும் என்பதையே சிறந்த தலைமைத்துவம் கேட்கின்றது. ஆகவே அனைவரும் தமது இளம் பராயத்தை சிறந்த கல்வியினூடாக வளப்படுத்தி இந்த சமூகத்துக்கு என்ன செய்யவேண்டும், என்னால் இந்த சமூகத்துக்கு எவற்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்கு வரவேண்டும்.

நான் என்ற சுயநலம் மிகவும் ஆபத்தானது. நான் எவற்றை எடுக்க வேண்டும் என்பதை விடவும் என்னால் இந்த சமூகத்துக்கு எவற்றை வழங்க முடியும் என்பது மிக முக்கியமான தலைமைத்துவ பண்பாகும். அதை ஒவ்வொரு மாணவரும் ஆரம்பக் கல்வியில் இருந்தே வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கான உயர் பொருளாதார வளர்ச்சி, வளங்களின் பாதுகாப்பு, தூய்மையான சுகாதார பாதுகாப்பு ஆகியவை ஒரு நாட்டில் மிகவும் அத்தியாவசியமானவையாகும். ஒவ்வொரு நாடும் இந்தப் பண்பில் இருந்து விடுபடக் கூடாது.

அதேபோல் எமது வாழ்வில் சரியான வழிநடத்தல் அமைய வேண்டும். எமது சிறந்த வழிகாட்டியாக முக்கியமான மூவர் உள்ளனர். எமது தாய், தந்தை, ஆரம்பக் கல்வி ஆசிரியர். இவர்கள் மூவருமே எமது சிறந்த வழிகாட்டியாவர்.

அதேபோல் இளைஞர் சமுதாயம் அறிவான வழிகாட்டலில் வளர வேண்டும். ஒரு நாட்டின் இளம் சமுதாயத்தினால் தான் நாட்டை சரியான முறையில் கட்டியெழுப்ப முடியும். இளம் சமூகத்தின் சிந்தனையும் அவர்களது கடுமையான உழைப்புமே இந்த உலகத்தில் பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் இளைய சமுதாயமும் இந்தப் பட்டியலில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.

சூரிய கலம் நூறு வீத பாதுகாப்பானது. நவீன கால கட்டத்துக்கு இது மிகவும் முக்கியமானது. சூரிய சக்தி மூலமான வளங்களில பகிர்வே எதிர்கால நாட்டின் பாதுகாப்புக்கு மிகச்சிறந்த தீர்வு என நன் நம்புகின்றேன் என்றார் (எ-11)

## தேர்தலில்...

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உதவி தலைவர்களில் ஒருவராக நியமிக்க வேண்டும்.

மூன்றாவதாக ராஜபக்ஷவினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை படிப்படியாக குறைக்க வேண்டும் என்பதாகும்.

எனினும் இந்த ஆலோசனைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தரப்பு இணக்கம் வெளியிடவில்லை. இந்தநிலையில் 29ஆம் திகதி வரும் சந்திரிகாவின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு நாடாளாவிய ரீதியில் 10 நாள் போதிபூஜையை நடத்தப்போவதாக அவரின் ஆதரவாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-11)



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்) Nail art
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 05-07-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 06-07-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-



**அக்ஷயா**


அழகுக் கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன.
- சாறிவுளவுஸ் கட்டிங் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு, வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு
- உதட்டு கறுப்பு, கழுத்து கறுப்பு, கருவளையம் நீக்கும் கிறீம்
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா குளிசை டொனிக்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- பேசியல், அயனிங், கிளிநப் செய்து கொள்ளலாம்.

0772106155 அக்ஷயா நாவலர் றோட்
221, பிறவுன் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ். (972)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகிந்த தலைமையிலான கூட்டணியில் தேசிய சுதந்திர முன்னணி போட்டியிடும்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக விமல் வீரவன்ஸவின்தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி உட்பட பல கட்சிகள் இம்முறை பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியில் போட்டியிட தயாராக இருப்பதாக அதன் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் படுத்தப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பம்கிடைக்கும்வரையே நாங்கள் காத்திருந்தோம்.

100 நாட்களில் நாட்டின் பயணத்தை பின்நோக்கி திருப்பி,ஈழ தேசிய வாதத்தை போஷித்து, நாட்டின் பொருளாதாரத்தை சீர் குலைத்து, நல்லாட்சியை முற்றாக இல்லாமல் செய்து, நாட்டை சீரழிக்கும் இந்த பயணத்தை மாற்றிய மைப்பதற்காக அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்போம்.

அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி, ஓகஸ்ட மாதம் 18 ஆம் திகதி நாட்டில் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் எதிர்ப்பார்ப்பில் தேசிய சுதந்திர முன்னணி இந்த தேர்தலில் போட்டியிடும் எனவும் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார். (இ-5)

# பிரதமர் வேட்புரிமை கட்டாயம் மகிந்த தரப்பினர் தீர்மானம்

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெயரிடப்படுவது கட்டாயம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் காலை கூடிய கூட்டணியின் தரப்பினர் இநத தீர்மானத்தை எட்டியுள்ளனர்.

விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, டீ.பீ.ஏகக நாயக்க ஆகிய பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

கூட்டணியின் கீழ் தேர்தலில் களமிறங்குவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் சிரேஷ்ட த்துவத்திற்கமைய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என அவர் கள் நெறிமுறைகளை முன்வைத்து ள்ளனர்.

அதற்கமைய கூட்டணியின் கீழ் போட்டியிடுவது என்றால் பிரதமர் வேட்புரிமை அவசியம் என்பதனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிடம் அறிவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அநு ராதபுரத்தில் இடம்பெறவுள்ள மகிந்தவுடன் நாட்டை வெற்றி பெற செய்வோம் என்ற பேரணியில் நிச்சயமாக முன்னாள் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளமையும் இங்கு உறுதியாகியுள்ளது. (இ-7)

# பொருளாதார,சமூக,கல்வி மேம்பாட்டுக்கான திட்ட வரைவுகள் பற்றிய கருத்தாடல்

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரதேச வாரியாக இடம்பெற்றுவரும் ''யாழ். மாவட்ட பிரதேச அபிவிருத்தித் திருமுறைகள்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு தொடரின் ஒரு பகுதியாக "தீவுப் பகுதியின்பொருளாதார, சமூக, கல்வி,மேம்பாடுக்களினதும் மீள் எழுச்சிக்கானதுமான திட்டவரைபுகள்" தொடர்பான கருத்தாடல் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி (புதன்கிழமை) மாலை 4.30மணிக்கு (முழு நிலா நாள்) இல121,இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்எனும்முகவரியில்அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் பேராசிரியர். இரா.சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தீவுப்பகுதியின் மேம்பாட்டில் அக்கறை கொண்ட தீவுப் பகுதியை சார்ந்த மற்றும் தீவுப் பகுதி சாராத கல்வியாளர்கள், புத்திஜீவிகள், அரச, அரசசார் பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், வர்த்தகத்துறையினர், ஆர்வமுள்ள பொதுமக்கள் யாவரும் இந்நிகழ்வில் கலந்து தமது கருத்துகளை முன்வைக்கும் படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

# தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் ஜனாதிபதி கல்வி அமைச்சருக்குக் கடிதம்

(கொழும்பு)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கும் முகமாக வடமாகாண சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான அமைப்பாளரு மான அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி அளித்துள்ளது

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அங்கஜன் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இவர்களை இலங்கை ஆசிரியர்சேவையில் உள்ளீர்க்குமாறு ஜனாதிபதி கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு 23.06.2015ஆம் திகதிய கடிதம் மூலமாக உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில், இவர்களுக்கு வெகுவிரைவில் ஆசிரியர் நியமனாம் வழங்கப்படவுள்ளதாகவும் ஏனைய ஆசிரியர்களின பிரச்சினை குறித்தும் தான் ஜனாதிபதியுடன் பேசி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)


மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

28.06.2015

திருமதி பத்மராணி யோகநாதன்



விஞ்ஞான ஆசிரியர் : கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி

அன்போடு அடக்கம் பேணி அறிவினில் சிறந்த மேலோய்
பண்பொடு பழகும் பாங்கில் பாரினில் வந்த செம்மல்
கோப்பாயில் வந்துதித்து குணம்நிறை ஆசானாகி
மணிவிழாக் காணும் எங்கள் கல்லூரி நாயகியை
வளமுடன் வாழ்கவென்று வாயார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி

(959)


# க.பொ.த.உயர்தரப் பரீட்சையை பிற்போட வேண்டிய நிலை

எதிர்வரும்ஓகஸ்ட்மாதம் 17ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால்க.பொ.த. உயர் தரப் பரீட்சையை பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டு ள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாத முற்பகுதியில் இடம்பெறுவது வழக்கம். ஆனால் இவ்வருடம்ஓகஸ்ட்மாத நடுப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையை பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர், க.பொத. உயர்தரப் பரீட்சை குறித்த முடிவை கல்வி அமைச்சு அறிவிக்கும் என்றும்கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ராசி பலன்

28.06.2015
(ஆனி 13, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 9.21 மணிவரை
விசாகம் பின்னிரவு 3.15 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | சூரி செவ் |
| | இரவு 9.06 விருட்-சந் | | குரு செவ் |
| | | | |
| | | சனி சந் | ராகு |

**மேடம்:** விருப்பங்கள் நிறைவேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**இடபம்:** எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது,உடல் நலன் சீராகும்,கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.

**மிதுனம்:** பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்,வருமானம் பெருக புதிய வழிகளை கையாள்வீர்கள்,மனதில் இனம் புரியாத சந்தோசங்கள் குடி கொள்ளும்.

**கடகம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்,மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாசம் குறையும்,போசன சுகமுண்டு, கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்,நண்பர்கள் சொல்லும் ஆலோசனைகள் உங்களுக்கு நல்லதாகத் தெரியும், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி:** வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளம் காணும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பர்கள் பக்கபலமாக இருப்பர்,பணப் பிரச்சினைகள் தீரும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,சுப நிகழ்வுகளில் கலந்து [illegible] இடத்தில் [illegible]

**தனுசு:** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,தூர தேசத்திலிருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம்,கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,மற்றவர்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடமே வந்து சேரலாம்,மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.


**கும்பம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்,வீண்பழிகள் அகலும், புதிய திட்டங்கள் கைகூடும்,பயணங்களால் பலனுண்டு, கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**மீனம்:** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்,ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசிரிய திலகம்" "சொல்லின் செல்வர்"

# இரா.செல்வவடிவேல் அவர்களின் மணிவிழா சிறப்பிதழ்



### அருளாசிச் செய்தி

கல்வி செல்வத்தை அள்ளி வழங்கி மாணவர் சமுதாயத்தை மேலாங்கச் செய்யும் பணியில் சிறப்புற்றுத் திகழும் ஆசிரியர் திலகமாகிய விஞ்ஞான ஆசான் திரு. இரா. செல்வவடி வல் அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளியிடப்பெறும் மணிவிழா மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மாணவ சக்தி மாபெரும் சக்தி என்றபடி எதிர்காலம் சிறப்புற கல்வி விருத்தி செய்து சேவையே தமது தேவை என்று துலங்குகின்ற ஆசிரியர் திலகம் அவர்கள் அகவை அறுபதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்கி மகிழ்கின்றோம். மணிவிழா நாயகன் நல்லபடி வாழ்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கி இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமந்தர தேசிக ஞான சம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்.,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**



### ஆசியுரை

அன்பான இரா. செல்வவடிவேல் ஐயா அவர்களின் மணிவிழா 28.06.2015 ஆகிய இன்று கொண்டாடப்படுவதும் அதனையொட்டி மணிவிழா மலராக செல்வநாதம் வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும். செல்வவடிவேல் ஐயா அவர்கள் எமது மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருக்கின்ற பணி அளப்பரியது.

ஈழத்திலே சைவமும் தமிழும் தலைநிமிர உழைக்கின்ற உத்தமர்களிலே ஐயாவும் ஒருவர். செல்வவடிவேல் ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்திட பணி பல செய்திட எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**இறைபணியில்**
**ஜாக்ரத சைதன்யா், வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**



### என்னோடு உறவாடிய உற்ற நண்பன்

இரா.செல்வவடிவேல் விஞ்ஞான ஆசானாய் விளங்கிய விந்தை மிகு மனிதன்- தன் குடும்ப நிலை காரணமாக உயர்தரக் கல்வியுடன் தன்னை தனியார் கல்வி நிலையத்திலூடாக ஓர் விஞ்ஞான ஆசிரியராக தன் தடத்தினைப் பதித்து யாழ்.மண்ணில் ஓர் பிரபல விஞ்ஞான ஆசிரியராக தன் பெயரைப் பதிவு செய்து இன்று வரை தன்பணி தொடர்கின்ற ஓர் உத்தம புருஷன். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் இன்று மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக திகழ்கின்றார்கள் என்பது இவரின் பெயருக்கு புகழ் சேர்க்கின்றது.

ஓர் விஞ்ஞான ஆசானாக இருந்த போதிலும் ஆன்மீக, சமூக பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஓர் சேவையாளன் என் நண்பன் வடிவேல். ஆன்மீகக் கருத்துக்களைத் தனது சொற்பொழிவினூடாக அலை அலையாக தமிழ்பேசும் உலகெங்கும் விதைத்து நின்றவன்.

ஆன்மீகச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கழலும் சொற்போர்கள் என என் நண்பன் ஏறாத மேடைகள் எங்குமே இல்லை. தனது பண்பைத் தொடர்வதற்காக தன்னுடன் இணைந்த இளைய சந்ததியினரையும் வழிப்படுத்திய வல்லமையாளன். கம்பன் கழகத்திலூடாக தன் பணியைத் தொடர்ந்து சைவபரிபாலன சபையில் நீண்டகாலம் பரீட்சைச் செயலாளராக கடமையாற்றி சிறப்பாகப் பணியாற்றியவர்.

சொல்லின்செல்வராய் விளங்கிடும் என் நண்பன் வடிவேலின் மணிவிழா சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**சண்.வாமதேவன்**
**ஓய்வுநிலை அதிபர்,**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**



### '' சொல்லின் செல்வர் '' பற்றி சொல்லால் சில வரிகள்

என் உடன்பிறந்த சகோதரர்களில் ஒருவராகவே இரா.செல்வவடிவேல் அவர்கள் இதுவரை காலமும் மதித்தேன். மதித்து வருகிறேன். எதிர்காலத்திலும் மதிப்பேன். இத்தனை நெருக்கமான உறவு கொண்ட என் சோதரனுக்கு ''மணிவிழா'' வந்துவிட்டது என்று ஆயத்தங்கள் நடைபெறுவது என்பது நம்பமுடியாததொன்றாகவே உள்ளது.

விஞ்ஞானத்தை விஞ்ஞானமாக கற்பிக்கின்ற தலைசிறந்த ஆசிரியராக, நல்வழி காட்டுனராக எதிர்காலத்தை சிறப்பாக படம்பிடித்து இன்றே காட்டுவதாக திகழ்வது எல்லோரிடமும் கண்டுகொள்ளமுடியாத சிறப்பம்சமாகும்.

இன்னும் ஒருபடிமேல் விஞ்ஞானம் கற்பிப்பவர்கள், மெய்ஞ்ஞானத்தை பெரியளவில் நம்புவது இல்லை. ஆனால் சொல்லின் செல்வர் அவர்கள் பிள்ளைகளுக்கு மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞான பூர்வமாக எடுத்துக்கூறுவதில் வல்லவர். வடபுலத்து கோவில்களின் பக்தர்கள் இவரது குரலோசையில் லயித்த காலங்கள் அநேகம்.

இத்தகைய பல்துறை ஆற்றல் கொண்டவர் கடந்த ஐந்து ஆண்டுகள் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் மறக்க முடியாதது. காலத்தால் அழியாத பல்துறை பணிகளை ஆற்றிய பல்துறை விற்பன்னரான என் சகோதரனுக்கு மணி விழா நாளின்போது வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சி.மாணிக்கராஜா, (உப தலைவர், மணி விழாச்சபை)**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்.**



**உயர் திரு. இராமசாமிச் செட்டியார் செல்வவடிவேல்**

தாய்:இ.சுப்பம்மாள்
தந்தை:ஆ.இராமசாமிச்செட்டியார்
மனைவி: செ.சியாமளா
பிள்ளைகள்:மிருணாளினி அமலன்
தர்மினி பரமேஸ்வரன்
செ.கணேசவேல்
செ.ரிஷிகோபன்
பேரப்பிள்ளைகள்: ப.ஜெயதுர்க்கா, ப.சுருதிகா
சகோதரர்கள்;குருவம்மான் சாத்தவராயன், இரா.பால்ராஜ்(அமரர்)
செல்வராணி கதிர்காமநாதன், வசந்தி பாலாஜி

**பொதுப்பணி:**

1.தலைவர்,சைவசமய அபிவிருத்திக்கழகம், சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்.
2.செயலாளர்,சைவ பரிபாலன சபை,யாழ்ப்பாணம்.
3.உபதலைவர்,கலாசாரப் பேரவை,யாழ்ப்பாணம்.
4.தலைவர்,கலை பண்பாட்டுப் பேரவை,யாழ்ப்பாணம்.
5.தலைவர்,வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு.
6.செயலாளர், தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாணம்.
7. செயலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழு.

**விருதுகள்:**

1.ஆசிரியர் திலகம்,சொல்லின் செல்வர்-நரசிங்க வைரவர் தேவஸ்தா னம், இணுவில்.
2.செஞ்சொற்செல்வர்; ஸ்ரீகாளிகா தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.
3.செஞ்சொல்வாணார்-சைவவித்தியா விருத்திக்கழகம்,திருநெல்வேலி.
4.பிரசங்க திலகம்-பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.
5.செஞ்சொற்சுரபூபதி-பிள்ளையார் தேவஸ்தானம்,உப்புமடம்.
6.சமூக திலகம்-கொட்டடி சனசமூக நிலையம்.
7.சிவநெறிச்செல்வர்-வட்டுக்கோட்டை முருகன் ஆலயம்.
8.சைவத்தமிழ் வேந்தன்-கடையிற்சுவாமி தேவஸ்தானம்,யாழ்ப்பாணம்.
9.யாழ்.ரத்னா விருது-கலாசாரப் பேரவை,யாழ்ப்பாணம்.
10.''தேசபந்'' விருது-கலாசாரப் பேரவை,கொழும்பு.

### மணி விழா நாயகன் நீடு வாழ!

இரா.செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள் சந்நிதி யான் ஆச்சிரமத்தோடு மிக நீண்டகாலமாக ஈடு பாடு கொண்டதோடு அல்லாமல் ஆச்சிரமத்தி னால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல விதமான பணிகளுக்கும் தன்னாலான சேவையை வழங் குவதில் தன்னிகரில்லா பெருந்தகை.

ஆசிரியர் அவர்கள் 28.06.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை தமது அறுபதாவது அகவையில் காலடி வைப்பதையிட்டு பெருமிதம் கொள்வதோடு ஐயா அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து சமயத்திற்கும் சமூகத்திற்கும் சேவையாற்ற சந்நிதியானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**சாந்தி! சாந்தி!!**

**குருபணியில்,மோகன் சுவாமிகள், சந்நிதியான்**
**ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**



### ஆளுமை மிக்க விஞ்ஞான ஆசிரியர்

மதிப்பிற்குரிய விஞ்ஞான ஆசிரியர் திரு.இரா. செல்வவடிவேல் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.ஒரு கடுமையான பாடத்தை ஒரு மாணவனுக்கு எப்படி இலகுவாகக் கற்பிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டான ஆசிரியர் திரு.இரா.செல்வவடிவேல் தான் எனக்கூறலாம். ஆயிரக்கணக்கான மாணவர்களை தனியார் கல்வி நிலையங்கள் ஊடாக கற்பித்து அவர்களை நல்ல கல்விமான்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வாழ வழிகாட்டியவர் இவர் தான்.

யாழ் மாவட்டத்தில் அவர் கற்பிக்காத கல்வி நிலையங்களே இல்லை எனக்கூறும் அளவிற்கு அவர் பல தனியார் நிறுவனங்களில் விஞ்ஞானத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

திரு.இரா.செல்வவடிவேல் கற்றலில் மட்டுமல்லாது பல சமூக அபிவிருத்தி அமைப்புக்களுடனும் ஈடுபாடு கொண்டு பல சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.சமூக நலத்திட்டங்களில் ஈடுபாடு கொண்டோரைக் கௌரவித்து சமூகத்திலகம் என்ற பட்டத்தினை வழங்கும் கொட்டடி சமூக நல அமைப்புடன் நெருங்கிய ஈடுபாடு கொண்ட இவர், எவர் சமூக சேவையுடன் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அதை ஊக்குவிக்கும் மனோபாவம் கொண்டவராக காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.கல்வி,ஒழுக்கம்,சமூகசேவை ஆகிய மூன்று விடயங்களிலும் அக்கறையுடன் தொழிற்பட்டு வரும் திரு.இரா.செல்வவடிவேல் அவர்கள் இந்த வையகத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து பேருடனும் புகழுடனும் வலம்வர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா, (தலைவர், மணிவிழாச்சபை),**
**தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 42 ஆண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்த இனிய சகோதரன் இரா.செல்வவடிவேல் அவர்களை வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கல்லூரியின் மாணவ முதல்வனாக நாகலிங்கம், இல்ல தலைவனாக கடேட் அணித் தலைவராகவும் பிரபல்யம் பெற்ற சொற்பொழிவாளராக எங்கள் மத்தியில் சிறப்புற்று விளங்குகின்றார்.

கல்லூரி காலத்திலேயே இவரது நடை, உடை, ஆளுமை தனித்துவம் பெற்று இருந்தது. இளையவர்களாகிய நாம் அவரை ரசித்தோம். 90 காலப்பகு தியில் கம்பன்கழக பேச்சு மேடைகளில் இரவு பகலாக பவனிவ ந்த நாட்கள் பசுமையாகவுள்ளது. பட்டிமண்டபங்கள், வழக்காடு மன்றங்கள் அனைத்திலும் ஓர் அணித் தலைவராக தன் ஆளுமையால் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

விஞ்ஞான ஆசிரியராக கடந்த 40 ஆண்டுகள் இம்மண்ணில் சேவை செய்து வரும் அன்பு சகோதரனுக்கு பிரியமானவர்கள் எடுக்கும் மணிவிழா குறித்து பூரிப்படைகிறேன். இறையருளாலும் பெரியோர்களின் ஆசியாலும் பல்லாண்டு வாழ வாழ்த்தி நிறைவு செய்கிறோம்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை,**
**தலைவர், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானம்.**



### செயலாளரின் இதயத்திலிருந்து...

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே நலன் மிக்க நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே என்பர் நற்றமிழ் வல்லோர்'' கல் விப் புலத்திலோ, செல்வப் புலத்திலோ, சமூகச் செயற்பாடுகளிலோ நல்லவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தச் செயற்பாடுகளுக்கு அப்பாற் சென்று மெய் வருத்தம் பாராது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன் நலம் மறுப்போடு பொதுப்பணியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமைகளைச் சேர்க்கும் வாழ்த்தைப் பெறுபவர் மென்மேலும் உற்சாகம் அடைந்து மேலும் மேலும் சமூகப்பணியில் முனைந்து நின்று நற்பணியாற்றுகின்ற மனப்பாங்கினால் மீண்டும் வாழ்த்திய சமூகத்தினரே பயன்பெறுகின்றனர். இந்த வகையில் விஞ்ஞான ஆசிரியர் இரா.செல்வவடிவேல் அவர்கள் கல்வித்துறையில் மட்டும் அல்லாது பல்வேறு சமூக சேவைச் செயற்பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்ற பெருந்தகையாவார்.

எல்லாமே ஒரு நல்ல மனிதனை வாழ்த்த வேண்டும் என்ற மனிதநேயத்தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்றோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும் காலத்தினாற் செய்யப்பட்டவற்றிற்கு காலம் தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்த கடமையுணர்விற்கே இந்த விழா என்பதை அறியத்தந்து மனம் நிறைவு அடைகின்றோம்.

''என்கடன் கணி செய்து கிடப்பதே
நன்கடன் அடியேனையும் தாங்குதல்''

**ஞான திருக்கேதீஸ்வரன், செயல்ாளர் (மணிவிழாச்சபை)**



### கல்விப் பெருஞ் செல்வம்

கடவுள் மனிதர்களைப் படைக்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு திறமையைக் கொடுத்து இந்த உலகிற்குச் சிருஷ்டிக்கின்றார்.ஆனால் ஆயிரத்தில் ஒருவரை பல் துறை விற்பன்னர்களாகப் படைக்கின்றார். இராமசாமிச் செட்டியார் செல்வவடிவேல், இந்தக் கதாபாத்திரம்.வடபுலத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் தெரியாதவர்களே இல்லை எனலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோருக்கும் அவரவர் துறைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு நாடக்கூடிய கல்வி,கலை,கலாசாரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம்,சமூகப்பணி,அறப்பணி ,ஆன்மீகப்பணி, சமயப்பணி,தமிழ்ப்பணி என்று எனக்குத்தெரிந்த தசாவதானி செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள். என்னுடைய வயது அவருடைய அனுபவமாக இருந்தாலும் கம்பன் கண்ட இராமன் போல நான் அவருடைய புகழை அருகில் நின்று அனுபவித்தவன்.

ஒரு ஆணினுடைய வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பதைப் போல விழாநாயகனுடைய துணைவியார் திருமதி. சியாமளா செல்வவடிவேல் அவரிடம் நான் கண்டது அறப்பணி .ஒரே சொல்லில் கூறினால் இவர் ஒரு அட்சய பாத்திரம். இவ்விருவரும் சேர்ந்து செய்யும் பணிகள் அனுபவித்த அனைவரும் மறந்து விட முடியாத அளவுக்கு இருக்கின்றன என்றால் அதுமிகையாகாது. இரா.செல்வவடிவேல்-சியாமளா தம்பதியருடைய பணிகள் தொடர வேண்டும்.வாழ்த்துகின்றேன்-வணங்குகின்றேன்-பணிகின்றேன்.

**பி.என்.சுதர்ஷன் (அமைப்பாளர், மணிவிழா சபை)**

மலர் அனுசரணை:
றோயல் அக்கடமி
நல்லூர், யாழ்ப்பாணம்

## தேவை

எமது பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் உடனடி வேலை வாய்ப்பு 50 மட்டும் உள்ளதால் ஐஸ்கிறீம், யோகட்,பிஸ்கட்,டிபி டிபி போன்ற பிரிவுகளுக்கு ஆண்,பெண் (17-50) மாதாந்த சம்பளம் .(25000-40000) வரை நாட்சம்பளம் (1500) போனஸ் ஆகியவற்றுடன் உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம்.மொழி அவசியமில்லை. உடனடியாக தொடர்பு கொள்ளவும்.நீங்கள் வேலை செய்யும் அன்றே உங்கள் ஊதியத்தை பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ளவும்**

**077 401 7543, 072 976 7800, 075 544 6898**



## CERTIFICATE IN PHARMACY

**வடபகுதி மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும்** (Pharmacy staff) **மருத்துவ பிரதிநிதிகளுக்கும்** (Medical Reps) **மருந்தக/ மருத்துவ மருத்துவ அறிவையும் தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் 6 மாத பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது.**

**இடம்:** மருந்தியலாளர் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**காலம்:** 6 மாதங்கள் (ஆடி / 2015 - மார்கழி / 2015)

**நேரம்:** 1 வது Batch - புதன்கிழமை காலை 8.30 - 12.30 ஆரம்பம் 01.07.2015
2 வது Batch - ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 12.30 - 16.30 ஆரம்பம் 05.07.2015

**கல்வித் தகுதி:** - G.C.E. O/L ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி

**பயிற்சி நெறிக்கான கட்டணம்** (Fees)

யாழ்ப்பாணக் கலலூரி அனுமதிக்கட்டணம் - Admission Fees Rs.500/= பயிற்சிக்கான மாதாந்த கட்டணம் Monthiy Fees Rs.1500/= அந்தந்த மாதத்திற்குரிய கட்டணம் செலுத்திய பின்னரே பயிற்சி வகுப்பில் விண்ணப்பதாரி கல்வி கற்க அனுமதிக்கப்படுவர். ஆறுமாதங்களுக்கான பயிற்சிக் கட்டணம் ரூபா 9000/= ஐ ஒரே தடவையில் செலுத்துபவர்கள் அனுமதிக்கட்டணம் ரூபா 500 /= செலுத்த வேண்டியதில்லை. (இலவசம்)

ஆடி மாதம் ஆரம்பமாகும் பயிற்சி வகுப்பில் சேர்வதற்கான விண்ணப் படிவமும் யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிப் படிவமும் நேரடியாக/தபால் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். முகவரி: நடராசா இராசநேரு மருந்தியலாளர் பயிற்சி இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப்பட்டப் படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0776256292.


## கொழும்பில் அடுத்த மாதம் ஐ.தே.கட்சியின் மாநாடு

கொழும்பில் எதிர்வரும் ஜூலை மாதம் 05 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளதாக அதன் தலைவரும் பிரதமருமான ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.இங்கு உரையாற்றிய பிரதமர், தேர்தலுக்கு தயாராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக அமைசசர் கரு ஜயசூரிய மற்றும் 'கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## பிரார்த்தனை

மனிதம் பண்பாட்டு விழுமியங்களுடன் வாழ்வுக்கான பிரார்த்தனை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் மாலை 4 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.மதுவும் போதைப் பொருட்களும் மனித உணர்வுகளை இழந்தவர்களது செயல்களும் தமிழ் சமூகத்தை வெகுவாகப் பாதித்துள்ளது.எனவே இந்தப் பாதிப்புக்களிலிருந்து விடு பட்டுமனங்களைஆற்றுப்படுத்தவும் படு கொலை செய்யப் பட்ட வித்தியாவுக்கா கப் பிரார்த்திக்கவும் எமது சமூகபண்பாட்டு விழுமியங்களு டன் வாழ வேண்டி யும் இந்தப் பிரார்த் தனை ஒழு ங்கு செய் யப்பட்டுள்ளது.

இத்தினத்தில்அனைவரும் உணர்வுபூர்வமாக இப்பிரார்த்த னையில் கலந்து கொண்டு விரதமிருந்து பிரார்த் தனையில்ஈடுட ஏற்பாட்டாளர்கள் அழை ப்பு விடுத்துள்ளனர். (இ-3)


## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் இன்று எட்டாம் திருவிழா



### சங்கடங்கள் தீர்த்து வைக்கும் சரவணனே வருக

தங்க மயில் ஏறிவரும் சண்முகனே வருக
சங்கத் தமிழ் போற்றித் தரும் பெருமகனே வருக
பொங்குகலை பேணி வரும்
இணுவை வாசா வருக
சங்கடங்கள் தீர்த்து வைக்கும்
சரவணனே வருக
தேங்காய் போல் துன்பங்கள்
சிதறிட வேண்டும்
சண்முகனே உன்நாமம்
ஒலித்திட வேண்டும்
கண்குளிர இணுவை மண்ணும்
கண்டிட வேண்டும்
கண் வழிந்து உன் அழகை
கழித்திட வேண்டும்

சிகாகோ-பாஸ்கர்

(சி-1389) எட்டாம் திருவிழா உபயகாரர்



## சமையற்காரர் தேவை

**(சைவபோசனம்)**

**தங்கி நின்று வேலை செய்யக்கூடிய குடிப்பழக்கம் அற்றவர் உடன் தேவை. சம்பளம் நேரில்.** (943)

**சயிராம்**
**101,பலாலி வீதி, யாழ்ப்பாணம்**



## டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=

**தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088**

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள் (336)


# காணவில்லை



## சுப்பையா பாலச்சந்திரன்

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா பாலச்சந்திரன் கடந்த 15.06.2015 கிளிநொச்சிக்கு வந்திருந்த வேளை காணாமற் போயுள்ளார். காணாமற் போகும் போது பிறவுண் கலர் சேட், கறுப்பு சோட்ஸ் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 077 670 2070, 077 915 2563**


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 RC<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில் டென்மார்க்<br>தொ.இ: B/4687 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 79 செவ் 8 இல்<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: LLB/ சட்டத்தரணி<br>தொ.இ: G/1501 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: IT பொறியியலாளர் மலேசியா<br>தொ.இ: B/4690 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 21 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA/ கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/1505 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4691 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 48<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1506 |
| பிறப்பு: 1985 RC<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22 3/4 செவ் இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4693 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 35<br>உயரம்: 4'5"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1507 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போரால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நினைவுகளை அடையாளப்படுத்தல் வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இனங்களுக்கிடையே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவுகள் அடையாளப்படுத்தப்படவேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தெரிவித்துள்ளார்.**



சுட்டுக்கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலைக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று காலை 9 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ்மக்கள் கடந்த காலங்களில் மிகப்பாரியளவான கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் முகம் கொடுத்து வந்துள்ளனர்.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட மக்களை யுத்தம் முடிவுற்று அடுத்து வந்த வருடங்களில் அவர்களது உறவினர்கள் வெளிப்படையாக நினைவு கூரமுடியாத நிலையே கடந்த காலங்களில் காணப்பட்டது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் சமாதானத்தை பேணுதல் என்பது அவசியமாகின்ற போதிலும் இதனை கடந்த கால மகிந்த தலைமையிலான அரசு செய்யவில்லை. மாறாக மேலும் இனவாதத்தை வளர்த்தே வந்துள்ளது.

சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்ற விடயத்தில் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள், இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதென்பது கட்டாயமாகின்றது.

யுத்தம் முடிவுற்ற ஏனைய நாடுகளில் இந்த நினைவு கூரலினை குறியீட்டு முறையிலான ஆற்றுப்படுத்தல் (Sympolic reparation) எனும் முறையில் முன்னெடுத்து வருகின்றனர்.

இறந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்கள் நினைவாக நினைவுச் சின்னங்களை அமைத்து நினைவுகூரல்கள் நடைபெறுவது வழமை.

இவ்வாறான நிலையில் நினைவு கூரல் என்பது தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகவுள்ளது.

எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் கொடூரங்கள் என்பவை மறக்கடிக்கப்படாமல் இருப்பதற்கு இவ்வாறான நினைவுத் தூபிகள் மூலமான நினைவுகள் அவசியமாகின்றன.

இந்த நிலையிலேயே சுட்டுக்கொல்லப்பட்ட அமரர் ரவிராஜின் நினைவுத்தூபிக்கு அடிக்கல் நாட்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளத்திலுள்ள வீரபத்திரர் கோவில் மற்றும் வீடுகளில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டுப் போயுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3-19)




## இயக்குநர் சபை தெரிவு

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

த.சந்திரதாஸ் தலைவராகவும் நா.சண்முகசுந்தரம் உபதலைவராகவும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக யோ.கென்விக்டர், ஆ.அருணாசலம், வி.குலராஜசிங்கம், செ.தர்சன், த.வசந்தரூபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3-19)

## அலங்கார உற்சவம்

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசுவாமி (முனிகோவில்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 8 ஆம் திகதி மதியம் சங்காபிஷேக விழாவும் மாலை திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறும். (இ-3)

## பொதுக்கூட்டம்

வடஅல்வாய் நக்கீரன் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 24ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குச்சம் ஞான வைரவர் தேவஸ்தானம் அருகாமையில் நடைபெறவுள்ளது.

மு.நவநீதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

முன்னிலை சோசலிசக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலக அங்குரார்ப்பணம் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஆரியகுளம் ஸ்ரான்லி வீதி 412 ஆம் இலக்கம் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது .

இதேவேளை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.நூலக உணவக மண்டபத்தில் இடதுசாரிய நடவடிக்கைகள் தொடர்பிலான நூல் வெளியீடும் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது. (இ-4)

# விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள வீதி நடைமுறைகளை பின்பற்றுங்கள்

## பொலிஸ் அதிகாரி அறிவுரை

(கரணவாய்)

வீதிகளில் பயணிப்போர் வீதி நடைமுறைகளைப் பின்பற்றினால் விபத்துக்கள் இடம்பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் என காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் போக்குவரத்து விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். குறிப்பாக மோட்டார் சைக்கிளில் செல் வோர் மோட்டார் வாகன சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

இரண்டு உருளிகள் கொண்ட மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் ஒருவருக்கு மேற்பட்டோரை ஏற்றிச் செல்லக் கூடாது. அனைவரும் பாதுகாப்புத் தலைக்கவசம் அணிய வேண்டும்.

இந்த நடைமுறைகளை சரியாகப் பின்பற்றினால் வீதி விபத்துக்களையும் இதனால் ஏற்படும் பல அசௌகரியங்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, பிரதேச சபைச் செயலாளர் க.கனகதுரை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (இ-3-60)

## பரிசளிப்பு தினம்

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு தினம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள் ளவுள்ளார். (இ-3)

## தாக்கியநபருக்கு விளக்கமறியல்

கரவெட்டி ஜே/363 கிராம சேவகரை தாக்கிய சம்பவம் தொடர்பாக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபரை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-3)

# ஆசிரியரைத் தாக்கியவர்கள் கைதாகி விளக்கமறியலில்

ஆசிரியர் ஒருவருக்கு பணம் கொடுத்து அதனை மீளப்பெறுவது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றில் சிவில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பணம் கொடுத்தவர்கள் ஆசிரியரை தாக்கியதனால் அவர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் வேறு ஒரு இளைஞருமே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


மேற்படி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.


இதன்போதே பிரஸ்தாப நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். பிரஸ்தாப ஆசிரியருக்கு வழங்கப்பட்ட 50 இலட்சம் ரூபாவை மீள கொடுக்கத் தவறியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டு ள்ளது. (இ-3)

# அமைச்சர் சுவாமிநாதனுடன் யாழில் நாளை விசேடசந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து மத கலாசார மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடனான சந்திப்பொன்றை யாழ்.முகாமையாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது. இச்சந்திப்பு நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்களை இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)





கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா அண்மையில் தடங்கன் புளியடி முருகமூர்த்தி மண்டபத்தில் முகாமையாளர் அ.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமராட்சிப் பகுதியில் 58 மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டது.

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# இரணைமடு குளத்திலிருந்து யாழிற்கு குடிநீர் விநியோகம்

## ஊடகவியலாளர்கள், விவசாய சம்மேளனங்கள் ஆகியோருக்கு நடைபெற்றது கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு செல்லுதல் தொடர்பாக முன்னாள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் யாழ்ப்பாணத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கட்டடத்தை திறந்து வைத்து கடந்த 22 ஆம் திகதி கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார்.



இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகத்தை இரு வருட காலப்பகுதியினுள் செயற்படுத்துமாறு ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கு அழுத்தம் கொடுத்திருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியானது கிளிநொச்சியிலுள்ள இரணைமடு குளம் தொடர்பான விவசாயிகள் சம்மேளனத்திற்கும் ஏனைய விவசாய அமைப்புக்களுக்கும் விவசாயிகளுக்கும் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கண்டனம் தெரிவித்து இதற்கான அறிக்கையை ஜனாதிபதி பிரதமர் அமைச்சருக்கு அனுப்பி வைப்பதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்காகவும் இதனை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதற்கும் நேற்று பிற்பகல் 2 மணியளவில் கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் விவசாயிகள் சம்மேளனத்தலைவர் வி.நடராசா தலைமையில் ஊடகவியலாளர்களுக்கும் விவசாயிகள் சம்மேளனங்களுக்குமான கூட்டம் நடைபெற்றது.


இதன்போது சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகனால் அனுப்பி வைக்கப்படவுள்ள கண்டன அறிக்கையை வாசித்து காட்டியதுடன் சம்மேளனப் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோரின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் அதிபரும் இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்கும் திட்டம் தொடர்பாக வடக்கு மாகாண சபையினரால் நியமிக்கப்பட்ட துறைசார் ஆலோசனைக்குழு உறுப்பினருமான மா.கணபதிப்பிள்ளை இத்திட்டம் தொடர்பில் நடைபெற்ற விடயங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

அமைச்சரினால் கூறப்பட்ட கருத்து தன்னிச்சையாக கூறப்பட்டதா அல்லது குழப்ப நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதா என்று தெரியவில்லை யெனவும் யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் எதிரானவர்கள் அல்லர் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமெனவும் வடக்கு மாகாண அரசு நிபுணர் குழுவினரை நியமித்து ஆராய்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கியினரும் அதனை ஏற்றுக் கொண்டு கிளிநொச்சி இரணைமடு குளத்தை அபிவிருத்தி செய்வதற்கும் யாழ்ப்பாணத்திற்கான நீர் விநியோகத்திற்கான திட்டத்தை முன்மொழிந்த நிலையிலும் இரு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையிலும் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட கருத்து மிகவும் கண்டனத்திற்குரியது எனவும் தெரிவித்தா.

இந்நிகழ்விற்கு இம்மாவட்டத்தில் உள்ள விவசாய சம்மேளனங்கள் விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டு தமது வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கின்ற இரணைமடு குளத்தின் வேலைத்திட்டங்களை சிறந்தமுறையில் பூரணப்படுத்த வேண்டுமெனவும் வடக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமெனவும் தமது கருத்துக்களை தெரிவித்தனர். (2-254)



கிளிநொச்சி மாவட்ட சைவமங்கையர் கழகத்தின் சைவசமய கலைத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

## சிவில் குழுக்களை இயங்க வைப்பதன்மூலம் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தமுடியும்

### சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்கள்தோறும் சிவில்குழுக்கள் அமைக்கப்பட்டு சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்வதாக பொலிஸ் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் கடந்த மாதங்களில் கிராமங்கள்தோறும் சிவில் குழுக்கள் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் சிவில்குழுக்களுக் கான அதிகாரபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதற்கு இதுவரை அனுமதிஎதுவும்வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அநேகமான கிராமங்களில் சட்டவிரோத மணல் அகழ்வுகள்,நடமாடும் மதுபான விற்பனைகள் மற்றும் சமூகசீர்கேடுகள் தொடர்பான நடவடிக்கைகள் கூடுதலாக நடைபெற்று வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சிவில்குழுக்களை இயக்குவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகளை ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்தலாம்.

குறிப்பாக இந்த சிவில் குழுக்கள் அமைக்கும் போது இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களும் உள்வாங்கப்படாமல் சிறந்த முறையில் செயற்படக் கூடிய சிவில் குழுக்களை அமைத்து அவற்றிற்கான அதிகாரங்களை உடனடியாக வழங்கி பொதுமக்களின் நலனுக்கு உதவவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். எனவே கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பகுதியினர் இந்தவிடயத்தில் கூடிய கவனமெடுத்து விரைவில் ஆவனசெய்ய வேண்டுமென வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (2-254)

## போதைப்பொருள் பாவனை சாக்கடை கடலுக்குள் மாணவர்கள் அறியாமல் விழுத்தப்படுகின்றனர்

### வைத்தியகலாநிதி சிவமோகன் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

எமது தமிழர் பிரதேசத்தில் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்தி தேசத்தை வளம் மிக்கதொரு சமுதாயமாக மாற்றுவதற்கு மாணவர்களும் இளைஞர்களும் முன்வரவேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மதுஒழிப்பு நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கவனயீர்ப்பு ஊர்வலத்தில் அவர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன்று நம் தமிழர் தேசத்தில் பெரும்பாலான மாணவர்களும், இளைஞர்களும் மதுபாவனைக்கு அடிமையாகி கலாசார சீரழிவுகளையும், கல்வி விழுமியங்களையும் சிதைக்கும் நடவடிக்கைகளை செய்வதற்கு தூண்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு இராணுவ புலனாய்வாளர்களும் மாணவர்களையும், இளைஞர்களையும் வேண்டுமென்றே மது பாவனைக்கு அடிமையாக்கி வருகின்றனர்.

எனவே இன்று மது ஒழிப்பு நாளை முன்னிட்டு நடைபெறும் கவனயீர்ப்பு ஊர்வலத்தினூடாக எமது மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் மது பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி எமது தமிழர் தேசத்தில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்தி எமது தமிழர் தேசத்தை வளம் மிக்கதொரு சமுதாயமாக மாற்றுவதற்கு மாணவர்களும், இளைஞர்களும் முன்வரவேண்டும்.

போதைப்பொருள் பாவனை எனும் சாக்கடை கடலுக்குள் மாணவர்கள் தம்மை அறியாமலேயே விழுத்தப்படுகின்றனர். போதைவஸ்து வியாபாரிகள் தமது வியாபாரத்துக்கான இலகு களமாக பாடசாலை மாணவர்களை பாவிக்கிறார்கள்.

எனவே மாணவர்கள் விழிப்புணர்வுடன் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். மாணவர்களே எதிர்கால சந்ததியின் சொத்து.

எனவே அவர்களை களங்கமற்றவர்களாக வளர்க்க வேண்டிய பொறுப்பு எமது இன்றைய சமுதாயத்தின் சவாலாக மாறியுள்ளது என அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் பிடிக்குள் 160 கோடி மக்கள்

## உலக நிலவரம் குறித்து யுனிசெப் அறிக்கை

**உலகம் முழுவதும் 160 கோடி மக்கள் வறுமையில் சிக்கி வாடுகின்றனர். இந்தியாவில் மட்டும் 44 கோடி பேர் வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்பதாக யுனிசெப் ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகம் முழுவதும் நல்ல குடிநீர் கிடைக்காமல், வயிற்றுப் போக்கு, வாந்தி போன்ற பிரச்சினைகளால் 160 கோடி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கி தவித்து வருகின்றனர்.

இதில் 44 கோடி பேர் இந்தியாவில் குறிப்பாக பீகார், ஜார்க்கண்ட், ம.பி., உ.பி., சட்டீஸ்கர், ஒடிசா, ராஜஸ்தான், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் வசிக்கின்றனர்.

தெற்கு ஆசியாவிலேயே மிகவும் ஏழ்மையான பகுதி பீகார் மாநிலம் என்றும் தெரியவந்துள்ளது.

எனினும் இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு, இமாச்சல் பிரதேஷ், பஞ்சாப், மிசோராம், கோவா மற்றும் டில்லி ஆகிய மாநிலங்களில் வறுமையில் வாடுவோர் குறைவாக இருக்கிறார்களாம். தெற்கு ஆசிய நாடுகளில் ஆப்கானிஸ்தானில் தான், வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

இதற்கு அடுத்த இடத்தில் இந்தியா, வங்கதேசம், பாகிஸ் தான், நேபாளம், பூடான்மற்றும் இலங்கை ஆகியவை உள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 30 வருடங்களின் பின்னர் தாயைக் கண்டுபிடித்த பெண்



இலங்கையில் பிறந்து நெதர்லாந்தைச் சேர்ந்த தம்பதிக்கு தத்துக்கொடுக்கப்பட்ட பெண்ணொருவர் அவரது தாயை தேடிக் கண்டுபிடித்த சம்பவமொன்று சந்தலங்காவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தற்போது 30 வயதாகும் அப்பெண் நெதர்லாந்து நாட்டில் பொறியியலாளராக இருப்பவரென தெரிவிக்கப்படுகின்றது.

இவர் இரட்டைக் குழந்தைகளில் ஒருவர் எனவும் அவரும் அவரது சகோதரியும் 1985-03-04 அன்று சந்தலங்கா வைத்தியசாலையில் பிறந்ததாகவும் தெரியவருகின்றது.

நிமலாவதி என்ற அவரது தாயாரால் இரண்டு குழந்தைகளையும் சுமார் 2 1/2 மாதங்கள் வரையே வளர்க்க முடிந்துள்ளது.

பொருளாதார சிக்கலால் தவித்த அவர் அக்காலப்பகுதியில் இலங்கை வந்த நெதர்லாந்து தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகளையும் தத்துக் கொடுத்துள்ளார்.

பின்னர் இருவரில் ஒருவர் அங்கு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கால ஓட்டத்தில் நெதர்லாந்து தம்பதியினர், தமது வளர்ப்பு மகளிடம் நிஜ பெற்றோர் தொடர்பில் தெரிவித்துள்ளதுடன், அவரைப் பார்த்துவிட்டு திரும்பும்படியும் கோரியுள்ளனர்.

ஆவணங்கள் சிலவற்றுடன் தனது தாயை தேடி இலங்கை வந்துள்ள அப் பெண் ஒருவாறு தனது தாயைக் கண்டுபிடித்துள்ளார்.

இதன்போது அப்பெண்ணின் தாயார் மட்டுமன்றி பிரதேசவாசிகளும் இக்காட்சியைக் கண்டு கண்ணீர் சிந்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்று கடந்த வருடம், பல ஆண்டுகளுக்கு முன் பிரித்தானிய பிரஜை தத்தெடுத்த மலையக குழந்தையும் பல வருடங்களின பின்னர் வந்து தனது பெற்றோரை சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்துக்கோயில் சிலை உடைப்பு

### திட்டமிட்ட செயலென அரியம் எம்.பி.காட்டம்

மகிந்த காலத்திலும், மைத்திரி காலத்திலும் வணக்கஸ்தலங்கள் குறிப்பாக இந்து ஆலயங்கள் திட்டமிட்டு உடைக்கப்பட்டதும், சூறையாடப்பட்டதும் தொடர்ந்தவண்ணமே உள்ளது.

அதனொரு வெளிப்பாடே கல்முனையில் மிகவும் பழைமை வாய்ந்த ஆலய மாகத்திகளும் தரவைப்பிள்ளையார் ஆலயத்தின் முகப்பில் உள்ள சிலைகள் உடைக்கப்பட்டிருப்பது நன்கு திட்டமிட்ட செயற்பாட்டின் ஒரு அங்கமாகும்.

சிலையை உடைத்தவரை பொதுமக்களின் உதவியுடன் பொலிசார் கைது செய்திருக்கின்றார்கள். ஆனால் தற்போது அவர் ஒரு மனநோயாளி என சோடிக்கப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கீழ்தரமான செயற்பாடுகளை செய்து விட்டு குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் செயற்பாடுகளை யாரும் செய்ய முன்வரக்கூடாது.

தேர்தல் காலம் என்பதனால் தமிழ், முஸ்லிம் உறவில் குரோதத்தன்மையினையும் இனவிரிசலை ஏற்படுத்துவதற்காக குறிப்பிட்டவர்களின் திட்டமிட்ட செயற்பாட்டின் வடிவமாகவே இருக்கக்கூடும் என்ற எண்ணமும் தோன்றுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் பொலிஸார் இந்த விடயத்தில் காத்திரமாக செயற்பட்டு குற்றம் செய்தவர்களுக்கான தண்டனையை பெற்றுக் கொடுப்பதுடன், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாத வண்ணம் பார்த்து செயற்பட வேண்டும்.

த.தே.கூட்டமைப்பானது இவ்வாறான மிகவும் மோசமான செயற்பாட்டிற்கு எப்போதும் எதிரானவர்களே.

எந்த மதத்தினை சார்ந்த வணக்கஸ்தலங்களாக இருந்தாலும் அவை பாதுகாக்கப்பட வேண்டியது அனைவரது பொறுப்புமாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



அளவெட்டியைச் சேர்ந்த சேனாதிராஜா பிறேம்குமார் அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து இவ்வாண்டிற்கான விவசாயப் பிரஜை விருது பெற்ற போது ...

## மெர்ஸ் வைரஸ் தாக்கத்தினால் பலி எண்ணிக்கை 31 ஆக அதிகரிப்பு

தென்கொரியாவில் புதிதாக ஒருவருக்கு மெர்ஸ் நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நோய் பாதிப்பால் மேலும் இருவர் பலியாகிய நிலையில் பலி எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கடந்த மே 20-ம் திகதி சவுதி அரேபியாவிலிருந்து தென் கொரியா திரும்பிய நபருக்கு முதன் முதலில் "மெர்ஸ்" (மத்திய கிழக்கு நாடுகளில் பரவிய மூச்சுத்திணறல் நோய்) தாக்கியது கண்டறியப்பட்டது. இதனை அடுத்து அந்நாட்டில் நோயின் பாதிப்பு தீவிரமடைந்தது.

தற்போதைய நிலையில், 181 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பலி எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், நோய் பாதிப்பினால் தனிமையில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் 3000-ஐ எட்டியுள்ளது. (இ-7)





நெல்லியடி தடங்கன் புளியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது...
(படம்: கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலிகள் குறித்த அமெரிக்காவின் அறிக்கை

# போர்க்குற்றச் செயல்களுக்கு துணை நிற்பதற்குச்சமமாகும்

## அமெரிக்கா மீது பழ.நெடுமாறன் பாய்ச்சல்

(கொழும்பு)

**சிங்கள அரசின் அட்டூழியங்களை தட்டிக் கேட்காத அமெரிக்கா இலங்கையில் விடுதலைப் புலிகள் இன்னமும் செயற்படுகிறார்கள் எனக் கூறுவது சிங்கள அரசின் போர்க்குற்றங்களுக்கு துணை நிற்பதற்குச் சமம். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**



புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருமண விழாவில் பங்கேற்க வந்த அவர் ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுமார் 5 இலட்சம் ஈழத்தமிழர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக இருக்கின்றனர். சொந்த ஊருக்கோ, சொந்த வீட்டுக்கோ திரும்பிச் செல்ல முடியாத நிலை நீடிக்கிறது. அவர்களது விவசாய நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. மேலும், சிங்கள அரசு கைது செய்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கதிஎன்ன என்பதே தெரியவில்லை. 90 ஆயிரம் இளம் பெண்கள்கணவனை இழந்தவர்களாகி வாழ முடியாமல் தவித்து வருகின்றனர்.

சிங்கள அரசின் இந்த அட்டூழியங்களை தட்டிக் கேட்காத அமெரிக்கா இலங்கையில் விடுதலைப் புலிகள் இன்னமும் செயற்படுகிறார்கள் எனக் கூறுவது சிங்கள அரசின் போர்க்குற்றங்களுக்கு துணை நிற்பதற்குச்சமம். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஐ.நா. விசாரணைக் குழுவிடம் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். அக்குழுவானது அறிக்கை சமர்ப்பிப்பதை 6 மாதங்களுக்கு அமெரிக்கா ஒத்தி வைத்துள்ளது. அந்த அறிக்கை தாமதிக்காமல் உடனே வெளியிட்டு சர்வதேச நீதி விசாரணைக்கு இலங்கையை உட்படுத்த வேண்டும் என பழ.நெடுமாறன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவின் ஒத்துழைப்பு அவசியமே

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒத்துழைப்பு அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றிவரும் எனக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவு அவசியம்.

அவ்வாறு ஆதரவளிக்க முடியாவிட்டால் மகிந்த அரசியலை விட்டு விலகிக்கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தனது பொறுப்புக்களை உதாசீனம் செய்ய மாட்டார் என நம்புகின்றேன்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்து செயற்படும்.

கட்சியை ஒன்றிணையச் செய்வதே எனது அடுத்தகட்ட இலக்கு என நிமால் சிறிபால டி சில்வா சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவின் தலைமையில் அநுராதபுரத்தில் கூட்டம்

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள மகிந்த ஆதரவு கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவார் என தெரிவிக்கப்படுகிறது. "ஈட்டிய வெற்றியை பாதுகாப்போம், மகிந்தவுடன் எழுவோம்" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டத் தொடரின் அடுத்த கூட்டம் அநுராதபுரத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் எனவும், கூட்டத்திற்கு மகிந்த தலைமை தாங்குவார் எனவும் சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் சுமார் நூறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வாரம் முதல் இரண்டு வாரங்களில் கூட்டம் நடத்தப்படவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் நோக்கில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்திற்கு சென்றிருந்த மகிந்த, மேடையில் ஏறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மகிந்த அநுராதபுரம் கூட்டத்தின் மேடையில் ஏறுவார் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# நாமலின் நன்மதிப்பை மேம்படுத்த ஒருகோடி ரூபா அரச பணம் செலவு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ எம்.பியின் நன்மதிப்பை மேம்படுத்துவதற்கு ஒரு கோடி ரூபா அரச பணம் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிணைமுறி மற்றும் செலாவணி ஆணைக்குழுவின் ஊடாக இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது.


இதில் 50 இலட்சம் ரூபா நாமல் ராஜபக்ஷ தலைமை தாங்கிய இளைஞர்களுக்கான நாளை என்ற அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் கோரிக்கைக்கு அமைய மற்றுமொரு 50 இலட்சம் ரூபா பணம் சிலோன் பிரிமியர் ஸ்பொர்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பணம் இவ்வாறு விரயமாக்கப்பட்டுள்ளமை குறித்து நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணைகள் பெருமபாலும் பூர்த்தியாகும் நிலையில் காணப்படுகின்றது.

பணம் வழங்கப்பட்ட விதம், பணம் செலவழிக்கப்பட்ட விதம் என்பன குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது என அசோக அபேசிங்க தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# என்னையும் மதத்தையும் ராஜித அவமதித்துவிட்டார்

## மனம் வெதும்புகிறார் ஹக்கீம்



ஜனாதிபதி கதிரைக்கு ஆசைப்பட்டு நான் மதத்தைக்கூட மாற்றிக் கொள்வேன் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறிய கருத்து என்னையும், நான் பின்பற்றும் மதத்தையும மக்களையும் அவமதிக்கும் செயல் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக ஏற்பட்டுள்ள அரசியல் நிலவரம் எனும் தலைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் பத்தரமுல்ல வோட்டர்ஸஎஜ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவையில் எமது குரல்கள் அடக்கப்படுகின்றன என்று நான் பாராளுமன்றத்தில் கூறிய கருத்தை அமைச்சர் ராஜித சேனாரத்ன தன்னைச் சுற்றி பேசியதாக கருத்திற் கொண்டு செய்தியாளர் மாநாட்டில் என்னைப்பற்றி மிக ஆவேசமாக கூறியிருந்தார். என்றாலும் அமைச்சரின் கூற்றுக் குறித்து நான் அலட்டிக்கொள்ளவில்லை. அரசியலில்இவ்வாறு ஆளுக்காள்குறை கூறிக் கொள்வது வழமையாகும்.

இருந்தபோதும் ஜனாதிபதி கதிரை எனக்கு கிடைப்பதாக இருந்தால் நான் மதத்தைக்கூட மாற்றிக் கொள்ளலாம் என அவர் கூறியிருப்பது என்னையும் நான் பின்பறறும் மதத்தையும் எனது மக்களையும் அவமதிக்கும் வகையில் இருப்பதையிட்டு நான் கவலைப்படுகின்றேன்.

மேலும் அமைச்சரவை பேச்சாளர் என்ற அந்தஸ்தில் இருக்கின்ற ஒருவர் இவ்வளவு தூரம் பொறுப்புணர்ச்சியில்லாமல் ஆவேசப்படுவது பொருத்தமில்லாததாகும்.

இதற்கு முன்பும் இவர் முன்னுக்குப்பின் முரணாக பேசி பொறுப்பில்லாத அமைச்சராக இருப்பதுடன் அமைச்சரவையின் பேச்சாளர் என்ற அந்தஸ்தையும் இழந்து வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## பாடும் பறவைகள்

“கையிலே என்ன வைத்திருக்கிறீர்கள்?”

“பஞ்சவர்ணக்கிளி சேர்... வாங்கிக் கொண்டு போகிறேன்... வளர்ப்பதற்காக....!”

“கிளி வளர்ப்பதிலே ஒரு ஆர்வமா உங்களுக்கு?”

“பொதுவாக பறவைகள்... என்றாலே எனக்கு அதிக விருப்பம்!”

“அப்படியா?”

“ஆமாம்....உங்களுக்குத் தெரியுமா....பறவைகள் பாடும்! அது இசைத்தட்டாகக் கூட வெளிவந்துள்ளது.....!”“எங்கே...?”

“ஹங்கேரியிலே ஒரு பறவையியல் நிபுணர்.... அவர் முப்பது வருடங்களாக சேகரித்த பல்வேறு பறவைகளின் குரல்களை- பாடல்களை பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டிருக்கின்றார். 1987 ஆம் ஆண்டிலே இந்த இசைத்தட்டு வெளிவந்துள்ளது”“ஆச்சரியமாகவுள்ளதே...!”

“பறவைகளின் குரல்களையும் பாடல்களையும் அவர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றார்... மனிதர்களைப் போலவே பறவைகளும் தங்கள் இயல்பான குரலிலேயிருந்து பல மடங்கு உச்சஸ்தாயிக் குரலிலேயும் ஏற்ற இறக்கத்துடனும் பாடுகின்றன...! 2 ஆயிரத்து 500 விதவிதமான பறவைகளின் குரலையும் பாடலையும் அவர் பதிவு செய்து பாதுகாத்து வைத்துள்ளார்.!”

“இவைகளையெல்லாம் கேள்விப்படுகின்ற பொழுது எனக்கும் கூட பாடத்தான் தோன்றுகிறது!”

“கவலைப்படாதீர்கள்...கற்றுத் தருகின்றேன்...!”

“அப்படியென்றால்...உங்களுக்கும்...?”

“ஆமாம்...ஏற்கனவே எனக்கும் ஓரளவிற்கு சங்கீத ஞானம் உண்டு. வீணை வாசிப்பேன்...அது தெரியுமா உங்களுக்கு?”

“ஆமாம். இந்த நிமிடமே கூட உங்களுக்கு முன்னால் என்னால் வீணை வாசித்துக் காட்ட முடியும்!” “எப்படி முடியும்?”

ஒருகாகிதத்திலே வீணை என்று எழுதிக் கொடுங்கள்... அதனை வாசித்துக் காட்டுகின்றேன்!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபாடபுரம் பாண்டிய மன்னர்கள் அமைத்த சொர்க்க பூமி

இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா, இலங்கை, மற்றும் கிழக்கில் உள்ள சில சிறு, சிறு தீவுகளையெல்லாம் இணைத்தவாறு இருந்த ஒரு பிரம்மாண்ட நிலப்பரப்பு தான் "குமரிக்கண்டம்.

ஏழுதெங்க நாடு, ஏழுமதுரை நாடு, ஏழுமுன்பலை நாடு, ஏழுபின்பலை நாடு, ஏழுகுன்ற நாடு, ஏழுகுனக்கரை நாடு, ஏழுகுரும்பனை நாடு என இந்நிலப் பரப்பில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்துள்ளன. பறுளி, குமரி என்ற இரண்டு மாபெரும் ஆறுகள் ஓடியுள்ளன!

குமரிக்கொடு, மணிமலை என இரண்டு மலைகள் இருந்துள்ளன! தென்மதுரை, கபாடபுரம், முத்தூர் என பிரம்மாண்டமான மூன்று நகரங்கள் இருந்தன.


பகுதியாக திருச்செந்தூரின் கடற்பகுதி முன்னாளில் விளங்கியது.

## இராமாயணத்தில் கபாடபுரம

சீதையை நோக்கி தென்திசையை தேடிச்சேல்லும் வானரப்படைப்பிரிவிடம் சுக்கிரீவன் பின்வருமாறு கூறுகிறான்.

"நீங்கள் தென்திசை நோக்கிச் செல்லும் போது தங்கம், முத்து, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மதில்களை கொண்ட ஒரு நகரத்தை காண்பீர்கள் அந்த பேரரசான பாண்டியனின் கபாடபுரத்திலும் சீதையை தேடிப்பாருங்கள்!"—இராமாயணம், கிசுகிந்தாகாண்டம்(4.41.18)

கபாடபுரம் பற்றி வால்மீகி, தான் இயற்றிய இராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்தில் இலங்கை நோக்கிச்செல்ல இருந்த அனுமனுக்கு சில அறிவுரைகளைக் கூறும் போது,




இறையனார் அகப்பொருளில் பின்வரும் குறிப்புகளின்படி கபாடபுரத்தில் சங்கம் அரங்கேறியதாக கூறப்படுகிறது.

குறிப்பு: இடைச்சங்கம்
சங்கம் இருந்த இடம்: கபாடபுரம்
சங்கம் நிலவிய ஆண்டுகள்: 3700 (37 பெருக்கல் 100)
சங்கத்தில் இருந்த புலவர்கள்: அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை
இத் தொடக்கத்தார் புலவர்களின் எண்ணிக்கை: 3700
பாடிய புலவர்களின் எண்ணிக்கை: 59
பாடப்பட்ட நூல்கள்: கலி, குருகு, வெண்டாளி, வியாழமாரை அகவல்
இத்தொடக்கத்தன சங்கம் பேணிய அரசர்கள்:வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை
சங்கம் பேணிய அரசர்களின் எண்ணிக்கை: 59
கவியரங்கு ஏறிய புலவர் எண்ணிக்கை: 5
அவர்கள் பயன்படுத்திய இலக்கண நூல்: அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம்



அதிலே கபாடபுரம் என்பது பாண்டியர்களின்' இடைச்சங்ககால தலைநகரம் என்று கருதப்படும் நகரமாகும்.

கபாடபுரம் இருந்ததற்கான சான்றுகள்:

ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பாண்டிய மன்னர்களின் இரண்டாம் தமிழ்ச்சங்கம் செயல்பட்ட கபாடபுரம் என்ற தமிழூர் திருச்செந்தூர் ஆகும்.

கபாடம் என்றால் முத்து. உலகம் போற்றிய ஒளிவிடும் முத்து விளைந்த


'ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஸ்யதம்

முக்தா கபாடம் பாண்ட்யானாம் கதா திருக்யசவானரா'

என்று கூறுகிறார்.

'தமிழ் நாட்டில் தென்பாண்டி நாடான மதுரையைக் கடந்து நீ செல்லும்போது முத்லில் ஒரு ஊர் வரும். அங்கு நீ இறங்கி விடாதே. இறங்கி விட்டால் அந்த ஊரை விட்டு நீ இலங்கை செல்ல, உன் மனம் விரும்பாது. ஏனெனில் அங்குள்ள நாகரீகமும் பண்பாடும் உன்னை இழுக்கும் எனவே, அங்குநிற்காமல் தொடர்ந்து போ. அதற்கு அடுத்தாற்போல இலங்கைவரும்' இராமாயணக் காலத்தில் கபாடபுரம் இருந்தது என்பதும் உறுதியாகிறது.

முதலில் தமிழ்ச்சங்கம் குமரி நாட்டில் தென் மதுரையில் செயல்பட்டது. கடல் கோளினால் (சுனாமி) குமரி நாடு அழியவே வடதிசை நோக்கிக் குடி பெயர்ந்தனர். குமரியாற்றிற்கும் தாமிர பரணிக்கு மிடையே உள்ள கபாடபுரத்தைத் தலை



நகராகக் கொண்டு இரண்டாம் தழிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. பாண்டிய மன்னருள் அப்பேறு பெற்றவன் வெண்தேர்ச் செழியன் ஆவான். அவனைத் தொடர்ந்து 59 பாண்டிய மன்னர்கள் ஆண்டனர். அந்நாளிலும் கடல் கோள்(சுனாமி) ஏற்படவே, கடைசி அரசனான முடத் திருமாறபாண்டியன் தப்பிப் பிழைத்து தற்போதுள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்டு கடைச்சங்கத்தைத் தோற்றுவித்தான். இ்.து தமிழறிஞர்களின் கூற்று ஆகும்.

இரண்டாம் தமழ்ச்சங்கத்தின் காலம் கி.மு.6804 முதல் கி.மு.3105 வரை ஆகும். 3700 ஆண்டுகள் கபாடபுரம் பொருணை (தாமிரபரணி) ஆற்றின் முகத்துவாரத்தில் (அலைவாய்)இருந்தது. இச்சங்கத்தில் அகத்தியர், குன்றம் எறிந்த குமரவேள் (முருகன்) ஆகியோர் புலவர்களாக இருந்தனர். 73 புலவர்கள் கவி பாடி அரங்கேற்றினர். கபாடபுரம் என்றபெயர் காலவெள்ளத்தில் வழக்கொழிந்து போனது. திருச்செந்தூரில் காணப்படும் கல்வெட்டொன்று, 'திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலம்' என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறது. இப்பெயரும் வழக்கொழிந்து போயிற்று. சதுர் வேதம் என்றால் நான்கு வேதங்களாகும்.நான்கு வேதங்களும் இடையறாது ஒலிக்கும் ஊர் என்றும், அவ் வேதங்களை ஓதும் அந்தணர்களுக்கு (வேதியர்கள்) தானமாகக் கொடுக்கப் பெற்ற ஊர் என்றும் பொருள்படும். வேதியர்களான திரிசுதந்திரர்கள் 2000 மக்கள் திருச் செந்தூரிலிருந்து முருகனுக்குத் தொண்டுசெய்து வந்தனர். இன்றும் அவர்களது வாரிசுகள் உள்ளனர்.

-நன்றி, இணையம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 28.06.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 21

# பாராளுமன்றம் கலைப்பு அடுத்த பிரதமர் யார்?



# மிஸ்ரர் கூல்...




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருநாட்டின் அடுத்த பிரதமர் யார்?

## பாராளுமன்றம் கலைப்பு பொதுத்தேர்தலுக்கு நாடு தயார்





பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இனி பொதுத்தேர்தல். பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் கட்சிகள், வேட்பாளர்கள் தீவிரமாகி விடுவர். இதேநேரம் கலைபட்டுப்போன பாராளுமன்றம் முன்னைய பாராளுமன்றத்தில் இருந்து வித்தியாசமானதெனலாம்.

ஜனாதிபதித் தேர்தலில்









மகிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் இறங்கிப்போட்டியிட, மைத்திரிபால வெற்றி பெற்றதால் பாராளுமன்றத்திலும் மாற்றங்கள் நடக்கலாயிற்று.

பிரதமராக இருந்த டி.எம்.ஜயரட்ன அந்தப் பதவியில் இருந்து இறங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை எடுத்துக்கொண்டார்.

இதேபோல் அமைச்சர்களிலும் மாற்றங்கள். பொருளாதார அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ அமைச்சுப் பதவியை இழந்தது மட்டுமன்றி சிறையிலும் இருக்க வேண்டியதாயிற்று.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் என்ற வரிசையில் ஏனைய முக்கிய அமைச்சுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் பகிர்ந்து கொண்டன.

எனினும் ஜனாதிபதி மைத்திரி பாதுகாப்புத் தவிர்ந்த ஏனைய அமைச்சுக்களைத் தான் வைத்திருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை மாற்ற வேண்டும் என எவரும் கேட்டிலர்.

இங்குதான் சமல் ராஜபக்ஷவின் நல்லகுணமும் நேர்மைத்தன்மையும் வெளிப்படுகிறது.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலின்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பேன் என்று கூறிய மைத்திரிபால சிறிசேன தான்கூறியபடி 19 ஆவது திருத்தச்சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிச் சாதனை படைத்தார்.

தனது அதிகாரத்தைக் குறைப்பதில் அவர் காட்டி நின்ற அக்கறை மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அவரின் உறுதிப் பாட்டைச் சுட்டுவதாகும்.

ஐந்து வருட காலத்தில் இரண்டு ஜனாதிபதிகளைச் சந்தித்த பாராளுமன்ற ஆட்சி என்ற பெருமை மட்டுமன்றி பிரதமருக்கு அதிகாரத்தை வழங்குகின்ற சட்டமூலத்தை நிறைவேற்றிய பெருமையோடும் ஏழாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப்போயிற்று.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தின் மீதான விவாதம், அமைச்சரவைக்குள் இழுபறி என்ற பல்வேறு சிக்கல்கள் மத்தியில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதே ஜனாதிபதி மைத்திரி எடுக்கக்கூடிய ஒரே முடிவாக இருந்தது.

அதேசமயம் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு நிறையவே உண்டு.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்பதில் ஜனாதிபதி மைத்திரி கடும்பிடியாக இருப்பதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷ எடுக்கும் முடிவு என்ன? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல், ஜனவரி 9 ஆம் திகதி ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்பு என்ற ஐந்து மாதத்திற்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக தேசிய அரசு என்பதன் கதை முடிந்து போயிற்று.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்று ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததன்மூலம் தேசிய அரசில் அங்கம் வகித்தவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒருவரையொருவர் தாக்கிப் பிரசாரம் செய்வர் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஜனாதிபதி மைத்திரியைத் தவிர, ஏனையவர்களை ஐக்கிய தேசியக்கட்சி தாக்கவே செய்யும்.

எனினும் அடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி மைத்திரியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ வழங்கவில்லை என்பதால் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளர் யார்? என்ற கேள்வி எழுவது நியாயமே.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்பதில் மாற்றம் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பதிலும் மாற்றுக்கருத்திற்கு இடமில்லாத போதிலும் எந்தக் கட்சியில் போட்டியிடுவார் என்பது கேள்விக்குரியது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவாக இருப்பார் என்று கூறுவதற்குச் சாத்தியமுண்டு.

மகிந்த ராஜபக்ஷவைப் பலமாக எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை ஒரு குடைக்குள் வைத்திருக்கக் கூடிய ஆளுமை சந்திரிகாகுமாரதுங்கவிடமே உண்டு.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட்டு அதில் வெற்றியும் அடைவராயின் சந்திரிகா அம்மையாரின் கதை காலி என்றாகிவிடும்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ எதிர்வரும் பொதுத்தேர்தலில் சந்திரிகா பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு.

ஆக, எட்டாவது பாராளுமன்றத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவா? சந்திரிகா குமாரதுங்கவா? மகிந்த ராஜபக்ஷவா? என்ற கேள்விக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிவரை காத்திருப்பது கட்டாயமானதாகும்.

எது எப்படியாயினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்புச் செய்த போது பிரதமர் வேட்பாளர் பதவிக்கு இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் போட்டியிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் தனது நிலைப்பாடு என்ன? என்பது பற்றி முடிவெடுப்பதில் பல்வேறு சிக்கல்களைச் சந்திப்பார் என்பதும் உண்மை.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவில் திருவிழாவில் பண்டிதர் பரம்லிங்கம் உரையாற்றுகிறார். மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது அவரின் உரைப்பொருள். அடியார் பெருமக்களே! இந்த உலகில் மிகப்பெரியது அறிவு. அறிவு என்றால் என்ன? என்று நீங்கள் இப்போது நினைப்பீர்கள்.

உண்மையைக் கண்டறிவது அறிவு. இதனால்தான் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று வள்ளுவன் கூறினான். விநாயகப் பெருமான் தனது தந்தையையும் தாயையும் வலம்வந்து மாங்கனியைப் பெற்றார். இங்குதான் பிள்ளையாரின் அறிவு முன்னிலைப்படுகிறது.

எந்தக்காரியமாக இருந்தாலும் முதல் வணக்கம் விநாயகருக்குச் செலுத்துவதன் அடிப்படை அறிவை வந்தனம் செய்யவேண்டுமென்பதாகும். எந்தக் காரியமும் வெற்றிபெற வேண்டுமாயின் அந்த விடயம் சார்ந்த அறிவை நாம் பெற்றிருக்க வேண்டும். இதனால்தான் அறிவின் வடிவமாக இருக்கும் விநாயகரை நாம் முதலில் வணங்குகிறோம்.

அன்புக்குரியவர்களே! எங்கள் தமிழினம் அரசியலிலும் பொருளியலிலும் வாழ்வியலிலும் பல்வேறு தோல்விகளைச் சந்தித்து வருகிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் உண்மையை நாம் கண்டறியத் தவறுவதாகும். அரசியல்வாதிகளை நம்பி விடுகிறோம். அவர்கள் எங்களின் அறியாமையைப் பயன்படுத்தி எங்களை ஏமாற்றுகிறார்கள்.

எனவே நாம் இனிமேலாவது அறிவுபூர்வமாக சிந்திப்போம். உண்மையைக் கண்டறிவோம். இந்த உலகில் அதிக நாடுகளில் அகதிகளாக வாழ்கின்ற இனம் இலங்கைத் தமிழினம் என்று யுனிசெப் அறிக்கை கூறுகிறது. இதை நினைக்கும்போதெல்லாம் இதயம் நொந்து கொள்கிறது. தமிழினத்திற்கு இப்படியொரு நிலை எதற்கு? இப்படிப் பண்டிதரின் உரை நீண்டு சென்று நிறைவு பெறுகிறது.

மாலைப்பொழுது ஆலடி மாநாடு கூடுகின்ற நேரம் மாநாட்டிற்கு கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் வந்திருந்தனர்.

பண்டிதரும் தெய்வீக உரையை முடித்துக்கொண்டு ஆலடிக்கு வந்து சேர்ந்தார். மாநாடு வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது.

**விதானையார்:** எங்க கங்காணியாரைக் காணவில்லை.

**மூப்பர்:** அவர் இன்றைக்கு கிளிநொச்சி பிரதேச செயலகத்தில ஏதோ அலுவலாம். அங்க போறன் எண்டு சொன்னவர். வர இரண்டு நாள் செல்லும் என்று கூறினார்.

**பண்டிதர்:** வாத்தியார் ஆலடி மாநாட்டிற்கு வந்த கடிதங்கள் தேங்கிக் கிடக்குது. நாங்கள் எங்கட பொதுக் கதையளக் கதைச்சுப் போட்டுப் போறம்.இனி ஆலடி மாநாட்டில குறைந்தது ஒரு கடிதத்தையாவது பார்த்தாக வேணும்.

**வாத்தியார்:** கடிதங்கள் மட்டுமல்ல பண்டிதர் தொலைபேசி, மின்னஞ்சல் என்பவற்றினூடாக ஏகப்பட்ட முறைப்பாடுகள் வந்தவண்ணமுள்ளன. புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பில கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்கள் மே 13 ஆம்' திகதி காலை 7 மணியளவில சாராயம் குடிச்சதாக ஒரு அநாமதேய தொலைபேசிச் செய்தி.

**விதானையார்:** அதென்ன காலை 7 மணிக்கு சாராயம்... எந்தப் பாரில குடிக் கிறது.

**வாத்தியார்:** வசதி வாய்ப்புகள் என்றால் காலை 7 மணிக்கும் பார் திறக்கும்.

**மூப்பர்:** அட சங்கதி அப்படியே! அப்ப சி.ஐ.டிமார் இதுகளத் துருவித் துருவி ஆராய்வினமே.

**வாத்தியார்:** என்னத்த ஆராயுறது. சி.ஐ.டிமாரும் மனிதர்கள் தானே. யாழ்ப்பாணத்தில இருக்கிற சில ஹோட்டல்களில வைச்சு அவயளைக் கவனிச்சா அவயளும் ஆமா சாமி போடுறதுதானே உலக நியதி.

**பண்டிதர்:** வாத்தியார் இந்தக் கதையல விட்டிட்டு மாநாட்டிற்கு வந்த ஒரு கடிதத்தையாவது வாசியுங்கள்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த சிலர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து யாழ்ப்பாண அரச அதிபரிட்ட முறையீடு செய்திருக்கினம். ஆலடி மாநாட்டிலும் இந்தப்பிரச்சினையை எடுக்குமாறு அவர்கள் கேட்டிருக்கினம்.

**விதானையார்:** என்ன பிரச்சினை.

**வாத்தியார்:** சாவகச்சேரி கைத்தொழில்வணிகர் மன்றத்தின்ர கணக்கு வழக்குகளில முறைகேடுகள் இருக்காம். சங்கத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத பள்ளிவாசல் ஒன்றுக்கு மாபிள் பதித்து கண்ணாடி பிற்றிங்கும் செய்து கொடுத்திருக்கினமாம்.

**விதானையார்:** என்ன பள்ளிவாசலுக்கோ? எங்கட கோயில்கள்தான் கண்டபாட்டில செலவு செய்யினம் எண்டால் பள்ளிவாசல்களிலும் செலவுகள் தொடங்கிற்றுதோ

**வாத்தியார்:** இஞ்சபாருங்கோ இருபது பேர் கையொப்பமிட்டு இந்த முறைப்பாட்டை அனுப்பியிருக்கினம். இந்த முறைப்பாடு தொடர்பில எங்கட யாழ். அரச அதிபர் வேதநாயகன் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார். அவர் இதுகளில வலு இறுக்கமாக இருக்கிறவர். எனவே இந்த விடயத்தில எங்கட அரச அதிபர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆலடி மாநாட்டில ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுவம்.

(இப்படி வாத்தியார் கூறும்போது கங்காணியார் ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்)

**மூப்பர்:** அட! இரண்டு நாள் செல்லும் என்று சொன்ன கங்காணியார் போன கையோட வந்திட்டார்.

**கங்காணி:** போன காரியம் உடனடியாக முடிந்து விட்டது. அதால உடன திரும்பிற்றன்.

**விதானையார்:** என்ன அலுவல்

**மூப்பர்:** கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில ஒரு அலுவல். அந்தப் பிரதேச செயலகத்தின்ர செயலர் ஜி.நாகேஸ்வரன் அலுவலகத்தில இருந்து சனங்களின்ர பிரச்சினைகளை கேட்டறிந்து உடனுக்குடன் பொதுமக்களின்ர பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்றார்.

ஒவ்வொரு நாளும் பிரதேச செயலகத்தில ஒரே சனக்கூட்டம். அவ்வளவு பேரையும் அந்தப் பிரதேச செயலர் சந்தித்து அவயளின்ர பிரச்சினையை கேட்டு தீர்வு காண்கிறது என்பது பெரிய பணி.

**பண்டிதர்:** அதிகாரிகள் அலுவலகங்களில குந்தியிருக்க வேணும். அப்பதான் பொது சனம் தங்கட அலுவல்கள சுலபமாகவும் விரைவாகவும் செய்து முடிக்க முடியும்.

நானும் அறிந்தனான். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் அலுவலகத்தில இருந்து பொதுமக்களின் குறைகளை கேட்டு தீர்த்து வைக்கிறார் என்று.

வடக்கு மாகாணத்தில பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில பொதுமக்கள் அதிகம் செல்கின்ற பிரதேச செயலகங்களில கரைச்சி பிரதேச செயலகம் முதன்மையானது.

யுத்த சூழல், மீள்குடியமர்வு, உயிரிழப்பு, சொத்தழிவு, வீட்டுத்திட்டம் என ஏகப்பட்ட பிரச்சினைகள். இவற்றுக்கெல்லாம் தீர்வு காண்கிறது என்பது சாதாரண காரியம் அல்ல. பிரதேச செயலர் ஜி.நாகேஸ்வரன் தொடர்ந்து அலுவலகத்தில் இருந்து பொதுமக்களைச் சந்திக்கிறதால தான் அந்த மக்களின் பிரச்சினைகள் கணிசமாக தீர்க்கப்படுகின்றன.

எப்பவும் குறைகாண்பது என்றில்லாமல் அதிகாரிகளின்ர சேவையையும் நாங்கள் பாராட்ட வேண்டும். அதுதான் தர்மம் .

இப்படி வாத்தியார் கூற பிள்ளையார் கோவில் மணியும் அதனை ஆமோதிப்பது போல ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்கு சென்றனர்.

ஆதித்தன்



## குறை அளப்பு மட்டுமல்ல நல்லதையும் பாராட்ட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெரிய பையன்!

ரோனித் சுப்பிரமணியன் ஏழு வயதை உடைய சிறுவன். அவர்களுடைய வகுப்பில் அவன் உயரம் கூடியவனாகவும் இருந்தான். இது அவனைப் பெருமைகொள்ள வைத்தது. ஆனால், சில பொருட்களை தான்மிகவும்சின்னப்பிள்ளை போல பயன்படுத்தினேன் என்று நினைத்துப் பார்த்பொழுது அவன் கொஞ்சம் வெட்கப்பட்டான். அவனுடைய அம்மா தன்னுடைய கதைகளை அவளின் சினேகிதிகளுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது என அவன் விரும்பினான்.


கடந்த வாரம் அவனது தாயின் பழைய -பாடசாலை நண்பிகள் சிலர் அவளைப் பார்க்க வந்திருந்தனர். அவர்கள் பத்து வருடங்களின் பின்னர் சந்தித்திருந்தார்கள். ரோனித் அப்பொழுதுதான் பாடசாலையிலிந்து திரும்பிக்கொண்டிருந்தான் ஆனால், அவன் தாயார் முட்டாள்தனமான தொனியில் கூறிக் கொண்டிருந்தவற்றை அவன் காதுகள் எடுத்துக்கொண்டன. "உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய ரோனித் ஒரு சின்னப்பிள்ளையைப் போல ஒவ்வொரு பொருளையும், ஒவ்வொன்றையும்சுப்பிரமணியன் குடும்பத்தின் ஒரு அங்கமாகத்தான் பயன்படுத்தினான். அது எப்படியென்றால், அவன் குளிரூட்டியை *வ்பிறிஜ் சுப்பிரமணியன்*, கதவடியில் கால் மிதியின் மீது சுருண்டுகிடக்கும் நாயை *டோக்கி சுப்பிரமணியன்* என்றுதான் அழைத்தான்." அம்மாவின் நண்பிகள் "சோ சுவ் ஈ..ஈ.. ஈ..ஈ..ற்" என்று சொன்னதைக் கேட்டதும் எந்த உந்தலும் இன்றி ரோனித் வீட்டுக்கு வெளியில் ஓடினான். **நான் விரும்புகிறேன், அம்மா இப்படிச் செய்திருக்கக் கூடாது.** ஆயிரந் தடவைகளாக இதை உச்சரித்தான்.

அன்று மாலை தனது நண்பிகள் அவனுக்காகக் கொடுத்துச் சென்ற விளையாட்டுப் பொம்மைகளையும் விளையாட்டுகளையும் தாயார் அவனுக்குக் காட்டினாள். ரோனித் கோபமடைந்தான். "இவை எல்லாம் சின்னப்பிள்ளைகளின் விளைாட்டுப் பொருட்கள். இவை சின்னப்பிளைளைகள் விளையாடும் விளையாட்டுக்கள். நான் இப்பொழுது பெரிய பையன். என்னுடைய *ஹீரோ ஸ்பைடர்மான்*. இந்த வருடம் எனது பிறந்த நாளுக்கு அந்த விளையாட்டுப்பொருட்கள் எனக்குத் தேவை. ஸ்பைடர்மானும் ஸ்பைடர் வலையை உருவாக்கும் ஸ்பிரேயும் தான் அவை. இவ்வாறு அவன் கூறிமுடித்தான்.

"உனக்கு நீண்ட நாட்களாக குட்டிபொம்மை, பெரிய நாய்க்குட்டி பொம்மை எதுவும் விரும்பவில்லையென்று, நீ சொல்கிறாயா?" என்றார் ரோனித்தின் தாயார். "சின்னக் குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் எனக்குத் தேவையில்லை. சின்னப்பிள்ளைகளின் விளையாட்டுப்பொருட்களும் விளையாட்டும் இனி எனக்கு வேண்டாம். நான் ஒரு பெரிய பையன். இவ்வாறு ரோனித் சத்தமாகக் கத்தினான்."

"ஓகே.. ஓகே.. நீ சொல்வது எங்களுக்குக் கேட்கிறது. என்று அவனது பெற்றோர் கூறினார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, ரோனித்தின் பெற்றோர் அவனது எட்டாவது





பிறந்தநாளுக்கு, *ஸ்பைடர்மான்* உடுப்புகளை வாங்கினார்கள். அவர்கள், ஒரு ஸ்பைடர்மான் *ரி சேர்ட்*, *ரௌசர்*, ஒரு பளபளப்பான *ஸ்பைடர்மன்* பொம்மை, கையுறையுடன் கூடிய ஒரு *ஸ்பிறே* போத்தல் என்பவற்றையும் அவர்கள் வாங்கினார்கள்.

"கையுறையை அணிந்து கொண்டு ஸ்பிறேபொத்தானை அழுத்தும்போது, அவை சுவரில் வலைக் கோலத்தை வரையும்." இவ்வாறு ரோனித்தின் தந்தை சொன்னார். ரோனித்துடன் அவனது தந்தையும் ஆச்சரியமடைந்தார். அவர்கள் திரும்பத் திரும்ப ஸ்பிறே செய்து பெரிய வலையமைப்பை உருவாக்கினார்கள். அங்கே ஸ்பைடர் மான் *கேக்கும்* கூட இருந்தது.

பிறந்த நாளுக்கு வந்த நண்பர்கள் போனதும் ரோனித் ஒவ்வொரு பரிசுப் பைகளையும் திறந்தான். "ஆ... ம்..ம்..ம்! "அவன் இப்பொழுது ஒரு பெரிய பையன். அவன் அதிகமான விளையாட்டுப் பொருட்களையும் விளையாட்டுக்களையும் பரிசுப் பொதிகளாகப் பெற்றிருந்தான். அவை யாவும் பெரிய பையனுக்குரியவையாக இருந்தன.

அவற்றில் குறிப்பாக *லெகோ செற்*- பட்டரியில் இயங்கும் ஒரு ரோபோ, ஒரு பளபளப்பான கார் பந்தைய வீடியோ விளையாட்டு, என்பன இருந்தன. அவையனைத்திலும் மிகச் சிறப்பானது ஸ்கேற் போர்ட் . (சறுக்குமரம்)


ரோனித் நித்திரைக்குச் சென்றான். "நீபார் அவன் முடிவெடுத்துவிட்டான். இந்த சின்னக் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களான சின்ன மொம்மைகள், நாய்க்குட்டி பொம்மைகளை அவன் அதிக நாட்களாக விரும்பில்லை."

விரைவாக அவனுடைய தலை தலையணையில் முட்டியது. அவன், ஆழ்ந்த தூக்கத்தில் விழுந்துவிட்டான். இப்பொழுது அவன் தனது சொந்த அறையில் நித்திரையானான். அந்த அறை சூரியமஞ்சள் நிறத்தில் இருந்தது. ஆனால், நேற்றுவரை அவன், பெப்பர் டோக்கியின் (மென்மையான நாய்க் குட்டிபொம்மை) காதைப் பிடித்துக் கொண்டுதான் நித்திரை செய்தான். அந்த மென்மை அவனை எப்பொழுதும் சந்தோசப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால், *ஸ்பைடர் மான்* பொம்மை உலோகத்தினாலானது. அதைத் தொடும்பொழுது மிவும் குளிர்ந்தது. இரவில் ரோனித்தின் கம்பளிப்போர்வை மெத்தையிலிருந்து கீழே விழுந்துவிட்டது. அந்தக் குளிரான ஸ்பைடர்மான் அவனுடன் கதைத்தது. பனி அரக்கர்கள் அவனை துரத்தின. அவை குளிரான பனியிலிருந்தவை. குளிர், அசைய முடியாத அளவுக்கு சிலைபோல உறைய வைத்தது. உண்மையில் அவன் காண்பது கனவு. அவன் அந்த மென்மையான (சூடான) பொம்மைக்காகக் கத்தினான். "பெப்பரைக் காணவில்லை." நித்திரையில் எழுந்து அழுதான்.

அவன் அழும் சத்தம் கேட்டு அவனது தாயர் அவனது அறைக்கு விரைந்து வந்தார். "எனக்கு பெப்பர் (அந்த மென்மையான நாய்க்குட்டி பொம்மை) வேணும். அவன் என்னுடைய நண்பன். பெரிய பையன்களும் இவ்வாறு டொக்கி (பொம்மை) நண்பனை வைத்திருக்கிறார்கள்" என்று அழுதான் ரோனிக். டொக்கி மீண்டும் ரோனித்தின் மெத்தையில் இடம்பிடித்தது. இப்போ ஒவ்வொரு இரவும் கனவுகள் காண்கிறான் ரோனித். அங்கே ஸ்பைடர்மானின் துணி கரங்கள் நிறைந்திருந்தன. கனவின் இடையே, இப்போ அவன், அழுவதில்லை. ஏனென்றால், அவனுக்கு தற்பொழுது குளிரில்லையல்லவா! டொக்கிதான் பக்கத்தில் இருக்கிறதே.

*தமிழில், பாமா*

## குழந்தையும் தெய்வமும்



மனதில் மந்திரம் சொல்லி
கோவிலைச் சுற்றும்
அம்மாவின் பின்னால்
விளையாடிக்கொண்டே
வந்தது குழந்தை..!!
குழந்தையின் பின்னால்
நடந்துவந்தார் கடவுள்..!!!

சேட்டை செய்த குழந்தையை
வீட்டில் விட்டு விட்டு
கோவில் வந்ததாக
யாரோ சொன்னார்கள்..!
தெய்வத்தை வீட்டில் விட்டு
கோவிலுக்கு ஏன் வந்தாரென
சிரிக்கத் தோன்றுகிறது.

எப்போதும் முறைத்துக்கொண்டு
நல்லவர்களைச் சோதிக்கிறது
கருவறைக் கடவுள்..!
கெட்டவனுக்கும்
புன்னகை காட்டி,
தனை மறந்து சிரிக்கிறது
தெருவில் விளையாடும்
குழந்தை..!!

## கடல் அரக்கன்




உண்மையான கடல் அரக்கன்கள் இவை. டைனோசர்கள் நிலத்தில் ஆட்சியுடையவையாக இருந்த காலத்தில் இந்த ஊர்வன, கடலில் ஆட்சியுடையவையாக இருந்தன. இவை *ப்லிசியோசர்கள்*. இவை 200 மில்லியனிலிருந்து 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் கடலில் வாழ்ந்தன. இவை டைனோசர்கள் அல்ல. இருந்தாலும் அதே காலத்தில் வாழ்ந்திருக்கின்றன. ப்லிசியோசர்கள், மீன்களையே உணவாக உட்கொண்டன. காற்றைச் சுவாசித்தன. கடற்கரையில் அவற்றின் முட்டைகளை இட்டிருக்கின்றன என்று கருதப்படுகிறது. பெரிய கடலரக்கன்கள் 15 மீற்றர்(49 அடி) நீளமானவையாகக் காணப்பட்டன.

பல மில்லியன் வருடங்களாக ஊர்வன பூமியில் ஆதிக்கம் செலுத்தின. அவ்வாறு தரையில் ஆதிக்கம் செலுத்தியவற்றில் முக்கியமானது டைனோசர். எந்த டைனசர்களும் நீந்தவில்லை.

அக்காலப்பகுதியில்தான் பொல்பின் வடிவத்திலும், மிகவும் விரைவாக நீந்தக்கூடியனவாகவும் இவை இருந்தன. டைனோசர்களின் இடுப்பில் *திவ்போன்* இணைக்கப்படுவதற்கான துவாரம் காணப்பட்டது. ஆனால், பிலிசியோசர்களில் இத் துவாரங்கள் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

facebook



# விவசாயியின் கோழி

சந்தைக்குப் போன விவசாயி ஒருவர், தனது தோட்ட காய்கறிகளை விற்றுவிட்டு வரும் வழியில் புதிதாக கோழி ஒன்றை வாங்கி வந்தார். வீட்டிற்கு வந்த கோழி புதிய இடம் என்பதால் பயந்து பயந்து இரைகளைத் தேடி தின்று கொண்டிருந்தது. இதைக் கவனித்த விவசாயி, கோழியை கையில் பிடித்து பாசமுடன் தடவி இரையூட்டினார். நாட்கள் கடந்தன. கோழியும் வளர்ந்து பெரிதானது.

விவசாயியின் கோழியைப் போலவே பக்கத்து வீட்டில் ஒரு கோழி இருந்தது. அந்தக் கோழி, விவசாயியின் கோழிக்கு வைக்கும் உணவையெல்லாம் திருடித் தின்று வந்தது.

ஒருநாள் இதைப் பார்த்துவிட்ட விவசாயியின் கோழி, சண்டை போட ஆரம்பித்தது. இரண்டும் கடுமையாக மோதிக் கொண்டன.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த விவசாயிகள் கோழி சண்டை போட ஓடியது. ஓடிய வேகத்தில் கால்களை தூக்கியடித்து, சண்ட போட ஆரம்பித்தது.

இந்த நேரம் தனியே நின்ற குஞ்சுகளில் இரண்டு குஞ்சுகளைக் கழுகு தூக்கிச் சென்றது. கோழிக் குஞ்சுகள் கதறும் சத்தம் கேட்ட தாய்க் கோழி, சண்டையை விட்டுவிட்டு ஓடிவந்தது.

இதைப் பார்த்த விவசாயி, பக்கத்து வீட்டுக் கோழியை விரட்டியடித்தார். இதன்பிறகு பக்கத்து வீட்டுக் கோழி எப்போதும் கிண்டல் அடித்துக் கொண்டும், வம்பு பேசிக் கொண்டும் சண்டைக்கு இழுத்துக் கொண்டே இருந்தது. இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தது விவசாயியின் கோழி.

கொஞ்ச நாட்கள் கழித்து விவசாயியின் கோழி முட்டை வைத்து குஞ்சு பொறித்தது. தன்னுடைய கோழி குஞ்சுப் பொறித்தது. தன்னுடைய கோழிக் குஞ்சுகளை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தது.

இதைப் பார்த்த பக்கத்து வீட்டுக் கோழி மீண்டும் கிண்டல் செய்து, கோபமூட்டி வம்புக்கு இழுத்தது.

ஆனால் அதற்குள் கழுகு குஞ்சுகளை உயரமாக தூக்கிச் சென்றுவிட்டது.

மற்றக்குஞ்சுகளை சிறகுகளுக்குள் வைத்து காத்தது. தனது 'சின்னக் கோபத்தால் இரண்டு பிள்ளைகளை இழந்து விட்டோமே" என்று நினைத்து கண்ணீர் விட்டு அழுதது.

கவலையாக இருந்த விவசாயியின் கோழி முன்பு மீண்டும் ஏளனமாக பேசி கிண்டல் செய்தது. பக்கத்து வீட்டுக் கோழி, என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாய் இருந்தது விவசாயியின் கோழி. அடுத்த நாள் பக்கத்து வீட்டுக் கோழி கதறும் சத்தம் கேட்டு, என்ன சத்தம் என்று விவசாயியின் கோழி பார்த்தது.

அருகே அடித்து குழம்பு வைப்பதற்காக பக்கத்து வீட்டுக் கோழியை தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

# கொடுத்துப் பெறுதல்

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்ஷுக்கள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒருநாள் நம தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்? என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்ஷுக்களுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம்.

அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை! கூடிச் செயற்படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 415

Search for people, places and things Nagendram Home

இராசரத்தினம்றஜி றஜி





பார்த்தி மகராஜ்




ரவிவர்மன் ராஜகோபால்




ராகுலன் பாலா




நிஷா விஸ்வா




கியாஸ் மொகமட்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வாரம் "சிதைக்கப்பட்டாள்" என்ற உண்மைச் சம்பவ விபரிப்பு வெளியாகின்றது. தொடர்ந்து வரும் வாரங்களில் குறித்த சம்பவம் தொடர்பான நிலைகள் பற்றி, நிபுணர்களின் நேர்காணல் வெளிவரும்.**




## சிதைக்கப்பட்டாள்!

விடிந்துவிட்ட காலைச் சூரியனின் விடியல்கள் மற்ற வீடுகளுக்கு கொண்டு செல்லும் சக்திமிக்க கதிர் வெள்ளம் அவளின் வீட்டுக்குமட்டும் கிடைக்கவில்லை!!

ஏனென்றால் சுட்டெரிக்கும் கண்களின் பார்வைகளின் வெப்பத்தைவிட சூரியனின் பார்வை ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை அவளுக்கு.

*அவளால் மறக்க முடியவில்லை அந்த இனிமையான நாட்களை!*

*வாழ்வின் மிகப் பெரிய சந்தோசம் அந்தச் சின்ன வயது நினைவுகள் தான்!*

அப்பா அவளுக்கு புகழினி என்று பெயர் வைத்தது. ஏனென்றால் எப்போதும் மற்றவர்களின் புகழுக்கு மட்டுமே தன் ஆசை மகள் பொருத்தமானவள் என்பதால்.

ஆயினும் இன்றோ! அனைவரும் அவளை புகழின் எதிர் வடிவில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

*ஏன்?*

*எதற்காக?*

என்பதெல்லாம் அவளின் உள்ளத்தின் ஆழத்துக்குள் சென்று வெறும் கேள்விகளாக மட்டும் பதிந்து விட்டன. சிட்டுக் குருவியாகப் பறந்து கொண்டிருந்த அவள் இன்று, சிறகொடிக்கப்பட்டு வன்முறைக் கூண்டில் அடைக்கப்பட்டு, வாழ்வின் விடியலுக்காக காத்திருக்கின்றாள். ஒவ்வொரு இருட்டின் இறப்பில் பிறக்கின்ற விடியல் கூட அவளுக்காக உருகவில்லை.

காலையில் அம்மா அணிவித்த பளிச்சென்ற சீருடையில், அப்பாவின் சைக்கிளில் முன் பக்கத்தில் உட்கார்ந்து,

*அது என்னப்பா?*

*இது என்னப்பா?*

என்று அப்பாவின் காதுகளைக் குடைந்து, பறந்து பறந்து பள்ளிக்கூடம் சென்றகாலம் போய்விட்டது!

*பறித்தெடுக்கப்பட்டுவிட்டது!* யுத்தக் கத்திகளால் வெட்டப்பட்டு விட்டது.

*அவள் மனதில் எனக்கெதற்கு படிப்பு!*

*நான் எதற்காகப் பள்ளிக்கூடம் போகவேண்டும்?* உள்ளம் தெளிந்தநீரில் போடப்பட்ட கல்லாகக் கலைந்துவிட்டது.

*"என்ரை புகழினிக் குட்டியின்ரை அழகுக்கு யாரும் நிக்க முடியாது"*

அம்மம்மா அடிக்கடி சொல்லுவா. பதிந்திருந்தது அவள் மனதில். அத்தனையும் அலங்கோலமாக்கப்பட்டு விட்டது. *யாருக்காக இருக்கிறேன்?*

*யார் எனக்காக இருக்கின்றார்கள்?* என்னுடைய சந்தோஷங்களை அள்ளிச் சென்ற அந்தக் குண்டு, ஏன் என்னை அள்ளிச் செல்லவில்லை. அடிக்கடி தனக்குள் கேட்டுக் கொள்கின்றாள். (நடந்து முடிந்த யுத்தத்தில் அவளுடைய அம்மா, அப்பா, சகோதரர்கள் என்று அனைவரும் குண்டு வீச்சில் இறந்துவிட்டனர்)

தற்காலிகமாக அவள் பெரியம்மா பெரியப்பாவுடன் சேர்த்து வைக்கப்பட்டாள். உறவுகளின் போக்கு அவளுக்கு பிடிக்கவில்லை. தாய் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அவர்களுக்குத் தேவை. புகழினிக்கோ அம்மாவின் அன்பும், அப்பாவின் அரவணைப்பும் தேவை. உதவித் தொகை நிப்பாட்டப்பட்டதும், அவள் திரும்பவும் தேவைப்படாத அநாதையானாள்.

சிறிய குடிசையில் ஆரம்ப அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில், பாதுகாப்பற்ற நிலையில் இரந்த அவளது வீடும், சூழலும் அவளுக்கு அபாய அறிவிப்பை வழங்கின. விவசாய தினக் கூலிகளான பெரியம்மாவும், பெரியப்பாவும் காலையில் வேலைக்குச் சென்றால் இரவில்தான் வீடு திரும்புவார்கள்.,அதுவும் பெரியப்பா நிறை போதையிலிருப்பார்.

"பாலியல் துஷ்பிரயோக அபாயம்"நிறைந்த சூழலில் அவள் வாழ்கின்றாள். என்பது குறித்த பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அவளின் நிலையறிந்து, தேவையறிந்து, ஆபத்தறிந்து முற்பாதுகாப்பு செய்வார்கள் என்று நம்பப்பட்டது. உடனடியாக செய்யப்பட வேண்டிய எதுவும் நடக்கவில்லை.

பதினான்கு வயதேயான, ஏமாளியான அவளை, அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்ற அவளை, ஏற்கனவே வெந்து போயிருக்கின்ற அவள் உள்ளத்தை மீண்டும் காயப்படுத்த எண்ணுகின்றான் அந்தக் கேவலமான வியாபாரி. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தங்களுடைய கவர்ச்சியான விளம்பரங்களையும், பேச்சையும் பயன்படுத்தி பொருட்களை விற்றுக் கொண்டு,தங்கள் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொண்டு திரியும் அவன் புகழினியின் அபாயகரமான சூழ்நிலையைப் பயன்படுத்த எண்ணுகின்றான். அவளுக்கிருக்கின்ற அபாயம் உறவுகளுக்கு புரியவில்லை. சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவும் இல்லை.

படிக்கவேண்டும் என்றிருக்கின்ற அவள் ஆசைகள் கூட நிராசைகளாக...பள்ளிக்குப் போகத் தேவையான உடுப்பு, சப்பாத்து எதுவும் இல்லை. அவை கிடைத்தபோதும், அவளுக்குத் தன்னை அழைத்துச் செல்ல அப்பாவும் இல்லை என்ற ஏக்கம். யாருடைய துணையும் இல்லை என்ற கவலை. பாடசாலையிலும் அன்பாகப் பேச நல்ல நண்பர்கள் இல்லை. எதுவும் இல்லை.

சிலநாட்கள் பாடசாலைக்குச் செல்கின்றாள். அங்கே சக பாடிகளின் கண்ணில் *"ஒதுக்கி வைக்கப்பட்டவள்"* ஆக்கப்பட்டாள். அவள் கைகளில் ஏற்பட்ட ஒருவகையான சிரங்குநோய் மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்தியது. மனதில் தாழ்வு மனப்பாங்கும் ஏற்பட்டது. அதற்கான மருத்துவ உதவியும்வழங்கப் படவில்லை. எப்போதும் சிந்தனை வயப்பட்டும், ஏக்க உணர்வுடனும், தளம்பல் நிலையிலும் இருந்தாள். தொடர்ந்து பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. அவள் எதிர்பார்த்த ஆதரவோ, வரவேற்போ, புரிந்துணர்வோ அங்கும் கிடைக்கவில்லை.

அவளால் பாடசாலைக்கு அவமானம் என்று அதிபர் பாடசாலையை விட்டு இடைநிறுத்த, அவளோ பாடசாலைக்கு செல்வதே அவமானமாக இருக்கின்றது! என்று எண்ணி நின்றுவிட்டாள். சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தமது அதிகார வரம்பின் அதி உன்னத நிலைக்கு தமது செயற்பாடுகளை வைத்திருக்கவோ அல்லது அவளுக்கான எந்தவொரு அர்த்தமுள்ள நடவடிக்கையையோ முன்னெடுக்கவில்லை.

*அவள் வேறு என்னதான் செய்வாள்?* தடுமாறிக் கொண்டிருந்த அவள்,அவன் யாழ்ப்பாணம் போகலாம் என்று கேட்டவுடன், அங்கு கிடைப்பவற்றை எண்ணி எண்ணினாள்.

*அவனுடன் பயணித்தாள்!!*

நீண்ட தூரம் பயணித்த பின்னர் தன்னுடைய வீட்டைவிட்டு யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டாள்.

யாழ்ப்பாணம்!

சின்னவயதில்,

*"அப்பா யாழ்ப்பாணம் என்ன நிறம் என்று கேட்பாள்?"* மகிழ்வுடன் வந்து சேர்ந்தாள்.

அழைத்து வந்தவனுக்கு மனதில் காமவெறி கிளர புரண்டது. அவனுடைய திட்டம் சரிவர நிறைவேறியது. மிகப்பிரபலமான திரையரங்குக்கு அருகில் உள்ள பழுதடைந்த வீட்டில் அனைத்தையும் ஒழுங்கு செய்தான். தன்னுடைய சகபாடிகளுக்கு தீனி கிடைத்த விடயத்தை தொலைபேசியில் தெரிவித்தான்.

*அவர்களும் மிக வேகமாக வந்து சேர்ந்தனர்!!!!*

புகழினியின் உடைந்து நொருங்கிப்போன உள்ளமும், உடலும் சிதைக்கப்பட்டன. சின்னப் பெண்ணான அவள் பல கொடியவர்களின் ஆசைக்குப் பலியாக்கப்பட்டாள். அப்பாவியான அவள் ஏமாற்றப்பட்டாள். பலரால் கற்பழிக்கப்பட்டாள். புகழினியை அவன் திட்டமிட்டு ஏமாற்றித் தொலைதூரம் அழைத்துவந்து பலருடன் இணைந்து, பலாத்காரம் செய்துவிட்டான்.



Minority Rights Group இன் சர்வதேச அறிக்கையிலிருந்து... இவ்வறிக்கையானது, இலங்கையில் யுத்தத்தின் போது பெற்றோரை இழந்தபெண் பிள்ளைகளின் பாதிப்புக்களைப் பற்றி விபரிக்கின்றது. விபரங்களைப் பெற பின்வரும் இணையத்தளத்தைப் பார்வையிடலாம். www.minorityrights.org- No war, no peace: the denial of minority rights and justice in Sri Lanka

அவளுக்கு விளங்கவில்லை.

*ஏன்?இவ்வாறு நடக்கின்றது?*

*காரியம் முடிந்ததும், ஐவரும் சேர்ந்து அவள் கைகளில் ஐநூறு ரூபா நோட்டை வைத்து விட்டுச் சென்றனர்.*

பிரதான பேருந்து நிலையத்துக்கருகில், கைகளில் 500ரூபா நோட்டுடனும், ஆடைகளில் இரத்தக் கறையுடனும் அநாதரவாக நின்று கொண்டிருந்தாள் புகழினி. அனைத்தும் நடந்து முடிந்து விட்டது. அவளின் ஆபத்து நிலையறிந்தும்,தெரிந்தும் செய்யப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்படாததால் இன்று சிறுமலர் ஒன்று வாடிவதங்கி, வாழ்விழந்து தனியே நின்று தவித்துக் கொண்டிருந்தது. தனியே நின்ற சிறுமியின் நிலையைக் கண்டசிலர் அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அவள் கைகளிலிருந்த அந்த நோட்டு ரூபா அவளை விபச்சாரியாக காட்டுவதற்கு பிரயத்தனப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வழக்கின் கீழ் குறித்தநபர்களில் ஒருவரைத்தான் கைதுசெய்ய முடிந்தது. இன்று 5வருடங்கள் கழிந்தநிலையில் இன்றும் அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. குற்றவாளிகளுக்கும் தண்டனை எதுவும் இன்னும் வழங்கப் படவிலலை.

புகழியின் நிலைபற்றி அறியச் சென்றபோது சிறுவர் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரி, "ஓ அந்த விபச்சாரக்கேசா" என்றுமிகச் சாதாரணமாகக் கேட்டது சாட்டையால் அடித்தது போலவிருந்தது.

ஊமையாக அவள் உள்ளுக்குள் அழுதாலும் உலகம் மட்டும் அவளை கெட்டுப் போனவள் என்று மற்றவர்கள் கூறும் வசை பாடல்களையும் சேர்த்து தாங்க வேண்டியிருந்தது. புகழினிக்கு நடந்த சம்பவத்தில், பொறுப்பு மிக்கவர்களின் அசண்டையீனமான (அக்கறை யற்ற) செயற்பாடு முக்கிய காரணமாகிவிட்டது. அவள் சிறுமியாகவும், அப்பாவியாகவும், ஆதரவற்றவளாகவும், பாதுகாப்பற்றவளாகவும், உதவிமிகவும் தேவைப்பட்டவளாகவும் இருந்தாள். இதற்கு யார் பொறுப்பு?

*நடந்து முடிந்த யுத்தமா?*

*நடந்து முடிந்த யுத்தத்தில் இறந்த அவளுடைய பெற்றோரா?*

*அவளைப்பராமரித்தஉறவுகளா?*

*பாடசாலையிலிருந்து இடைநிறுத்திய அதிபரா?*

*சிறுவர் உரிமைபேசும் அமைப்புக்களா?*

*தவறிழைத்த அந்தக்கயவர்களா?*

*யார் குற்றவாளி!!*

*புகழினியா குற்றவாளி?*

(உண்மைச் சம்பவப் பின்னணியின் பெயர்கள்மாற்றப்பட்டுள்ளன.)

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இமயம் தொட

உள்ளத்தில் ஒன்றை வைத்து
உதட்டில் புன்னகை வளர்க்காதே
நல்லதை நினை
உள்ளதை சொல்
அதைவிடுத்து
உள்ளத்தில் நஞ்சை விதைத்து
உதட்டில் சிரிப்பை பூசாதே
நீ வளர உன்னை வருத்து
உன் வளர்ச்சிக்கு மற்றவரை
உதைப்பாயாயின்
உன் வீழ்ச்சி நிச்சயம்

மாவை. நா.கஜேந்திரன்

# கவிதைக் கலசம்

## பேருந்து

ஆழி முதல் நாடு வரை
குச்சவெளி பாதை எங்கும்
வீறுநடை நாம் போட
வழிகாட்டிய பேருந்து
அம்மாவுக்கு மருந்து எடுக்க
அப்பாவோடு சென்ற கதை
பள்ளிக்குத் தங்கை சென்று
பத்திரமாக வந்த கதை
காதலர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டகதை
கல்யாண நேரத்திற்கு
மணமக்கள் சென்ற கதை
சாரதியும் நடத்துநரும்
கண்விழித்திருந்த கதை
பசியைக் கூறுபோட்டு
விலைபேசி விற்ற கதை
புகைவண்டி வந்தபோதும்
சொகுசுப் பயணம் தந்தகதை
காலங்கள் பல கடந்து
உம்சேவைகள் விழுதுவிட
வாழ்த்துகிறேன்

நி.கவிஅழகன்
தாவடியூர்

## புகைத்தலும் புதல்வர்களும்

தொற்றுநோயல்ல புற்றுநோயது- உனை
கொல்லவந்த கெட்ட நோயிது
புகைத்தல் கொடியதென்பதால்
பலரைத்தாக்கும் பெரும்நோய்
வரமுன் காத்திட நினைப்போம்
தயவுடன் புகைப்பதை மறப்போம்
வந்தால் மாறாது வலித்திடுமாம்
வல்ல சமூகத்தை அழித்திடுமாம்
நரம்பு குருதி எலும்பு யாவும்
நஞ்சை அள்ளி விதைத்திடுமாம்
வகைவகையாய் புகைப்பதனால்
தொகைதொகையாய் நம்மவர் சாவு
கோடி கோடியாய் நம் பணத்தை
கொய்துகொய்து எடுக்கிறார்கள்
புதிய புதிய சிறிசுகளை
புகைக்குள் வீழச்செய்கிறார்கள்

சாந்தையூர் வினிஸ்
பண்டத்தரிப்பு

## விருப்பு வருமா? வெறுப்பு வருமா?

வனாங்களில்வாழும் விலங்கு கூட
விழுமியத்தில்
மனிதரை வெல்லவாம்; மக்கள்
மனங்களை வெல்ல மறந்த
மன்னவரும் பண்பில்
விலங்கினை வெல்லவாம்
மனங்களை வெல்லத் தெரிந்த
மார்க்கம் அறிந்தவன்;
மன்னவன் ஆகலாம்
இனங்களின் பெயரினாலே
சிதைத்து வதைத்து
சித்திரவதைகள் தாம் செய்து
சின்னாபின்னமாக்கிய
சிறுமதியாளன்
மன்னவனாகலாமா?
அல்லது மந்திரிதான் ஆகலாமா?
வெந்த தணல்மேட்டிலிருந்து
சாம்பலின் வாசம் வரும்
நொந்துபோன உள்ளங்களின்
சிந்தனையில் என்ன வரும்?
விருப்பு வருமா? அன்றி
வெறுப்பு வருமா?


வாணியழகன்
முரசுமோட்டை

## தினமும் உன் நினைவே சேருதடி

மனதிலுள்ள உண்மைகளை அறியாமல்
விலகிச் செல்லும் இளமைப் பெண்ணே!
உடலில் ஓடுகின்ற உதிரங்களில்
தினமும் உன் நினைவே சேருதடி
புன்னகைகள் பல புரிந்து சென்று
புண்பட்ட என் நெஞ்சத்துக்கு
மாத்திரைகள் இன்றும் கிடைக்காததால்
தினமும் உன் நினைவே சேருதடி
கண்களாலே தூது சொல்லி
கலங்கித் தவிக்கும் மனதினுள்ளே
கண்கள் மூடித்தூங்கும் பொழுதும்
தினமும் உன் நினைவே சேருதடி

அ.அன்ரன் றோய்

# மௌனத்தின் தேடல்- 254



## மீதம்

முதுமை விளையாட
தனிமை தாலாட்ட
வெறுமை புறம் சூழ
பொறுமையோடின்னும்
விழிகள் கசிந்துருகி
விம்பல்கள் புலனடங்கி
நாடி நரம்புகள்– யாவும்
ஆடி அசைந்தடங்கி
மரணப்படுக்கையில்
சரணமடைந்த
எனக்கு மீதமாய்
சுடுகொள்ளி வைப்பதற்கு
வருவானா எந்தன்
வெளிநாட்டுப் பையன்

மல்லாவி கஜன்

## மனிதம் செத்துவிட்டது

அசாதாரண சூழ்நிலையில்
அகப்பட்டு அனைத்தையுமிழந்து
ஆதரிப்பார் யாருமின்றி
அநாதையாய் நடுவீதியில்
உணவுக்கும் வழியின்றி
ஒட்டி உலர்ந்து ஏக்கத்தோடு
ஒதுங்கியிருக்கிறார் முதியவர்
பசித்தவர் பார்த்திருக்க
புசிப்பதனை இன்றைய மனிதர்
மனிதம் செத்துவிட்டது மண்ணில்

துரை,
தென்மட்டுவில்

## பெரியவரே

கல்லாமல் கற்கும்
வாழ்க்கைப் பாடத்தை
பொல்லாத உலகினிலே
கற்றுத் தேர்ந்தும்
பொல்லூன்றும் வயதினிலும்
வல்லவன் காலடியில்
வலிமை இழக்காமல்
இல்லாமை போக்கவும்
தொல்லைகள் நீக்கவும்
இல்லத்தில் தனிமையாய்
நல்லதோர் வழியை
சிந்திக்கும் ஏக்கமா

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## தனிமை

எத்தனை பிள்ளைகளைப் பெற்றென்ன
எத்தனை சுகபோகங்களையும்
அனுபவித்தென்ன
தள்ளாடும் வயதில்
எவருமின்றி தனியே
துணையின்றி சகதி நிலத்தில்
மணல் பரப்பி மூடிவிட்டு
வந்த ஒரு உறவேனும்
ஒருவாய் சோறு கொண்டு வராதோ!
விண்ணிலிருந்து மண்ணிற்கு
ஏக்கமுடன் எப்போதும்
இதே இடத்தில்
காத்திருப்பேன்

சோபியா.யு
விசுவமடு

## காத்திருக்கிறேன்

உதிரத்தை வியர்வையாக்கி
உடல் உருக்குலைந்து
இளமை மலையேறி
முதுமை எனை வாட்ட
பெற்றெடுத்தவர்களோ
பட்டம் பல பெற்று
பாரினிலே புகழோடு
பஞ்சணையில் புரளுகின்றனர்
நானோ யாருமற்ற ஜடமாய்
குடிசையோரம்
காத்திருக்கின்றேன்

யே.சிவலோஜினி
வயாவிளான் மேற்கு

## ஏன் இந்நிலை...

காலங்கள் பல
கடந்து சென்றாலும்
எம்மைப்போன்ற வறியவர்களின்
வாழ்வில் மட்டும்
ஏன் இந்நிலையோ கடவுளே!
அரை வயிறு கஞ்சிக்காக–ஒரு
வல்லலை ஒரு ஆண்டா
இரு ஆண்டா
எழுபது ஆண்டுகளுக்கு மேல்
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றேன்
எனக்கு ஒரு விடிவு காலம்
பிறக்காதா கடவுளே...?

ஏ.விது
சாவகச்சேரி

## நவீன அரிச்சந்திரா

அன்று அரிச்சந்திரன்
நாடு நகரம் மனைவி
மக்கள் யாவற்றையும்
இழந்தான் உண்மைக்காக
ஆனால் இன்று
புத்திரர்களை நல்லபடியாக
வளர்த்து ஆளாக்கிய
குற்றத்திற்காக இவரோ
தெருவோரத்தில்


இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவோடையூர்

## தந்தையர் தினம்

தெய்வதரிசன வாசலிலே
தேங்காய் பொறுக்கும் நிலையிலே
காத்திருக்கும் தந்தையருக்கு
தந்தையர் தினம்
வந்தாலென்ன வராவிட்டாலென்ன
பிள்ளைகள் மனம் மாறும் வரை

அராலியூர்
சோ.சிவகுமாரன்

# மௌனத்தின் தேடல் –255



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.07.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நக்குண்டார் நாவிழந்தார்"

# உள்ளகவிசாரணை- ஒரு நோக்கு





ஐ.நா. மனித உரிமை சபையினால் சிறிலங்கா மீது மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள விசாரணையை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் காரியாலயத்தினால் சிறிலங்கா மீதான விசாரணை என (OHCHR Investigation on Sri Lanka – OISL) பெயரிடப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டு, ஆராயப்பட்டு, இதனுடைய அறிக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளிவருமா என்ற தயக்கம் யாவருக்கும் உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் சிறிலங்காவில் புதிய ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து ஏற்பட்ட புதிய அரசாங்கம், சர்வதேச மட்டத்தில் தமது சகல செல்வாக்குகளை பாவித்து, கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் வெளியாகவிருந்த அறிக்கையை, எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை பின்போட வைத்துள்ளனர்.

இதன் காரணமாக, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உலகின் சமாதான விரும்பிகள் யாவரும் இவ் அறிக்கையை நிச்சயம் செப்டம்பரில் வெளிகொண்டு வருவதற்காக கடுமையாக உழைக்கின்றார்கள்.

ஆனால் சர்வதேச மட்டத்தில் நன்றாக ருசி கண்ட சிறிலங்கா அரசு, இவ் அறிக்கையை எதிர்வரும் செப்டம்பரில் வெளிவராது தடுத்து நிறுத்துவதற்கு, சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் கடுமையாக உழைக்கின்றனர். இம்முயற்சி வெற்றி அடைய வேண்டுமென்பதற்காக, உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் சிறிலங்கா அரசு பல தில்லுமுள்ளுக்களை மேற்கொள்கின்றனர்.

1. ஐ.நா. மனித உரிமை சபையில் உள்ள 47 அங்கத்துவ நாடுகளுடன், சிறிலங்கா அரசு மிகவும் கடுமையான பிரச்சார வேலைகளை நடத்தி வருகிறது. இவர்கள் தமது பிரச்சாரத்தின் முக்கிய அம்சமாக தாம் உள்ளக விசாரணைகளுக்கான வேலை திட்டங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும், கூடிய விரைவில் இவை நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் கூறுகின்றனர். இதற்காக சிறிலங்கா அரசின் பல முக்கியஸ்தர்கள் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளனர்.

2 - இவ்வேளையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்கு முன்னர் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யுமாறும் வேண்டுகோள்விடுத்து வருகின்றனர். இதனது முக்கிய நோக்கம் என்னவெனில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மூலம், தமது உள்ளக விசாரணைக்கான அங்கீகாரத்தை பெறுவதையே நோக்கமாக கொண்டுள்ளனர்.

3. ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் காரியலயத்தினால் மேற்கொள்ளப்படும் சிறிலங்கா மீதான விசாரணைக்கு, இரவு பகலாக வேலைகளை மேற்கொண்டு, பல முக்கிய தகவல்களையும் சாட்சியங்களையும் வழங்கி வந்த புலம் பெயர் வாழ் தமிழ் மக்களிற்கும், தமக்கும் மிக நெருங்கிய உறவுகள் உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் சமரவீர சர்வதேச சமூதாயத்திடம் எடுத்துரைத்து வருகிறார்.

4 - சிறிலங்காவில் ஓர் உள்நாட்டு விசாரணை ஆரம்பிக்கப்படுவதை, புலம் பெயர் வாழ் தமிழ் மக்க்ள, நிச்சயம் ஆதரிப்பார்கள் என்ற ஒர் கருத்தையும் சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் முன்வைக்கிறார்.

சிறிலங்காவின் இவ் வேலை திட்டத்திற்கு தென் ஆபிரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே நாட்டை சார்ந்த எரிக் சொல்கெய்ம் போன்ற சிலர் பலிக்கடவாகியுள்ளனர்.

இவர்கள் புலம் பெயர்வாழ் தமிழ் மக்களை பற்றியோ, அல்லது அவர்களிடையே காணப்படும் அமைப்புக்கள்பற்றியோ ஆழமான தகவல்கள் கொண்டவர்கள் அல்ல.

உண்மையை கூறுவதனால் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களிடையே செல்வாக்குள்ள அமைப்புக்களிற்கும், அமைச்சர் சமரவீரவிற்கோ அல்லது சிறிலங்கா அரசிற்கும் இடையில் எந்தவித தொடர்போ, நட்போ அறவே கிடையாது என்பது தான் உண்மை.

இதற்காக பத்து பதினைந்து பேருடன் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை அனுஸ்டித்தவர்களையும் அமைப்பையும், புலம் பெயர்வாழ் தமிழ் மக்களிடையே செல்வாக்கு நிறைந்த அமைப்பாக நான் இங்கு கூறவில்லை. இவர்களும் தமது சுயநலத்தில் அக்கறை கொண்டவர்களே!

5. புலம் பெயர்வாழ் மக்களிடமும் அமைப்புக்களிடமும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக, அமைச்சர் சமரவீரவும், சிறிலங்கா அரசும், வடக்கு கிழக்கு வாழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழர் கூட்டமைப்பை, அவர்களிற்கு தெரியாமலே இவர்களை பயன்படுத்தி கொண்டிருக்கின்றனர். இது மிகவும் மனவேதனை தரும் விடயமாகும்.

6. தற்போதைய சிறிலங்கா அரசு தொடர்ச்சியாக கூறிவரும் முக்கிய விடயம் என்னவெனில், முன்னைய அரசினால் தடை செய்யப்பட்டுள்ள 424 தனிநபர் கொண்ட பட்டியலையும், அமைப்புகளையும் தாம் மறுபரிசீலனை செய்யவுள்ளனராம்.

இதனது உண்மை ரகசியம் என்னவெனில், தற்பொழுது தம்முடன் நெருங்கி வேலை செய்து வரும் புலம்பெயர் வாழ் மதில்மேல் பூனைகளான சிலரது பெயர்களையும், அமைப்பையும் இவ் பட்டியலிருந்து நீக்கும் அதேவேளை, வேறு சில அமைப்புகளையும், தனிநபர் பெயர்களையும் இப் பட்டியலில் இணைக்கவுள்ளனர் என்பதே உண்மை.

மங்கள சமரவீர, எரிக் சொல்கெய்ம்

நாம் சரித்திரங்களை ஒழுங்காக ஆராய்வோமானால், முன்னைய ஜனாதிபதி ராஜபக்சவிற்கும், தற்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில், நாங்கள் பாரிய வித்தியாசங்களை காண முடியாது.

1994ம் ஆண்டு முதல் வேறுபட்ட அமைச்சு பதவிகளில் பணி புரிந்த மங்கள சமரவீர, வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு மட்டுமல்லாது, புலம் பெயர் வாழ் மக்களிற்கு செய்த நாசகார வேலைகள் சொல்லில் அடங்காதவை.

இவர் ஊடாக தகவல் அமைச்சராகவும், வெளிவிவகார அமைச்சராகவும் சேவையாற்றிய காலங்களின் செவ்விகள், அறிகைகள் இன்றும் பதிவுகளில் உள்ளன. இவற்றை, தற்பொழுது இவருடன் தேன் நிலவை களிக்கும் இவரது புதிய புலம்பெயர் வாழ் சகாக்களுக்கு இவை நிச்சயம் தெரிந்திருக்க முடியாது.

காரணம், இவர்கள் மிக அண்மையில் தமிழர்களிற்கான செயற்பாடுகளில் ஈடுபடப் போவதாக உட்புகுந்து, தங்களிற்கான தனிப்பட்ட புகழையும் கீர்த்தியிலுமே அக்கறை கொண்டவர்கள்.

சமரவீர ஊடக தகவல் அமைச்சராகவும், வெளிவிவகார அமைச்சராகவும் சேவை செய்த காலங்களில், பின்வரும் விடயங்களின் பொழுது என்ன பங்கு ஆற்றினார் என்பதை நாம் ஒரு கணம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழர் தாயக பூமி மீதான பொருளாதார தடை, பாலியல் வன்முறைக்கு ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி செல்வி கிருசாந்தி குமாரசுவாமி, மாமனிதர் கிரிமினல் சட்டத்தரணி திரு குமார் பொன்னம்பலத்தின் படுகொலை, நவாலி தேவாலயம் மீதான விமானத் தாக்குதலில் பலியான 125 அப்பாவி மக்களது சம்பவம், 700க்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்ட சம்பவம்,

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களது சம்பவம், மூதூரில் படுகொலை செய்யப்பட் 17 அரச சார்பற்ற ஊழியர்களது சம்பவம், வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள், படுகொலைகள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ் வளைகுடா ஆகிய பகுதிகளில் நடந்தேறிய பலவிதப்பட்ட கைதுகள், சித்திரவதைகள், கொலைகள் போன்ற விடயங்களில் இவர் என்ன அக்கறை செலுத்தியுள்ளார்?

இன்று இதே சமரவீர, இந்த பூனையும் பால் குடிக்குமோ என்பது போல், சர்வதேச சமுதாயத்திற்கும், புலம்பெயர் தேசங்களில் சரித்திரம் தெரியாத அண்மைக்கால தமிழ் செயற்பாட்டாளர்களிற்கும் படம் காட்டுகிறார். இதையும் ஏற்கக்கூடிய பைத்தியக்காரர்கள் இன்றும் தமிழரிடையே வாழ்கிறார்கள் என்பது மிகவும் வேதனை தரும் விடயமாகும்.

இதேவேளை, நோர்வே நாட்டை சார்ந்த எரிக் சொல்கெய்ம், மீண்டும் இலங்கைத்தீவு வாழ் தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறை காட்டுவது, பல தமிழர்களுக்கு மிகவும் வியப்பாகவுள்ளது.

சுருக்கமாக கூறுவதனால், தமிழர்களது அரசியல் உரிமை போராட்டத்தை நிர்மூலமாக்குவதில் பெரிய பங்கு ஆற்றியவராக கணிக்கப்படுபவர்களில் எரிக் சொல்கெய் மும் முக்கியமானவர்.

மிக அண்மையில், இவர் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அவர்களை சந்தித்து உரையாடிய பின்னர், இவரினால் அனுப்பப்பட்ட டுவிற்றர் தகவலை, ஓர் தேவையற்ற விடயமாகவும், இதன் மூலம் சிறிலங்கா அரசை எரிக் சொல்கெய்ம் உசார் படுத்தியுள்ளதாகவும், இத் தகவலை ஓர் திரைமறை நகர்வாகவும் தமிழ் மக்களால் பார்க்கப்படுகிறது.

தற்போதைய யதார்த்த நிலை என்னவெனில், சிறிலங்கா அரசு சார்பாக மங்கள சமரவீரவினால் மேற்கொள்ளப்படும் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களுடனான தொடர்பு, உறவு என்பது, ஓர் மிகச் சிறிய தனிநபர் அடங்கிய குழுவுடனாது என்பதே உண்மை.

இவர்கள் புலம் பெயர் வாழ் தமிழ்மக்களிடையே எந்தவித செல்வாக்கும் அற்றவர்கள், தம்து தனிப்பட்ட புகழ் கீர்த்திக்காகவே இவ்விடயங்களிற்குள் அழையா விருந்தினராக உட்புகுந்தவர்கள்.

ஆகையால் இது நிலைக்கும் விடயம் அல்ல. புலம் பெயர் தேசங்களில் மக்களிடையே செல்வாக்கு நிறைந்த அமைப்புக்கள் மிக இலகுவில் எந்த சிறிலங்கா அரசுக்களையும் நம்பமாட்டார்கள். இவர்கள் மக்களிற்கும் சரித்திரத்திற்கும் முக்கிய இடம் கொடுப்பவர்கள்.

இவ் அமைப்புக்களின் பெரும்பாலானோர் புகழ் கீர்த்தியை விரும்பாதவர்கள். இவர்கள் சர்வதேச சமுதாயத்தின் உதவியுடன் ஓர் வெளிப்படையான அணுகுமுறைகளையும், பேச்சுவார்த்தைகளையும் மக்களிடையே செல்வாக்கு படைத்த அமைப்புகளுடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளையே விரும்புபவர்கள்.

தற்போதை நிலையில், சிறிலங்கா அரசு சார்பாக அதனது வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீரவுடனான கபடம் நிறைந்த அணுகு முறைகளை மேற்கொள்ளபவர்கள், கடந்த ஆறு தசாப்தங்களிற்கு மேலான பேச்சுவார்த்தைகளின் சரித்திரங்களையும், ஏமாற்றங்களை கணக்கில் கொள்ளாத சுயநலவாதிகளே.

இன்று சிறிலங்காவின் நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கோ, நடந்து முடிந்த போர்க்குற்றம், இனச் சுத்திகரிப்பிற்கு நீதி காண்பதற்கு ஆதரவாக எத்தனை அரசியல்வாதிகள் தெற்கில் தயாராகவுள்ளார்கள் என்பதை இவர்கள் சிந்தித்தது உண்டா?

இவர்கள் "நக்குண்டார் நாவிழந்தார்" என்ற அடைமொழிக்கு அடங்க தமது சந்தர்ப்பவாத வேலை திட்டங்களை நகர்த்துபவர்கள் என்பதே உண்மை.

**ச.வி.கிருபாகரன்,**
**பிரான்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அயலோடு உறவாடு..."




இப்பொழுதுதான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். வெளிக்கதவை திறந்து உட்செல்ல முயன்ற வேளை திரும்பிப் பார்த்தேன். பூரணச்சந்திரன் செம்மஞ்சள் வர்ணத்தில் வானில் எழுந்துகொண்டிருந்தான். ஓ! இன்றைக்குப் பௌர்ணமி தினமல்லவோ என எண்ணிக்கொண்டேன். வழமைக்கு மாறாக எமது அயல் வீட்டில் ஆரவாரம், மின்விளக்குகள் எரிகின்றன. சந்தடியாய் இருக்கிறது. யாரோ புதிதாகக் குடிவந்திருக்கிறார்கள் போலும் என எண்ணியவாறு உள்ளே வந்தேன்.

"என்ன? இண்டைக்கு இவ்வளவு நேரம் பிந்தி? ஏன் தாமதமானது? கடினமான வேலையா? போக்குவரத்து கஸ்டமா?" ஒரு கேள்வியை இரண்டு, மூன்று பாணியில் கேட்பது சாந்தியின் வழமை. எந்தளவு பதட்ப்பட்டுள்ளாள் என்பது எனக்குப் புரிந்துவிடும்.

"அது ஒன்றுமிலையப்பா, கந்தையா கனகம்மா நினைவாலயத்தின் கூரை வேலை ஆரம்பித்துள்ளோம் அல்லவா, ஊசிக்கால் தீராந்திகளை கீழே விட்டுவிட்டு வருவது பாதுகாப்பில்லையென எண்ணி ஒவ்வொரு ஊசிக்காலாக ஏற்றிப் பொருத்தப்பொருத்த அவை எழுந்து நின்ற மிடுக்கும், கம்பீரமும் தந்த உற்சாகத்தில் அனைத்து ஊசிக்கால்களையும் ஏற்றிப் பொருத்தி நிற்பாட்டிவிட்டம். அது தான் கொஞ்சம் பிந்திவிட்டது."

"கூரைவேலை செய்யப்போகிறோம் என்று காலையில் வேலைக்குப் புறப்படும்போது சொன்னனீங்கள் ... நேரம் பிந்தப் பிந்த என்னவோ ஏதோவென்று நான் பயந்திட்டன்."

"உந்தமாதிரியான எதிரான எண்ணங்களை மனத்திலிருந்து அகற்றி, நேரான சிந்தனைகளை வளர்த்துக்கொள். என்று எத்தனை தடவைகூறினாலும் உனக்குப் பயம் விடுகுதில்லை."

"இருக்காதா பின்னே? கூரை வேலை செய்யவெனக் கூரையில் ஏறிய, எத்தனை பேர் தவறி கீழேவந்து... என்னென்னவோ எல்லாம் நடந்திருக்கு. உங்கடை பெரியத்தானும் காதவாய்க்கால் வீரபத்திரர் கோவில் கூரையின் ஊசிக்கால் ஏற்றும்போதுதானே தவறினவர். நீங்கள் படிச்ச படிப்புக்கு இப்படித் தினம் தினம் நான் வீட்டில இருந்து பயந்து பயந்து மாரடிக்கிற வேலைக்கு நீங்கள், விடாப்பிடியாய் போய்வாறது– எனக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை."

"அது எனக்குத் தெரியம்தானே சாந்தி, ஊசிக்கால் ஏற்றிமுடிந்த சந்தோசத்துடன் வீட்டுக்கு வந்திருக்கிறன். நடந்து முடிந்த கதைகளைக் கிளறாதை. எனது படிப்புக்கேற்ற வேலை கிடைக்காததாலேதானே, உழைப்புத் தேடி குலத் தொழிலைத் தேர்ந்தெடுத்தன். இதைச் செய்யத் தொடங்கினதாலேதானே இன்றைக்கு நான் ஒரு மனிசனா, இரண்டு பிள்ளைகளை உத்தியோக்துக்கு அனுப்பி விட்ட ஒரு நல்ல தந்தையா இருக்கிறன். நீங்கள் நினைக்கிறதுபோல இதில கஸ்ரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இஸ்டப்பட்டு செய்தால் எல்லா வேலைகளும் இலகுவானவைதான்."

"சரி, சரி எல்லாத்துக்கும் ஒருகாரணம் வைத்திருப்பியள்.வாங்கோ சுடுதண்ணி கலந்து விடுறன். குளித்துச் சாப்பிட்டுவிட்டு, உங்கட புத்தக மேசையை ஒருக்கால் ஒழுங்குபடுத்தி விடுங்கோ. சந்திரன் நேற்று இரவு வாங்கிச் சென்ற புத்தகங்கள் தந்தவர். அதையும் அந்த மேசையிலதான் வைத்திருக்கிறன். நீர்வேலி கந்தசாமி அண்ணரின் அந்தியேட்டி நிகழ்வு-வாற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகிறார்களாம். அழைப்பிதழ் தந்துவிட்டுப்போயினம். அதையும் மேசையிலதான் வைத்திருக்கிறன்- அதையும் ஒருக்கா பாருங்கோ."

மரண நிகழ்வு நடந்தது நேற்றுப்போல இருக்கு. அதுக்கிடையில அந்தியேட்டி வந்திட்டுதா? நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடிமறைகின்றன. மக்கள்தான் கால ஓட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பரிதவிக்கின்றனர் என்று எண்ணியவாறு மாற்று உடைகளுடன் குளிக்கும் அறைக்குச் சென்றேன்.

2-3 வேப்பிலைக்கொத்துகளைப் போட்டு சுடவைத்த தண்ணீர் கலந்து குளித்ததும் புத்துணர்வும் தெம்பும் பிறந்தது. களைப்புப் பறந்துவிட்டது.

குத்தரிசிச் சோறும் ஒடியல்பிட்டும் கத்தரிக்காய் குழம்பும் மரக்கறிவகை எல்லாம் போட்டு ஆக்கிய சாம்பாரும் மிகவும் சுவையாக இருந்தது. சத்துணவாகவும் இருந்தது. சாந்தியின் சமையல் பக்குவம் அதில் தெரிந்தது. போதும் போதும் என்று தடுத்தாலும் மேலும் இரண்டு கரண்டி சோறு தட்டில் இட்டு உண்ணத் தூண்டினாள்.

"இப்படிப் பாடான வேலைகள் செய்துவிட்டு வருகிற நாட்களிலாவது இரண்டு முட்டைகளைப் பொரித்து சாப்பிவைக்க முடிகிறதா என்றால்.." என்று புறுபுறுத்தாள் சாந்தி.

"இங்கே பார் சாந்தி, முட்டையோ மாமிசமோ சாப்பிடாததால நான் பலவீனமாகிவிடேல்ல சொல்லப்போனால், இப்பதான் சுகதேகியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறன். நீ தேர்ந்தெடுத்து சமைத்துத் தரும் நிறையுணவு, அன்போடு நீ பரிமாறும்போது, தேவாமிர்தம் மாதிரி இருக்கு."

"எதுக்கெடுத்தாலும் ஒருகாரணம், விடாப்பிடித்தனம் உங்களுக்கு..."

உங்களோட வேலைசெய்யிற கந்தசாமியும் கனசபையும் இந்நேரம் அலுப்புப் போக சாராயம் அடிச்சுவிட்டு மீன், முட்டை என்று சாப்பிட்டு விட்டுக் கிடப்பினம். நீங்கள் மட்டும்– மாமியின் மரணத்தோட மச்சத்தை விட்டுட்டு மரக்கறியோட நிக்கிறியள். ஒரு காலத்தில முழுக்கிடாய் வெட்டி ஒரு குடும்பம் தனியாக சாப்பிடுறது என்று சொன்னனீங்கள். இப்ப எப்படித்தான் இப்பிடி விரதமிருக்கிறியளோ தெரியேல்லே."

"அது சரி சாந்தி அயல் வீட்டில ஆரோ வந்திருக்கினம்போலகிடக்கு." சாந்தி அன்பாகக் கண்டிக்கிறவேளையிலும் புறுபுறுக்கிறவேளையிலும் நான் மெதுவாகக் கதையைத் திசைமாற்றி விடுவேன்.

"ஓமோம் சொல்ல மறந்திட்டன். ஒரு ரீச்சர் குடும்பம் வந்திருக்கிறார்கள். 2 பெண்பிள்ளைகளும் ஒரு பையனும். ரீச்சர் இந்து ஆரம்பப் பாடசாலையில் வேலையாம். மூத்தமகளை வாறவருஷம் ஆண்டு ஒன்டில சேர்க்கவேணுமாம். பிறகு சேர்க்கிற நேரத்தில வதிவிடச் சான்றிதழ் அது இது என்று அலையாமல் ஒரு முன்னேற்பாடுதான். கணவன் சாவகச்சேரியாம். புடவைக்கடை நடத்துறாராம். துணையாக ரீச்ரின்ரை அம்மாவும் வந்திருக்கிறா."

"அப்பா இல்லையாமா?"

"அப்பா மற்ற மகளுடன் வவுனியாவில் இருக்கிறாராம். மற்ற மருமகன் மறவன்புலவு ஆக்களாம். பாவற்குளத்தில கமம் செய்கிறாராம்.அந்த அம்மா பின்னேரம் இங்கே வந்து கதைச்சவா. அப்போதான் இதையெல்லாம் சொன்னவ.

இண்டைக்கு மருமகன் வேலைவிட்டு நேரத்தோட வருவாராம். உங்களோட வந்து கதைக்க வேணும் என்றவராம்."

அது சரி, உங்களுக்கு நாளைக்கு எங்கே வேலை, எத்தினை மணிக்குப் புறப்படவேணும். எல்லா விபரத்தையும் சொல்லிப்போட்டு, உங்கடை நூலகத்துக்குப்போங்கோ. பிறகு புத்தகம் படிக்கத் தொடங்கிவிட்டியள் என்றால் எதுவும் கேட்கேலாது. கொஞ்சம் பொறுங்கோ பால் சுடவைச்சுத்தாறன் அதையும் குடிச்சிட்டே போங்கோ "என்றவள் குசினிக்குள் நுழைந்தாள். தம்ளரில் பால்வைக்கப்பட்டது. அவன் குடித்துவிட்டு படிக்க ஆரம்பித்தான். கிச்சினில் பாத்திரங்களின் சத்தம் கேட்கத்தான் செய்தது. இவளுக்கு ஒருபொழுதும் ஓய்வில்லை என்று எண்ணிக்கொண்டவன். வாசிப்பில் ஆழமாக இறங்கினான்.

"வீட்டில்யார்? நாங்கள் உள்ளே வரலாமா?" என்று கேட்டவாறு ராதிகா ரீச்சரும் கணவரும் அவர்களின் இரண்டு பெண் குழந்தைகளும் ரீச்சரின் தாயாரும்– மொத்தத்தில் குடும்பம் முழுவதும் அங்கே நின்றது. குழந்தைகள் இருவரும் துருதுருவென் இருந்தார்கள்.

"ஓமோம் வாங்கோ, வாங்கோ..."

"இஞ்சாருங்கோ பக்கத்துவீட்டு ரீச்சரும் எல்லாரும் வந்திருக்கினம்.ஒருக்கா வெளியில வாங்கோவன்." ஓசோவின் *தர்மபதம்* என்ற நூலில் மூழ்கியிருந்த என்னை அழைத்தாள். அவசரமாக மேலங்கியை எடுத்து அணிந்து கொண்டு வெளி விறாந்தைக்கு வந்தேன்.

"வணக்கம். நாங்கள் உங்களின் பக்கத்து வீட்டுக்கு இன்றுதான் குடிவந்திருக்கிறோம். உங்களை ஒருதடவை கண்டு கதைத்துப் போகலாமெண்டு..."

"ஓம், நல்லது. மிச்சம் சந்தோசம். நீங்கள் நல்லாயிருக்க வேணும்."

"நன்றி. எங்களுக்கு இங்கை இடம் புதிது. உங்களைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டுள்ளோம். உதவி ஒத்தாசையா இருக்குமெண்டு கதைச்சுப் பழகிப் போகலாம் என்டு..."

"நல்லது, நல்லது அப்படித்தான் பழகவேணும். அயலில் இருப்பவர்களைப் பற்றி அறிந்திருப்பது அவசியம். ஏதாவது உதவி தேவையென்றால் கூசாமல் கேளுங்கோ. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகினமோ?"

"இல்லை, இல்லை. இவதான், எங்கட மூத்தவ தாரகா. அவ, இரண்டாவது சாருகா. மகன் கடைசி தர்சன் என்று பெயர் வைத்திருக்கிறம். இவவுக்கு இப்பதான் நாலுவயசு நடக்குது. ஜனவரியில பிறந்ததாலே அடுத்த வருஷம் ஆண்டு ஒன்றில சேர்க்கக்வேணும். சாவகச்சேரியில முன்பள்ளிக்குப் போய்வந்த்வா. இனி இங்க பாத்து நல்ல முன்பள்ளி ஒன்றில சேர்க்கவேணும். நாங்கள் தென்மராட்சி ஆக்கள் தோட்டம் துரவு காணி புலவு என்று வாழ்ந்தனாங்கள். அங்கையெண்டால் வீடுகள் எட்ட எட்ட இருக்கும்" என்றார் அவர்.

"இங்க வீடுகள் நெருக்கமாய் இருக்கும். ஆனால், உறவுகள் எட்ட, எட்ட இப்படித்தான் தனித் தீவில வாழுறதைப்போல" என்றேன் நான்.

"தனித்தீவில வாழுறதைப்போல வாழ நாங்கள் பழகிக்கொள்ளவில்லை. அதுதான் உங்கள் அன்பையும் நட்பையும் பெற்றுப்போகலாம் என்று வந்திருக்கிறம்" என்றார் ரீச்சரின் கணவர்.

"ஓ! அது நல்லது.. அது நல்லது. நானும் தென்மராட்சிதான் தச்சன்தோப்பு. இங்கை கலியாணம் செய்துகொண்டு 40 வருடங்களாக வாழ்ந்துவருகிறன். எனக்கும் அப்படித்தான் தனித்து வாழமுடியாது. ஆனால், இங்க ஒரு வருடனும் மனம் விட்டுப் பேச முடிவதில்லை. யாரையும் உடனடியாக நம்பிவிடவும் முடியாது. புத்தகங்கள்தான் என் உறவுகள், நண்பர்கள், வழிகாட்டிகள்."

"உங்கட கதையில விளங்குது நீங்கள் படிச்சவர் என்று. நிறைய வாசிப்பவர் என்றும் புரியுது. எனக்கு நேரம் கிடைப்பது அருமை அப்படி ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் வாசிப்பன்.

"உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் இரசனைக்கேற்றவாறு என்னிடமிருக்கும் புத்தகங்களிரிருந்து எடுத்து வாசியுங்கள். நாங்கள் வாசித்தால்தான் பிள்ளைகளும் வாசிப்பினை."

"ஓ, சரியாய் சொன்னீர்கள். நாங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேணும். அவர்கள், அதைப் பின்பற்றுவார்கள். உங்கள் பிள்ளைகள் இருவரும் ரீச்சர்ஸ் என்று அறிந்தன், ஒருவரையும் காணவில்லை."

"நீங்கள் அறிந்தவை சரிதான். அவர்கள் கஸ்டப்பிரதேச சேவை முடித்துவிட்டு நகருக்கு மாற்றமெடுத்து வந்திட்டினை. தனித்தனி வீடு கட்டிக் குடும்பம் பிள்ளைகள் என வாழுகினம். ஓய்வு நாட்களில் வந்து ஒன்றுகூடிச் சமைத்து, உண்டு, எங்களையும் மகிழ்வித்துப் போவினம்."

"ஓமோம். அப்படித்தான் வாழவேணும் பெற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்து, முதுமைப் பருவத்தில் அவர்களை மகிழ்விக்க வேண்டும். அவர்களுடைய ஆசீர்வாதத்தால் எமது வாழ்வு ஓங்கும்."

"மெத்தச்சரி, முதுமைக் காலத்தில் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காய் பெற்றோரும், அவர்களின் பராமரிப்புக்காய் பிள்ளைகளும் பரஸ்பரம் அன்பு காட்டி வாழ்வது பெரிய செல்வம் தான். மனநிறைவுதான். கடைசிக்காலத்தில் எனது அம்மா, எனது பிள்ளைகளின் வாழ்வுக்காக உதவுவதற்கென எங்கோளோட வந்து எமக்குத் துணையாயிருக்கிறார். அப்பா, அக்காவின் பிளளைகளுக்காக வவுனியாவில் வசிக்கிறார். மாதமொரு தடவை ஓய்வு நாட்களில் எல்லாரும் ஒன்றுகூடி மகிழ்வோம். என்ன செய்வது பிள்ளைகளுக்காக நாம் ஓடி ஓடி உழைக்க, எங்களுக்கு உதவியாக பெற்றோர் வாழ்வது ஒரு ஆறுதல்தான். ஒருவகை இணைப்புத்தான். நல்ல ஆரோக்கியமான உறவுப் பாலம்தான்.

"இந்தக்காலத்துப் பெற்றோர்கள் எல்லோரும் படித்தவர்கள். தங்களை விட தங்கள் பிள்ளைகள் படிக்கவேணும் என்று ஆசைப்பட்டு நாயோட்டம் பேயோட்டம் ஓடித்திரியினம். பிள்ளைகளுக்கும் ஓய்வில்லை. விளையாட்டும் இல்லை. சுயசிந்தனைக்கும் இடம் இல்லை. எல்லாம் சப்பித்துப்புற கல்விமுறைதான். எங்கடை கஸ்டத்தைப் பார்த்திட்டு, எங்கடை அம்மா, அப்பா ஓய்வுகால அமைதியான – சேர்ந்துவாழும் வாழ்வை விட்டுட்டு ஆளொரு இடமாக இருக்கினம்."

"எங்களைப்போல மூத்தவர்களின் அன்பும் ஆதரவும் இல்லாமல்போனால் இக்காலப் பிள்ளைகள், செல்லும் வழிதெரியாது தவறிழைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். அவர்களைக் கெடுக்கவென்றே கண்ட கண்ட கழிசடைப்பழக்க வழக்கங்களும், பாவனைப்பொருட்களும் புழக்கத்தில் வந்து சமூகம் கெட்டுச் சீரழியுது. எங்கள் குழந்தைகளை நல்வழிப்படுத்துறது தான் நாங்கள் பிறந்ததின் பலன் என்று நான் நினைக்கிறன்."

"ஓமோம், எங்களுக்குப்பின்னாலே ஒரு சீரழிவை விட்டுட்டுப் போறமெண்டால், நாங்கள் பிறந்ததில ஒரு பயனும் இல்லை எண்டுதான் அர்த்தம்." சாந்தி கொடுத்த தேத்தண்ணியைக் குடித்து விட்டு ரீச்சரின் கணவர் "வாற ஞாயிற்றுக்கிழமை எங்கட அக்கா குடும்பமும் எனது நண்பர்களும் எங்கட வீட்டுக்கு வருகினம் அன்றைக்கு நீங்களும் வந்து சந்தோசமாக விருந்தில கலந்து கொள்வேணும்" என்றார்.

"ஓ! நிச்சமா..நிச்சயமா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா, இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துமா..?

சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை மீளத் தொடங்குவதற்கு இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவும் தனது எதிர்ப்பைக் காண்பித்துள்ளது. எனினும், சீனா தொடர்ந்தும் இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்காக தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அப்போது, ராஜபக்ச அரசாங்கத்தில் அங்கம் வகித்த சில முக்கிய அரசியல்வாதிகளால், களவாடப்பட்டு வேறு நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை மீளவும் பெற்றுக் கொள்வதற்கு மோடி உதவ வேண்டும் என மைத்திரிபால சிறிசேன கோரியிருந்தார்.

அத்துடன் சிறிலங்காவில் நிதிப் புலனாய்வுப் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கு மோடி உதவ வேண்டும் எனவும் மைத்திரி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அரசியல்வாதிகளால் களவாடப்பட்ட சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான நிதியானது சென்.மாட்டின் தீவு, ஹொங் கொங் மற்றும் செச்செல்ஸ் ஆகிய நாடுகளின் வங்கிகளில் இடப்பட்டுள்ளதாகவும் மோடியிடம் மைத்திரி தெரிவிததிருந்தார்.

இதேபோன்று சிறிலங்காவிலிருந்து ராஜபக்சவின் முக்கிய அரசியல்வாதிகளால் திருடப்பட்ட பணமானது டுபாய், உகண்டா, கென்யா போன்ற நாடுகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மைத்திரி குறிப்பிட்டிருந்தார்.

இதற்கப்பால் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவுக்கான சுற்றுப்பயணத்தின் போதும் ராஜபக்சவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த முக்கிய பிரமுகர்கள் பலர் சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான நிதியை வேறு நாடுகளில் பதுக்கி வைத்துள்ளதாகவும் இவற்றை மீட்டெடுப்பதற்கு அமெரிக்கா உதவ வேண்டும் எனவும் அமெரிக்காவிடம் கோரியிருந்தார்.

அண்மையில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி சிறிலங்காவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது, வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதியைக் கண்டுபிடிப்பதற்கு சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினருக்கு பயிற்சி வழங்கப்படும் என உறுதியளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து சில வாரங்களின் பின்னர் சில வல்லுனர்களைக் கொண்ட குழுவொன்று சிறிலங்காவுக்கு பயணம் மேற்கொணடிருந்தது.

மகிந்த ராஜபக்சவுக்குச் சொந்தமான பல பில்லியன் ரூபாக்கள் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக மங்கள ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த அறிவித்தலை சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச மறுத்திருந்ததுடன் மங்களவுக்கு எதிராக வழக்குத் தொடுக்கவுள்ளதாகவும் அச்சுறுத்தினார்.

கடந்த வாரம் சிறிலங்காவின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்காவின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் சந்திப்பை மேற கொண்டிருந்தார். இச்சந்திப்பின் போது சிறிலங்காவின் முன்னைய ராஜபக்ச அரசாங்கம் நுரைச்சோலை மின்னுற்பத்தி ஆலையை உருவாக்குவதற்காக சீன அரசாங்கத்திடமிருந்து 15 பில்லியன் ரூபாக்களை தரகுக் கூலியாகப் பெற்றுள்ளதாக சந்திரிகா முறையிட்டிருந்தார்.

இதேவேளையில், மைத்திரி அதிபராகப் பொறுப்பேற்றபோது சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்தியிருந்தார். இத்திட்டத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகக் காரணம் காட்டியே இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சீனாவிடமிருந்து சிறிலங்காவின் முன்னைய அரசாங்கம் தரகுக் கூலியைப் பெற்றதற்காகவே சிறிலங்காவில் நிதிப் புலனாய்வுப் பிரிவொன்றை உருவாக்குவதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் தமது ஆதரவை வழங்க முன்வந்திருக்க முடியும்.

சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை மீளத் தொடங்குவதற்கு இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவும் தனது எதிர்ப்பைக் காண்பித்துள்ளது. எனினும், சீனா தொடர்ந்தும் இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது.

இவ்வாறான முயற்சிகள் சீனாவுக்கு இன்னமும் நலன் பயக்கவில்லை. இந்நிலையில் சீன அரசாங்கமானது இத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் அனைத்துலக நீதிமன்றத்தில் வழக்குப் பதியவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் ராஜபக்சவின் அரசியல்வாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதியை மீட்டெடுப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து பணியாற்றி வெற்றியீட்டினால் கொழும்பு நகரத் திட்டத்தை மீளவும் தொடர்வது தொடர்பில் அனைத்துலக நீதிமன்றில் முன்வைக்கப்படும் விசாரணைகள் சீனாவுக்கு வெற்றியைத் தராது.

சீனாவுக்குப் பாடம் புகட்டுவதற்காக முன்னாள் ஆட்சியாளர்களால் வெளிநாட்டு வங்கிகளில் முதலிடப்பட்ட நிதியைக் கண்டுபிடிப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் உதவிசெய்ய முற்படும்.

அமெரிக்கா மற்றும் சீனா போன்றன ஆபிரிக்கா நாடுகளில் முதலிட்டிருந்தால் இந்த நாடுகளின் அரசியல்வாதிகளுக்கு இவர்கள் இலஞ்சம் வழங்கியிருப்பர்.

சீனா விரைவாக நமீபியாவிற்கு மிகப் பெரிய கடன்திட்டத்தை குறைந்த கடன் வட்டியில் வழங்கியது. சீனத் தயாரிப்பு சரக்குக்கப்பல்களைப் பயன்படுத்தி கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்காக 53.3 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. இது மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும் என சீன அதிகாரிகள் தெரிவிததுள்ளனர்.

நமிபியாவில் நல்லதொரு திட்டத்தை முன்னெடுத்த சீனாவால் எதனையும் நல்லதாகச் செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என சீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் சீனாவால் வருடிகளை (ஸ்கனர்) வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான நிறுவனமானது பல மில்லியன் டொலர்களை இலஞ்ச ஊழலுக்காகப் பயன்படுத்தியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் சீனா தனது கட்டுப்பாட்டைத் தளர்த்தும் வரை ஆராய்வதற்கு நமிபிய புலனாய்வு விசாரணை அதிகாரிகள் உதவி கோரியிருந்தனர்.

பாகிஸ்தானிலிருந்து அங்கோலா, கிர்கிஸ்தான் வரையான நாடுகளில் சீனா தனது வெளிநாட்டு நிதி முதலீட்டை மேற்கொண்டு வருகிறது. இராஜதந்திரக் கூட்டாளிகளை உருவாக்குதல், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுதல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக சீனா தனது நிதியைப் பயன்படுத்தி வருகிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தலைவர்கள் சீனாவின் கடன் வழங்கல் தொடர்பில் ஆச்சரியமடைந்துள்ளனர். ஏனெனில் மேற்குலக நாடுகளின்




அரசியல் மற்றும் பொருளாதார மாற்றம் தொடர்பில் மேற்குலகு போன்று கோரிக்கை முன்வைக்காது இலகு கடன்களை சீனா வழங்கி வருகிறது.

சீனாவின் நிதியானது புதிய வீதிகள் அமைத்தல், சக்தி ஆலைகள் உருவாக்கப்படல், தொலைத் தொடர்பாடல் [illegible] ஆபிரிக்கக் கண்டம் [illegible] பயன்படுத்தப்பட்டுள்ளது. 2001லிருந்து 200 இற்கும் மேற்பட்ட திட்டங்கள் சீன அரசாங்கத்தின் எக்சிம் வங்கியால் வழங்கப்பட்ட முன்னுரிமைக் கடன்களை மையப்படுத்தியதாகும்.

சீனாவின் வெளிநாட்டு முதலீடானது மிகப் பெரியளவில் உள்ளதாக வல்லுனர்கள் கூறுகின்றனர். இந்த முதலீடானது நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகள் வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். இவற்றில் பெரும்பாலானவை அரச கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும்.

நாடொன்றைப் பயன்படுத்தி போட்டி மிக்க பேரம்பேசல் மேற்கொள்ளப்படுவது ஆரோக்கியமானதல்ல. திட்டச் செலவீனங்கள், கடன்தவணைகள் மற்றும் மீள்செலுத்தல் நிபந்தனைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக சீனா தனது கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது.

பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான கடன்திட்டங்கள் அரச இரகசியமாகப் பேணப்படுகிறது. நிதிக் கையாடல்களில் இரகசியம் பேணுதலானது ஊழலிற்கு வழிகோலுவதாகவும் இவ்வாறான ஊழல்கள், வெளிநாட்டினர் மேலும் உதவிகளை வழங்க முடியாததாகவும் உள்ளது.

'அரசாங்கத்தின் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சீனா தனது நிதியைப் பயன்படுத்துகிறது' என பிலிப்பீன்ஸ் சட்டப் பேராசிரியர் ஹரி றோக் தெரிவித்தார்.

'இது மென்மையான இராஜதந்திர நகர்விற்காகப் பயன்படுத்தப்படும் காத்திரமான கருவியாகும். ஆனால், இது கடனை மீளச் செலுத்துவோருக்கு தீமையைத் தருகிறது. இந்த அடிப்படையில் இவ்வாறான நிதி இரகசியமானது வெளிநாட்டு உதவிகளுக்கான அனைத்துலக சட்ட வரையறைக்கு எதிரானதாக உள்ளது.

இவ்வாறான நிதிக் கையாடல்கள் ஊழல் மற்றும் மோசமான ஆட்சிக்கு வழிவகுக்கிறது. சீனத் திட்டங்களால் யார் உண்மையில் நலன்களைப் பெற்றுளனர் எனக் கேள்வியெழுப்பியுள்ளனர். இந்த விடயமானது மக்களின் பார்வையிலிருந்து ஒளித்து வைக்கப்பட்டுள்ளது என அனைத்துலக அபிவிருத்தி வல்லுனர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு நிரந்தரமாக துறைமுக நகரத் திட்டத்தை இரத்துச் செய்யுமாயின் சீனா அனைத்துலக நீதிமன்றுக்குச் செல்லும்.

இதன் பின்னர் வெளிநாடுகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள நிதியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக சிறிலங்காவானது, இந்தியாவினதும் அமெரிக்காவினதும் உதவியை நாடுவதுடன், நிதிப் புலனாய்வுப் பிரிவொன்றையும் ஆரம்பிக்கும்.

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**
**-தமிழில் நித்தியபாரதி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறையருள் பெற்றோம் எல்லாமும் நாம் பெற்றோம்...

யாழ்ப்பாணத்திலே, வலி.தென் மேற்குப் பிரதேசத்திலே அமைந்திருப்பது சண்டிலிப்பாய் என்னும் அழகிய கிராமம். சண்டிலிப்பாயின் நடுக்குறிச்சியில் கல்வளை இருக்கிறது. இந்த கல்வளைப் பதியில் கோயில் கொண்டு வீற்றிருப்பவர் கல்வளை விநாயகர். வரகவியாம் சின்னத்தம்பிப்புலவரால் பாடப்பட்ட கல்வளை அந்தாதிக்குச் சொந்த மானவர்தான் எங்கள் கல்வளைப் பிள்ளையார்.

ஆறுமுக நாவலர் போல் யாழ்ப்பாணத்தில் இன்னொருவர் வந்து ஏன் மீண்டும் தோன்றவில்லை?

இது கேள்வி.

ஆறுமுக நாவலருக்கு கிடைத்தது போல் இன்னுமொரு தாய் வந்து மீண்டும் தோன்றாமல் போனதால்!

இது பதில்.

ஆம்! ஒரு குழந்தையை முந்தித்தவமிருந்து, முந்நூறு நாள் சுமந்து, நொந்து பெற்றெடுத்து, நோன்பிருந்து வளர்த்து, சிந்தையிலும் செயலிலும் சிறந்த மனிதராக்கிட, நல்லறிவுள்ள ஒரு தாயாரால் தான் முடியும்.

1953 மே மாதம் 16ஆம் திகதி மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் ஒரு பெண் குழந்தையின் பிறப்பு நிகழ்கின்றது. அனுபவமிக்க அதன் தாயாரின் அறிவூட்டலுடன் அந்தப் பெண் குழந்தை வளர்கின்றது. அவள் வளர்ச்சியில் மகிழ்வும் பெருமிதமும் அடைந்து கொண்டிருந்தவர் அந்தத் தாயார் மட்டுமே!

இன்றைய காலகட்டத்தில் ஒரு குழந்தையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவோர் அநேகர். சத்துணவு என்றும் முன்பள்ளிக்கல்வி என்றும் கலை பண்பாடு என்றும் அறநெறிக்கல்வி, விளையாட்டு என்றும் அரசாலும், சமூக ஆர்வலர்களாலும், பெற்றோராலும், ஆசிரியர்களாலும் போற்றி வளர்க்கப்படுகிறார்கள்.

ஆனால்,

அன்று....

ஓர் ஊரின் சூழல் என்பதும், உறவுகளின் தலையீடு என்பதும் எப்படியெல்லாம் ஒரு சிறு பெண்மகளின் வாழ்வில் புகுந்து விளையாடியது என்பது இன்றும் கூட ஆராய்ந்து பார்க்கத்தக்கதோர் விடயமாக முக்கியத்துவம் பெற்று நிற்கிறது. இது காலம் கடந்தும் மனிதநேயர்களிடம் முறையிட்டு நியாயம் கேட்கப்பட வேண்டிய கேள்வியாக விஸ்வரூபம் எடுத்தும் நிற்கிறது. "அவவுக்கு தான் ஒரு பெரிய அழகி எண்ட நினைப்பு... அதாலை அவவின்ரை தலை நிறையக் கொழுப்பு... தான் ஒரு பெரும் கெட்டிக்காரி எண்டும் எண்ணம்... பஸ்ஸில ஏறிப்போய் படிச்சு வாறா.... பல்கலைக்க ழகத்துக்கும் போகப் போறா போலை... பெண் எண்ட நினைப்பில்லை... பெடியங்களைப் போலை சைக்கிளும் ஓடுறா..." அவள் காது படவே அவளைப் பற்றியதான அவளது உறவினர்களின் விமர்சனங்கள் இவை.

அவள் உயர்கல்வி கற்க வேண்டிய காலம் வந்த போது உறவுகள் விழித்துக்கொண்டன. அவளது கல்வியைக் குழப்புவதற்கான உரிய திட்டம் உரியவர்களால் உருவாக்கப்பட்டது. அந்த வீடு அவளுடைய



வீட்டுக்கு அடுத்த வீடு. அங்கேயும் குழந்தைகள் இங்கேயும் குழந்தைகள், சேர்ந்து வளர்ந்து விளையாடி மகிழ்ந்திருந்த நேரம். அங்கே நேற்று வரை சின்னண்ணையாக இருந்த ஒருவர் இவளுக்கு காதல் கடிதம் எழுதிக்கொடுக்கிறார். பார்க்கும் தூரத்தில் பக்கத்து வீட்டில் இருக்கும் அந்தச் சின்னண்ணை அவள் பாடசாலை செல்லும் நேரங்களில் மட்டும் பஸ் தரிப்பிடத்தில் வந்து நிற்கிறார்.

அடுத்த வீடு அவள் வீட்டுக்கு அந்நிய வீடாக மாறியது. வதந்திகள் பரப்பப்பட்டன. மிரட்டல்கள் விடப்பட்டன. விளைவு மிக முக்கியமான காலகட்டத்தில் அவள் பாடசாலையிலிருந்தும் இடைமறிக்கப்பட்டாள். அவள் வாழ்நாளில் அவள் மீது விழுந்த முதல் அடி.... மிகப்பலத்த அடியும் அதுதான். அது அவளுக்கு வலித்தது.

"எனக்கு என் பிள்ளையின் பாதுகாப்புத்தான் முக்கியம்" சிறகுக்குள் கோழிக்குஞ்சாக அவளை வைத்துக் கொண்ட அவளது அன்னையின் வைராக்கியமான முடிவு அது.

"தங்கச்சி உன் தமிழறிவு யாருக்கு வரும்? நீ வீட்டில் இருந்தே புத்தகங்களைப்படி. பின்னாளில் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளராக வருவாய்" அவளை விட மூன்றே வயது பெரியவனான அவளது அண்ணன் அவளுக்குச் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் அவை.

புத்தகங்களைப் படித்தால் எழுத்தாளராக வர முடியுமா என்று அப்போது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அண்ணன்வழக்கம்போலவே தன்னைக்கிண்டல் தான் செய்கிறான் என்று நினைத்து அழுதாள் அவள்.

நூலகம் ஒன்றினை தன் வீட்டிலேயே வைத்திருக்கும் தன் மாத வருமானம் அத்தனையையும் புத்தகங்கள் வாங்கவே செலவிடும் அவளது பெரியம்மாவின் மகன் ஞானேந்திரன். அந்த அண்ணன் ஒழுங்காகப் புத்தகங்கள் கொண்டு வந்து தர, பக்கத்து வீட்டில் இருக்கும் நல்ல மாமி ஒருவர் இந்தியப் படைப்புக்களான வார மஞ்சரிகள் - சஞ்சிகைகள் தர, கொழும்பில் இருந்து அவளது அண்ணன் வாரா வாரம் தபாலில் சுருட்டி அனுப்பும் பத்திரிகைகள் வீடு வந்து சேர, அவள் வீட்டில் இருந்து கொண்டே தன் மேற்படிப்பை தொடர்ந்தாள். வீட்டில் இருந்த வானொலிப்பெட்டி அவளுக்கு உற்ற தோழியானது.

பிள்ளைக்குத் தந்தை ஒருவன் - நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

அவளது கண்ணீர் இறைவனின் கால்களை நனைத்த போது இறைவன் அவளைத் தன் குழந்தையாகத் தத்தெடுத்துக் கொண்டார். பின்னாளில் அவள் என்னவாக வேண்டும் என்பதை அவரே முடிவு செய்து விட்டார்.

## ஒரு எழுத்தாளரின் அனுபவப் பகிர்வு

அவள் தன் சிறுவயதில் சிறு கதைகளை எழுதத் தொடங்கினாள்.

"சிலுவை" அவளது முதல் கதையானது "காலங்கள் மாறும்போது", பிறந்து விட்ட புதுயுகத்தில், "என்னிடம் நெருங்காதே" இவை அத்தனை கதைகளும் வெளியானது 1974ம் ஆண்டில்தான்.

1975, ஜனவரி மாதம் 31ம் திகதி, அது அவளது திருமண ஆண்டானது. கொழும்பு இசிப்பத்தன மகா வித்தியாலய நூலகரான த.தனபாலசிங்கம் அவர்கள் அவள் கணவனானார். அவளுக்காக அவள் அண்ணன் தேடித்தந்த நல்ல துணைவர் அவர். இருவரது திருமண வாழ்வும் கொழும்பில் ஆரம்பித்தது.

1975ம் ஆண்டின் நடுப்பகுதியில். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாண மாநகர சபை மேயர் திரு. அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி நாடெங்கும் பரபரப்பாக பரவுகிறது.

பாடசாலையில் படிக்கும் காலங்களில் அவள் சரித்திரம் என்னும் வரலாற்றுப் பாடத்தில் எடுக்கும் புள்ளிகள் நூறு. அந்த வகையில் இலங்கையின் அரசியல் வரலாறும் அவளுக்கு அத்துப்படி. அல்பிரட் துரையப்பாவின் அரசியல் மரணம் ஒரு புதிய பரிமாணத்தை அவளுக்கு புலப்படுத்தியது.

அதே ஆண்டு ஆவணிமாத பாடசாலை விடுமுறையில் அவள் தன் கணவரோடு ஊர் வருகிறாள். யாழ்தேவி ஏறி வந்து யாழ்ப்பாணத்தில் இறங்கிய போது அங்கே அவளுக்காக ஒரு புதிய செய்தி காத்திருக்கிறது.

"துப்பாக்கி ஏந்தியேனும் தமிழீழம் காண்போம்' என்று தெருவோரச் சுவர்களில் எல்லாம் எழுதப்பட்ட சுலோகங்கள் தான் அப்புதிய செய்தியாகும். அவள் துணுக்குற்றாள். இவை விளையாட்டல்ல. விபரீதங்களே என அவளது உள்ளுணர்வு அவளுக்கு எச்சரிக்கை செய்தது.

கடந்த முப்பது வருட காலங்களுக்கு மேலாக நம்நாட்டில் நடந்து முடிந்த யுத்தம் பற்றி?

2014ம் ஆண்டு ஆறாம் மாதம் 15ம் திகதி வார இதழொன்றில் வெளிவந்த எழுத்தாளர் சந்திரா தனபாலசிங்கத்துக்கான நேர்காணலின் நிறைவுக் கேள்வி இது.

இலங்கையின் வரலாற்றில் 1958ம் ஆண்டின் இனக்கலவரம் என்பது நாட்டின் முக்கிய நிகழ்வாகப் பதியப்பட்டிருக்கிறது. 1974 ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகா நாட்டில் இடம் பெற்ற அனர்த்தங்கள் மிகவும் அநாகரிகமானவை. அப்போதிருந்தே நாட்டில் நிலவிய அசாதாரண சூழல் என்னால் அவதானிக்கப்பட்டு வந்தது.

1977 ஆவணிக் கலவரமும், 1983 ஆடிக் கலவரமுமாக இலங்கையில் இன்னும் இரண்டு இனக்கலவரங்கள் இடம்பெற்று முடிந்தன. 1987 இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தின் மூலம் இங்கு வந்த இந்திய அமைதிப்படை சண்டை செய்யும் படையாக மாற வேண்டிய சூழ்நிலை உருவானது.

1990ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை அகன்று சென்ற பின்பு மீண்டும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. அனைத்து யுத்தங்களின் போதும் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்களே. உயிரிழப்புக்கள், உடைமையிழப்புக்கள் தொடர்ந்தன. உண்ணஉணவுஇல்லை உடுப்புக்கழுவ சவர்க்காரமில்லை. பயணிக்க வாகனங்கள் இல்லை, மின்சாரம் இல்லை.

பற்றிரியும் இல்லை. நோய், பஞ்சம், பசி, பட்டினி என்பனவும் மக்களை வாட்டி வதைத்தன. விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும், தாழப்பறந்து சுடும் உலங்குவானூர்திகளும், துப்பாக்கி முனைகளும், மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. முற்காலங்களில் நாட்டுக்கு நாடு நடக்கும் யுத்தங்களில் மன்னர்களும் அவர்களது படைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு களத்தில் சந்தித்து யுத்தம் புரிந்து தமது வெற்றி தோல்விகளை நிர்ணயித்துக் கொள்வார்கள் என்றுதான் படித்திருக்கிறேன்.

ஆனால் இங்கு நடந்து கொண்டிருந்த நம்நாட்டு யுத்தத்தில் மக்களின் வாழ்விடங்கள்தான் யுத்தகளமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கொடுமைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு என்னால் கைகட்டிச்சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. நான் எழுதத் தொடங்கினேன்.

நாம் யுத்தத்தினால் கற்றுக் கொண்ட பாடங்கள் பல உண்டு. யுத்தம் புரிவதனால் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது என்பது அதில் ஒன்று. இலங்கையில் ஆயுதக் கலாசாரம் உருவானது ஏன்? இதற்கான அடிப்படைக் காரணம் கண்டறியப்பட வேண்டும். இனியொரு காலமும் அப்படியானதொரு சூழ்நிலை தோனறவே கூடாது என்பதில் நாம் உறுதயாக இருக்க வேண்டும். இலங்கையில் இனியொரு யுத்தம் வந்து மூளக கூடாது என்பதில் அக்கறையுடையவர்களாக இலங்கை மக்கள் அனைவருமே விழிப்புடன்இருக்க வேண்டும்

இவற்றையெல்லாம் மிக ஆணித்தரமாக எடுத்துச் சொல்லும் உரிமை எனக்கு இருக்கிறது. ஏனெனில் என் வயது அறுபது என்றால் அதில் பாதிக்குமேல் நான் யுத்த சூழலில் தான் வாழ்ந்திருக்கிறேன். யுத்தத்தின் கொடுமைகளைத்தான் அனுபவித்திருக்கிறேன். இந்த நிலையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நான் எங்கேயும் ஓடி ஒளியவில்லை. அனைத்து துன்பதுயரங்களுக்கும் மக்களோடு மக்களாக நின்று நேரடியாக முகங்கொடுத்திருக்கிறேன்.

அக்கேள்விக்கான எனது நிறைவான பதிலும் இதுதான்.

2013 விஜயவருடம் பிறக்கிறது. என நிலையினை யாவரும் அறியும் வண்ணம் ஒரு நூலினை வெளியிட வேண்டியதொரு அவசியமும் எனக்கு ஏற்படுகிறது. தயார் செய்யப்பட்ட பிரதிகளுடன் யாழ்ப்பாணம் கரிகணன் அச்சகம் நோக்கிச் செல்கிறேன். அச்சக உரிமையாளர் ராஜ்குமார் மெச்சத்தகுந்தவர். என்னிடமிருந்து நூலை அச்சேற்றும் பொறுப்பைப் பெற்றுக்கொண்டு. "புத்தகங்களை நான் உங்களுக்கு எப்போது தரவேண்டும்? கேட்கிறார். "எப்போது வேண்டுமானாலும் தரலாம்!" நான் சொல்கிறேன்.

அவ்வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தின் முதல் வாரம் அழகான "பிறந்துவிட்ட புதுயுகத்தில்" ஆயிரம் பிரதிகளை கரிகணன் பிரிண்டேர்ஸ் என் கையில் ஒப்படைக்கிறது. அதே மாதம் 25ஆம் திகதி மானிப்பாய் பிரதேசசபையின் கலாசார மண்டபத்தில் அந்நூல் வெளியீடு நடக்கிறது.

மண்டபம் நிறைந்த சபையோர்கள், மேடையில் வீற்றிருக்கும் விசேட விருந்தினரகள். விழா நடந்துகொண்டிருக்கும் சமயம் விழாவின் பிரதம விருந்தினரான எஸ். வன்னியகுலம் அவர்கள் என்னைப்பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார.

பிரச்சினைகள் எல்லாம் வந்து முட்டி மோதி கழுத்தைப் பிடித்து நெருக்கும் சமயத்தில் 'பிறந்து விட்ட புதுயுகத்தில்' என்ற தலைப்பில் ஒரு நூலை எப்படி நீங்கள் வெளியிடத் துணிந்தீர்கள்? "பிறந்து விட்டது புது யுகம்தான் என்பதை அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் வட மாகாண சபைத் தேர்தல் அறிவித்து நிற்கிறது"

அவர் கேள்விக்கு இப்படி நான் பதில் தந்தேன். 2013 செப்டெம்பர் மாதம் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் நிச்சயமாக அந்தத் தேர்தலின் வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி முழு உலகங்களுக்கும் முரசறைந்து புலப்படுத்திய மிகப்பெறுமானமுள்ள முடிவுகளே அவையாகும்.

இலங்கையில் போர் அற்றதோர் சமாதான சூழலை ஏற்படுத்துவதற்காக தமிழ் மக்கள் தகைமைசார் நல்லறிவுடன வழங்கிய அதி உயர் பங்களிப்பே அத்தேர்தல் வெற்றியானது என்பதைக் கருத்தில் கொள்வோமாக ! இலங்கையில் இதுவரை நடந்தது என்ன? இப்போது நடப்பது என்ன? இனி நடக்க வேண்டியது என்ன? இவற்றை இலங்கையுடன் சர்வதேசமும் சேர்ந்து தீர்மானிக்குமென்று நம்புவோமாக!

திருமதி சந்திரா தனபாலசிங்கம்
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
திரைப்படம்: டவுன் பஸ்
பாடியவர்: எம்.எஸ். ராஜேஸ்வரி
இயற்றியவர்: கா.மு. ஷெரிஃப்
இசை: கே.வி. மஹாதேவன்




சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா? என்னை
விட்டுப் பிரிஞ்சு போன கணவன் வீடு திரும்பல்லே
சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா? என்னை
விட்டுப் பிரிஞ்சு போன கணவன் வீடு திரும்பல்லே
பட்டு மெத்த விரிச்சு வச்சேன் சுமமாக் கிடக்குது
- பசும்
பாலைக் காய்ச்சி எடுத்து வச்சேன் ஆறிக்
கிடக்குது
பட்டு மெத்த விரிச்சு வச்சேன் சும்மாக் கிடக்குது
- பசும்
பாலைக் காய்ச்சி எடுத்து வச்சேன் ஆறிக்
கிடக்குது
சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?
என்னை
வட்டுப் பிரிஞ்சு போன கணவன் வீடு திரும்பல்லே
சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?

தலைய வாரிப் பூ முடிச்சேன் வாடி வதங்குது
தலைய வாரிப் பூ முடிச்சேன் வாடி வதங்குது
- சதா
தெருவில் வந்து நின்று நின்று காலும் கடுக்குது
- சதா
தெருவில் வந்து நின்று நின்று காலும் கடுக்குது
வழிய வழியப் பாத்துப் பாத்துக் கண்ணும் நோகுது
வழிய வழியப் பாத்துப் பாத்துக் கண்ணும் நோகுது
- அவர்
வந்தால் பேச நிறைய சேதி நெஞ்சில் இருக்குது
- அவர்
வந்தால் பேச நிறைய சேதி நெஞ்சில் இருக்குது

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?
என்னை
விட்டுப் பிரிஞ்சு போன கணவன் வீடு திரும்பல்லே
சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
புஸ்பமலர் சதாசிவம், நவரத்தினராசா- கரவெட்டி, யோகராணி, துஜித்தா, நிஷாந்தி, சாமந்தி, லோகநாதன்- வடலியடைப்பு, இந்திரா- வடலியடைப்பு, நிறஞ்சன்- யாழ்ப்பாணம், கே.ஆர்த்திகன்- கரணவாய்,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

### யாதுமாகி நின்றான்-குறும்பட விமர்சனம்




அப்பாவுக்கும் மகனுக்கும் இடையிலான எளிமையான உணர்வுகளை ஆர்ப்பாட்டம் இல்லாமல் சொல்லும் குறும்படம் யாதுமாகி நின்றான். தாயில்லாத மகன், மகனை வளர்க்கும் பத்திரிகை துறைசார்ந்த எழுத்தாளர் அப்பா. லேப்டாப் ஒன்றை வேண்டித் தரும்படி தட்ட முடியாத சில காரணங்களுடன் மகன் தந்தையிடம் கேட்கின்றான். ஆரம்பத்தில் அதற்கான சாதகச் சமிக்ஞைகளைத் தந்தை காட்டாவிட்டாலும்லேப்டாபை வேண்டிக்கொடுக்கின்றார். மகன இரவிரவாக எப்போதும் லேப்டாபுடன் இருக்கின்றான். தந்தை நோட்டம் விட்டாலும் அதையும் தாண்டி லேப்டாபுடன் எப்போதும் இருக்கின்றான். காலையில் தந்தை கவனிக்கும்போது லேப்டாபில் மகன் பேஸ்புக்கோடு இருப்பது புரிகின்றது. அதற்குப் பிற்பாடு முக்கிய சஸ்பென்ஸ், கிளைமாக்சோடு விறுவிறுப்பாக யாதார்த்தமாகப் படம் முடிகின்றது.

குறும்படம் ஆரம்பிக்கும்போது முதல் காட்சியே கவனிக்க வைக்கிறது, மகன் பூக்கண்டுக்குத் தண்ணீர் வார்க்கின்றான, தந்தை வீரகேசரியோடு கலாதியாக இருக்கின்றார் ம்திலில் தேத்தனி கோப்பை, மெல்ல மெல்ல உரையாடல் இருவருக்கும் இடையில் யதார்த்தமாகச் செயற்கையின்றி விரிகின்றது, அசைமன்ட் செய்ய லேப்டாப் வேணும் நண்பர்கள் லேப்டாபில் இலகுவாகச் செய்யத் தான்மட்டும் கையால் கீறி கஷ்டப்பட வேண்டும் என்று தன்பக்க காரணத்தைச் சொல்லும்போது ஒரு தந்தையின் பாத்திரம் இயல்பாக என்ன உணர்ச்சிகளை வெளிக்காட்டி தனது கருத்துக்களைச் சொல்லுமோ அதேபோல் அச்சுபிசகாமல் அந்தத் தந்தை பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

படம் முழுக்க வரும் உரையாடல்கள் எழுதப்பட்ட விதமும், காட்சி படிமங்களில் சொல்லப்பட்ட விதமும் சுவாரசியமாக உள்ளது . தந்தையாக நடித்த சத்குருவின் நடிப்பு ஆர்பபாட்டம் இல்லாத அட்டகாசம், மிகக் கச்சிதமான பாத்திர தேர்வு, மகனோடு கதைக்கும்போது ஏற்படும் முக பாவனைகள், ஒவ்வொரு கைத்தொலைபேசி அழைப்புக்கும் கண்ணாடியை பொருத்தி கதைப்பது, இறுதியில் நண்பரோடு கைத்தொலைபேசியில் உரையாடும் போது உணர்ச்சி விளிம்புகளில் தடுமாறுதல் என்று கனகச்சிதமாகச் சிம்பிளாக நடித்து அசத்தியுள்ளார். மகன் பேஸ்புக்கோடு இருப்பதைக் கண்டுவிட்டு மகனை கண்டிக்கும்போது வரும் வசனங்கள் மட்டுமே கொஞ்சம் செயற்கைபோல் தோன்றுகின்றது, சத்குரு அந்த இடத்தில மட்டும் கொஞ்சம் நாடகத் தன்மையான நடிப்பை பிரதிபலித்திருந்தார், அந்த இடத்தில எழுதப்பட்ட வசனம் இன்னும் கொஞ்சம் யதார்த்தமாக இருந்தால் சத்குருவின் நடிப்பும் யதார்த்தமாக இருந்து இருக்கும்.

மகனாக நடித்த சர்மாவின் நடிப்பும் சத்குருவுக்குச் சளைத்ததில்லை, யதார்த்தமான நடிப்பு, ஒவ்வொரு வசன உச்சரிப்புகள், ஏக்கங்களை அதனூடாக வெளிப்படுதல் என்று நன்றாக நடித்துள்ளார். இடக்கை பழக்கம் ஆகட்டும் இடக்கையை உபயோகித்து எல்லாக் காட்சியிலும் நடிப்பதாகட்டும் ஒன்றிலும் முரணில்லை.

தந்தை லேப்டாப்பை வேண்டிக்கொடுக்கும்போது முகத்தில் காட்டும் பரவச உணர்ச்சிகள், வேக வேகமாக லேப்டாப்பை தட்டிக்கொண்டு தந்தைக்குப் பதிலளித்தல் என்று அட்டகாசமாக ஸ்கோர் செய்துள்ளார். அதிகம் லேப்டாபுடன் நேரத்தை செலவிடும்போது தந்தை படுக்கச் சொல்லும்போது ஒருநிமிஷம் ஒருநிமிஷம் என்று தந்தைக்குப் பதில்சொல்லுதல் அனைத்தும் யதார்த்தம், இயக்குநரின் பன்முகத் தன்மை அபாரம்.

மிகவும் நுணுக்கமான இயக்கம். இயக்குநரின் உளவியல் புரிதல்கள் படத்தில் மிகப்பெரிய பிளஸ்பாயிண்டை தருகின்றது. கதாபத்திரங்களின் இயல்பை சரியாக ஸ்கிரிப்ட்டில் பிணைந்துள்ளார், தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான தலைமுறை இடைவெளிகளைச் சரியாகக் கையாண்டுள்ளார். டயரி எழுதும்போது அம்மா இருந்தால்தான் கெஞ்சலாம் என்று குறிப்பிடும் [illegible] சரியான [illegible] உணர்ச்சிகளைச் [illegible] முறையில் [illegible] இயக்குநர் மகின்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துக் கவிதைகள்

### துளி நீர்

மழை மாலை நாளொன்றில்
மங்கிய சாலை வெளிச்சத்தில்
ஆண்கள் கழிவறை அருகினில்
யுகங்கள் கடந்து பார்த்துக் கொண்டோம்
கிழிந்து தொங்கியது
எங்கள் முகமூடிகள்
அவசரமாய் காற்றை முத்தமிட்டோம்.

நனைந்த நிலம் நோக்கி கண்களை
மேயமிட்டோம்

கைகளை நீட்டிக்கொண்டோம்
தொடவில்லை
நாயொன்றின் குரைப்பில்
பிரிந்து கொண்டோம்.

**ரதன்**

### மழை பெய்த நாள்

மழைபெய்த நாளொன்றில்
சூரியனை முத்தமிட ஆசைப்பட்டது
கதிர் நாவாய்ப்பூச்சி
ஆசையை இலைகளிடம் சொல்ல
இலைகள் காதோடு கிளைகளுக்குச் சொல்லி
சந்தோசப்பட்டன.

பிய்த்துக் கொண்டு போயிற்று
காற்று கதைபரப்ப.
நெடுந்தூரம் பறக்க
சிறகுகளைப் பிய்த்துக் கொடுத்தன
தூக்கணாம் குருவிகள் பெருமழையில்
பாரங்களுடன் பறப்பது கடினமென்று
துயரங்களை வாங்கிக் கொண்டன
மர அட்டைகள்...

புதிதாய் பூத்த பூசணிப் பூக்களில்
தேனெடுத்துக் கொடுத்தன தேனீக்கள்.
நிலத்தோடு முட்டி மண்ணை
வாரிக் கொண்டு வந்த கடல்
நீரில் மூழ்கி முத்தெடுத்துக் கொடுத்தது
நீர்க்குதிரை

முகம் சிவந்து தலை கவிழ
மகரந்தத்தின் மணியெடுத்து
அழகாய் கவிதையெழுதிக் கொடுத்தன.
வண்ணத்துப்பூச்சிகள்.

மழை பெருகிப் பெய்து வழிந்த நாள்
பெருமழை முழுதுமாய் தலையில் கொட்டி
கன்னத்தில் நனைந்து வழிய
சூரியனை
தழுவி இழுத்து வந்து
வயல் வெளியில் கிடத்தி
முத்தமிட்டு மகிழ்ந்தது
கதிர்நாவாய்ப்பூச்சி.

**செழியன்**

# வசூலில் சாதனை படைக்கும் ஜூராஸிக் வேர்ல்ட் - இன்ஸைட் அவுட்



சமீபத்தில் உலகம் முழுவதும் வெளியான ஜூராஸிக் வேர்ல்ட் திரைப்படம் அமெரிக்காவில் வசூல் சாதனைகளைப் படைத்துவரு கிறது.

பிக்ஸார் ஸ்டூடியோஸ் தயாரித்த இன்ஸைட் அவுட் திரைப்படம் தற்போது இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

ஜூராஸிக் வேர்ல்ட் திரைப்படம் இரண்டு வார இறுதிகளில் 102 மில்லியன் டொலர்களைக் குவித்தி ருக்கிறது. இதற்கு முன்பாக அவெஞ் சர் திரைப்படம் 100 மில்லியன் டொலர்களைக் குவித்தது.

ஒரு சிறுமியை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட அனிமே ஷன் திரைப்படமான இன்ஸைட் அவுட் 91 மில்லியன் டொலர்களை வசூலித்திருக்கிறது.

தொடராக வரும் திரைப்படங் களைத் தாண்டி, தனியாக வெளி வரும் ஒரு திரைப்படம் வார இறுதி யில் இவ்வளவு வசூலித்தது இதுவே முதல் முறையாகும்.

இதற்கு முன்பாக 2009ஆம் ஆண்டில் அவதார் திரைப்படம் 77 மில்லியன் டொலர்களை வசூலித்தது.

பிக்ஸார் ஸ்டூடியோ 1995-ல் தயாரித்து வெளியிட்ட டாய் ஸ்டோரி திரைப்படத்தில்தொடங்கி, அந்நிறு வனம் தயாரித்த 14 படங்களுமே ரிலீஸானபோது முதலிடத்தில்தான் இருந்திருக்கின்றன. இன்ஸைட் அவுட் மட்டுமே இரண்டாவது இடத் தைப் பிடித்திருக்கிறது.

வேறு ஏதாவது வாரமாக இருந் தால் இன்ஸைட் அவுட் முதலிடத் தில் இருந்திருக்கும். ஆனால், அது ஒரு பெரிய விடயமில்லை. முத லாம் இடத்தில் இருப்பதற்கு தேவை யில்லாத முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது" என பொக்ஸ்ஆபிஸ் டாட்காமின் துணைத் தலைவர் பில் காண்ட்ரியோ குறிப்பிடுகிறார்.

ப்ரோஸன் திரைப்படமும் இரண்டாவது இடத்தைத்தான் பிடித்தது. ஆனால், டிஸ்னி வெளி யிட்ட திரைப்படங் களிலேயே அதிக வசூலைக் குவித்த திரைப்படமாக ப்ரோஸன் சாதனை படைத்தது.

ஒட்டுமொத்தமாக 1.3 பில்லியன் டொலர் களை அந்தப் படம் வசூலித்தது.

இதற்கிடையில், ஜூராஸிக் வேர்ல்ட் புதிய சாதனை ஒன் றைப் படைத்திருக் கிறது. அதாவது, டினோசர் திரைப் படங்களிலேயே அதிக வசூலைக் குவித்த திரைப்படமாக இந் தப்படம் உருவெடுத் திருக்கிறது.

இரண்டு வாரங் களில் இந்தப் படம் 398மில்லியன்டொலர் களைக் குவித்திருக் கிறது. 1993ல் வெளி யான திரைப்படம் இரு வாரங்களில் 357 மில்லியன் டொலர் களையே வசூலித் தது.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை விடாது துரத்தும் வெள்ளைக் கொடி விவகாரம்!

இறுதிப் போருக்குப் பிற்பட்டகாலப் பகுதியில் தமிழின அழிப்புத் தொடர்பான தகவல்கள், ஆதாரங்கள் அவ்வப்போது வெளியாகி இலங்கை அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருவது வழமையாகி விட்டது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது என்று இலங்கை அரசு அறிவித்திருந்திருந்தபோதிலும் தமிழின வடிவுக்கான போராட்டம் இன்னும் முடியவில்லை என்பதை இந்தத் தகவல்களும் ஆதாரங்களும் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன.

தமிழர் தாயகத்தில் நடந்தது இன அழிப்புத்தான் என்பதை ஆதாரபூர்வமாகவும் நேரடிச் சாட்சியங்கள் ஊடாகவும் வெளிப்படுத்தினாலும் இலங்கை அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டை இன்னும் எடுக்காததாலும் அது குறித்து சர்வதேச விசாரணைக்கு முன்வர அல்லது இடமளிக்க உடன்படாததாலும் இந்த நெருக்கடி நிலை தொடர்ந்து ஏற்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டும் என்ற பேராசையினாலும் தமிழர்களைக கொன்றால் யார் கேட்பார்கள் என்ற அகங்காரத்தினாலும் மகிந்த ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் பேரழிவைச் சந்திக்க நேரிட்டது.

மகிந்த ஜனாதிபதி பதவியை இழந்த பின்னரும் அவர் ஆட்சியில் நடந்த அநீதிகளுக்கு ஐ.நா.சபையில் சாட்சியங்களைப் பதிவுசெய்தது மட்டுமல்லாது இறுதிப் போரில் என்ன நடந்தது என்பதையும சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளுக்கு என்ன நடந்தது என்பதையும்மூவர் தற்போது வெளிப்படுத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனின் மகனும், சமாதானச் செயலாளரான புலித்தேவனின் மனைவியும், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் மலரவனின் மனைவியும் ஐ.நாவில் நேரடிச் சாட்சியங்களாக மாறியுள்ளனர்.

இவர்களின் சாட்சியப் பதிவுகள் இலங்கையில் மீண்டும் வெள்ளைக்கொடி விவகாரத்தை உயிர்ப்பித்துள்ளது.

அது மட்டுமின்றி இலங்கை அரசாங்கத்திற்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதாகக்கூறி இலங்கை அரசாங்கம் செய்த தமிழின அழிப்பின் சாட்சியங்கள் பல முனனரும் வெளிவந்திருந்தாலும் இப்பொழுது அதன் நேரடித் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட சாட்சியங்கள் வெளிவந்துள்ளன.

இந்தநேரடிச் சாட்சியங்களின் வாக்குமூலங்களினால் இலங்கை அரசாங்கம் பல்வேறு நெருக்குதல்களுக்கு உள்ளாகவுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளார்கள.

இலங்கையின் வடக்கில் 2009 ஆம் ஆண்டு நந்திக்கடலில் வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பு அதன் ஆயுதபோராட்டத்தை மௌனிப்புச் செய்தது.




அதன்பின் இறுதிக்கட்டப் போராட்டத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர்கள், தளபதிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தது தொடர்பில் இலங்கை அரசாங்கம் பல்வேறு தகவல்களை முன்னுக்குப்பின் முரணாகத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான காரியாலயத்தல் அமைந்துள்ள விசேட அறையொன்றில் அண்மையில் சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர் இந்த மூவரும்.

வெள்ளைக்கொடி விவகாரத்தை மூடி மறைக்க மகிந்த அரசு எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் ஆதாரங்களை அழிக்க முடியவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெற்ற (போருக்குப் பின்னரான) காலப்பகுதியில் சனல்- 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலிகள் அழிக்க முடியாத ஆதாரங்களாக உலகம் முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி உலக நாடுகளின் மனச்சாட்சியையும் தட்டிக் கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் உண்மையில்லை என்று மகிந்தவும் அவரது அமைச்சரவையும் தொடர்ந்து மறுத்து வந்தாலும் தப்பித்துக்கொள்ள முடியாத நிலைக்கு அவரை இழுத்துச் சென்றுவிட்டது. இந்த நிலைக்கு அவர் செல்வதற்கு அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் முக்கிய பங்காற்றியிருந்தார்.

போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து மகிந்தவை தப்பிக்கவிடாது தடுத்தவர்களில் கோத்தபாயவின் போருக்குப் பின்னராக நடவடிக்கைகள் முக்கியமானவை. இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுதல், இடம் பெயர்ந்த மக்களின் காணிகளை அவர்களிடம் மீள ஒப்படைத்து மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்திருந்தார்.

இறுதிப் போரின் போது விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள், போராளிகள் சரணடைந்தபோது அவர்களை குடும்பங்களிலிருந்து பிரித்து தனிமைப்படுத்தியது மட்டுமல்லாது பலரது மர்ம மரணங்களுக்கும் காணாமற்போனவர்களின் பட்டியலில் பலர் இணைக்கப்பட்டதற்கும் கோத்தபாய காரணகர்த்தாவாக செயற்பட்டிருந்தார்.

இவ்வாறு போருக்கு முன்னரும், பின்னரும், போர்க்காலத்திலும் மகிந்த மீது குற்றங்கள் இறுகுவதற்கும் சர்வதேச ரீதியாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் பேசப்படுவதற்கும் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசிற்கு எதிராக தீர்மானங்கள் கொண்டு வரப்படுவதற்கும் கோத்தாவின் நடவடிக்கைகளும் காரணமாக அமைந்திருந்தன.

வெள்ளைக் கொடி விவகாரம் இலங்கையைவிடாது துரத்துவதற்கும் தமிழின அழிப்புக்கு காரணமானவர் என்று பலகுற்றச்சாட்டுக்களை மகிந்த அரசு மீது சுமத்துவதற்கும் கோத்தாவின் நடவடிக்கைகளும் அவரின் அணுகுமுறைகளும் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கள் தற்போது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளல்ல. இவை நீண்டகாலமாக குறிப்பாக போருக்கு பிற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள்.

போர்க்குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எவரும் இதுவரை நீதியன் முன் நிறுத்தப்படவில்லை என்றுஅமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் குற்றம்சாட்டியுள்ள நிலையில் வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து ஐ.நாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளின் உறவினர்கள் சாட்சியம் அளித்திருப்பது இலங்கை மீது சர்வதேச நாடுகளின் அழுத்தம் மேலும் அதிகரித்து வருவதை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமின்றி ஒரு நாட்டுக்குள் வாழும் மக்களை பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தி அழித்தொழித்த இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேச நாடுகளில் முன்னெடுககப்பட்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாத இக்கட் டான நிலைக்குள் அகப்பட்டுள்ளனர் என்றே கூறவேண்டும். அதேவேளை அண்மையில் ஐ.நாவில் மூவர் வழங்கிய சாட்சியங்களின் ஊடாக வெள்ளைக்கொடி விவகாரம் இலங்கையை விடாது துரத்திக் கொண்டே இருக்கும் என்பதை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நடிகர் அஜித்குமார் பற்றி உங்கள் கருத்து என்ன?

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்திலும் உள்ளார்களா?

நயன்தார பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**சமிதரன் — நயினாதீவு**

**அதிக பணத்திற்கு ஆசைப்படுபவர்கள் பற்றி?**

அதிக பணத்திற்கு ஆசைப்படு. ஆனால் உழைப்பை நம்பு. அடுத்தவர் பணத்திற்கு மட்டும் ஆசைப்படாதே. அந்த பணம் சலரோகம் மாதிரி அறுசுவை உணவை பார்க்க மட்டும் தான் முடியும் சுவைக்க முடியாது.

**தனு — அல்வாய்**

**கற்காலமா, தற்காலமா சிறந்தது?**

கற்காலத்தில் கம்பியூட்டர் இல்லை. ஆனால் பூமி கம்மென்று இருந்தது. கற்காலத்தில் இளநீர் இருந்தது யாருக்கும் அல்சர் இருந்திருக்கவில்லை. தற்காலத்தில் கோலா இருக்கிறது. ஆளாளுக்கு அல்சர் என்று திரிகிறார்கள். கற்காலத்தில் பாலியல் இருந்தது. தற்காத்தைப் போல பாலியல் துஷ்பிரயோகம் இருந்ததே இல்லை.

**கோபிகா — மடத்தடி**

**நயன்தார பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

கேரளாவில் இருந்துவந்த பதுமை. ஐயாவில் அறிமுகமாகி சந்திரமுகியில் ரீச்சாகி சிம்புவுடன் லவ் ஆகி அது முறிய பிரபுதேவாவுடன் குடும்பம் நடத்தி அதுவும் முறிந்து போக இணையங்கள் அதை நாறடிச்சும்... இப்போதும் சினிமாவில் நம்பர் - 1 நடிகையாக வலம் வருகிறார் என்றால் தமிழ் ரசிகர்களின் ரசனை... ?

**தரன்**


**கல்வியில் மனப்பாடம் செய்வது எப்படி?**

100 தரம் திரும்பத்திரும்ப படிப்பதை விட ஒருமுறை ஆழமாய் விளங்கிப்படித்தால் போதும்.

**நகுராஜ் — சுழிபுரம்**

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்திலும் உள்ளார்களா?**

இன்னும் இல்லை. ஒருவேளை வந்தாலும் அவர்களால் கெட்டவர்களுக்கு அச்சுறுத்தல் இருக்காது. அவர்களின் செயற்பாடுகள் உண்மை, நேர்மைக்கெதிரானதே.



**சங்கர்**

**நடிகர் அஜித்குமார் பற்றி உங்கள் கருத்து என்ன?**

புகழின் உச்சியிலிருந்தும் ஒரு சாதாரண மனிதர் போல் அனைவரையும் அன்புடன் பார்க்கும் ஒரு உன்னதமான நடிகர்.

ஒருமுறை சட்டசபைத் தேர்தலுக்கு ஓட்டுப்போட வரிசையில் நின்ற அஜித்தை வரிசையில் நிற்காது ஓட்டுப்போட அழைத்த அதிகாரிகளுக்கு நான் சாதாரண இந்தியன். வரிசையில் நின்று ஓட்டுப் போடுவதுதான் ஜனநாயகம் என்று கூறியவர்தான் இந்த அஜித்.



கவலாளி - 1: புலவரை ஏன் தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள்?

கவலாளி - 2 : இங்கே மன்னரைப் புகழ்ந்து பாடும் புலவர், எதிரி நாட்டில் போய் நம் மன்னரைக் கலாய்த்து கவி பாடி எதிர்நாட்டு மன்னனிடம் பொன் பொருள் வாங்குகிறாராம் அதுதான் இந்த நிலை.

**முரளிதரன் — தொல்புரம்**

**நீங்கள் பார்த்த முதல் திரைப்படம் எது?**

'பொலிஸ்காரன் மகள்' 1965 களில் வின்சர் தியேட்டரில் படம்பார்த்துவிட்டு இரவு 11 மணிக்கு சைக்கிளில் வந்த போது பொலிஸ் மறித்து எங்கு போய் வருகிறீர்கள் எனக் கேட்க படம் பார்த்துவிட்டு என நண்பன் கூற என்ன படம் என பொலிஸ் கேட்க 'பொலிஸ்காரன் மகள்' என எப்படி பொலிஸிடம் கூறுவது என விழித்து பொலிஸிடம் அடிவாங்கிய நினைவுகளை மறக்க முடியுமா?

**சிவலோஜினி — வயாவிளான்**

**தமிழினத்தின் தலைவிதியை மாற்றி குடும்ப ஆட்சி புரிந்த மன்னர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?**

மனிதன் வழங்கும் தண்டனையிலும் இறைவன் வழங்கும் தண்டனை பொருத்துடையது. அவனிடமே அதை விட்டு விடுவோமே.

**சுகந்திகா — கொக்குவில்**

**நவீனகால உலகில் எதற்கு நாம் அதிகமாக பயப்படுவது என்று தெரியவில்லையே?**

மனிதன் மனச்சாட்சிக்கு மட்டும் பயந்தால் போதும்.

**சாளினி — முறிப்பு**

**காதலிக்க மறுக்கும் பெண்களைப்பற்றி?**

வாழ்வில் சந்தோசமாக இருக்க விரும்புபவர்கள்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**மலர்களிடம் வழிந்தோடும் தேனை நுகரும் வண்டுகளை எப்படி இனம் காண்பது?**

மலர்களில் தேன் இருக்கும். ஆனால் அது வழிந்தோடுவதில்லையப்பா. அப்படி வழிந்தோடினால் அதை நுகர்வதில் ஒன்றும் தவறில்லையே. வண்டென்றால் தேனை நுகரத்தானே செய்யும்.

**சௌமி — புலோலி**

**பெருமை பிடித்து அலைபவர்கள் பற்றி?**


அந்த அலைச்சல் தன்னை சிறுமைப்படுத்துகின்றது என்பதையே தெரியாமல் அலைகிறான் பாவம்.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**நல்லவர்களாய் இருந்து எதுவுமே செய்ய முடியவில்லை. நல்லவர்களாக இன்னும் இருக்கனுமா?**

நல்லவர்களால் தான் எதையும் சாதிக்க முடியும் என்பது கீதையின் நாயகன் பெயர் சூடிய உனக்குப் புரியவில்லையே பரந்தாமா?

**வஞ்சகன் கண்ணடா**
**வருவதை எதிர் கொள்ளடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கப் புலியிடம் பொல்லுக் கொடுத்து அடிவாங்கியது



# இந்தியா




இந்திய கிரிக்கெட் அணியின் இராசிக்கார கட்டனாக திகழ்ந்தவர்தான்எம்.எஸ்.டோனி. தற்பொழுது அவரது இராசி சரியில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அண்மையில் அவருக்கு பெண் குழந்தையும் பறிந்துள்ளது. அவரது குடும்ப சுமை அதிகரித்துள்ளதால் என்னவோ இந்திய அணியின் சுமையை அவரால் சரியாக சுமக்க முடியவில்லை என்று தான் கூற வேண்டும்.

மைதானத்தில் எப்பவும் கப்டன் கூல் ஆக காணப்பட்டவர் இப்போது தனது பழைய நிலையிலிருந்து விடுபட்டு விட்டார் என்றே தெரிகின்றது.

இந்திய கிரிக்கெட் அணி கடந்த வாரம் பங்களாதேஷத்திற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது.

கோலி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணிக்கு வருண பகவானின் கருணை கிடைக்காததால் போட்டியின் முடிவு தெரியாமலே முடிந்து விட்டது.

அடுத்து டோனி தலைமையிலான இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகளை பங்களாதேஷிடம் எதிர் கொண்டது.

ஒருநாள் போட்டிகள் கொண்ட அரங்கில் சர்வதேச அளவில் சிறந்த அணியாக திகழ்ந்த இந்தியா பங்களாதேஷத்தினை குறைத்தே மதிப்பிட்டு விட்டது.

கடந்த சிலகாலமாக பங்களாதேஷ் அணியின் வெற்றிப் பாதையை கண்டு கொள்ளாத இந்தியா மெத்தனப் போக்கினையே கடைப் பிடித்தது.

இந்திய அணியின் வெற்றி மமதை வங்கதேஷம் அணியிடம் பொல்லுக் கொடுத்து அடிவாங்க வேண்டிய நிலைமையாக மாறி விட்டது.

முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா பங்களாதேஷிடம் 79 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது.

அப் போட்டியில் பங்களாதேஷின் அறிமுக வீரர் ரகுமான் மாயாஜாலம் காட்டி அசத்தினார். அவரது பந்து வீச்சினை எதிர் கொள்ள முடியாமல் இந்திய அணி திணறியது.

இந்தியத் தொடருக்காக பங்களாதேஷ் அணி தன்னை சிறப்பாக தயார் செய்து கொண்டிருந்தது. பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என அனைத்திலும் பங்களாதேஷ் அணி சிறப்பாக செயற்பட்டது.

முதலாவது ஒருநாள் போட்டியிலேயே இந்திய அணியின் மெத்தனப்போக்கு தெரிந்தது. முதலாவது போட்டியில் இந்திய அணியில் உடல் மொழியில் அலட்சியம் தெரிந்ததே இதற்கு தக்க சான்றாகும்.

முதலாவது போட்டியில் இந்திய அணி தான் அடைந்த தோல்வியை உணர்வதற்குள் வங்கதேஷத்திடம் இரண்டாவது போட்டியிலும் வாங்கிக் கட்ட வேண்டிய நிலைமையாகிவிட்டது.

முதலாவது போட்டியில் இந்திய அணி செய்த அதே பிழையை இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் செய்தது.

முதலாவது போட்டியில் இந்திய அணிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அதே ரகுமானின் பந்தில் இந்திய அணி தனது விக்கெட்டுக்களை அள்ளிக் கொடுத்தது.

முதல் முறையாக இந்திய அணி பங்களாதேஷிடம் தொடரை பறி கொடுத்தது. முதல் இரு போட்டியிலும் தோல்வி அடைந்தது.

தொடரையும் பறி கொடுத்ததன் விளைவாக டோனி தலைமையிலான இந்திய அணியின் மீதே விமர்சனம் எழத் தொடங்கியது.

குறிப்பாக டோனியின் தலைமைத்துவம் மீதே அதிக விமர்சனம் எழுந்தது. டோனி தனது தலைமைத்துவத்தை துறக்க வேண்டும் என கிரிக்கெட் வல்லுநர்களால் விமர்சனமும் செய்யப்பட்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் டோனி இந்திய கிரிக்கெட் தொடர்பாக நடக்கும் அனைத்து மோசமான விடயங்களுக்கும் நான்தான் காரணம் என்றால் இப்போதே பதவி விலகத் தயார் எனத் தெரிவித்தார்.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்தியா தன்னை சரியாக பயன்படுத்தி ஆறுதல் வெற்றியை பெற்றுக் கொண்டது. இல்லையெனில் இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் கொந்தளிப்பில் இந்திய அணி வீரர்களின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்படுவதோடு இந்திய அணி விமான நிலையம் வரும் நேரமும் இரகசியம் பேணப்பட்டிருக்கும்.

எதிர்வரும் ஜூலை மாதம் இந்தியா -சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் பங்களாதேஷத்துடான தொடர் இழப்பின் பின்னர் சிம்பாவே தொடர் இரத்து செய்யப்பட்டுள்ளது.

கத்துக்குட்டியான சிம்பாவே அணியுடனான தொடர் இரத்துச் செய்யும் அளவில் இந்திய கிரிக்கெட் அணியின் நிலைமை உள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் சுற்றுப் பயணம் இந்திய அணிக்கு மிகப் பெரிய சவாலை கொடுத்துள்ளது என்று தான் கூற வேண்டும்.

அடுத்த இந்திய அணிக்கான தலைமையை தேட இதுதான் சரியான நேரம். இந்திய அணியின் அடுத்த தலைமையை கோலி தான் பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால் சமீபகாலமாக கோலியின் நடத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு திருப்தியை தரவில்லை.

அனுஷ்கா சர்மாவுடனான கோலியின் காதல் திருகுதாளங்களே இதற்கான காரணமாகும்.

ச.மதீசன்

## மிஸ்ரர் கூல்...

எல்லோருமே பொல்லுக் கொடுத்துத்தான் அடிவாங்கிறது. நம்ம டோனி ரீம் பொல்லையே வாங்கிவந்திட்டாங்கப்பா!

ஐயய்யோ இப்படிச் சொல்ல இந்திய ரசிகர்கள் என்னைத் திட்டாதீங்கப்பா!

இது பங்களாதேஷ் நாட்டின் குடிபாணம் ஒன்றின் விளம்பரமுங்க.

பிச்சில போடப்பட்டிருக்கிற ஒரு பெஞ்சில பங்களாதேஷ் ரசிகர் ஒருத்தர் ஒய்யாரமாய் இருப்பார். அந்த இடத்திற்கு இந்திய ரீம் ரசிகர் ஒருத்தர் வருவார்.

பேச்சுவாக்கில கதையைக் கொடுப்பாரு இந்திய ரசிகர். ஒரு கட்டத்தில இந்திய ரீம் தான் வெல்லும் என்று கூற கடுப்பான பங்களாதேஷ் ரசிகர் கோபத்தோடு எழுந்து சென்று வீதியின் ஓரமாகக் கிடந்த மூங்கில் கட்டையொன்றை எடுத்து வந்து " இந்தா இதத்தான் உங்களால எடுக்க முடியும்" என்று சைகையால காட்ட அந்தக் குறிப்பிட்ட குடிபானம் திரையில் காட்டப்படும்.

இணையத்தில் சக்கை போடு போட்ட இந்த விடியோவைப் பார்த்த இந்திய ரசிகர்களுக்கு செமக் கடுப்புங்க.

இதைத்தான் பொல்லையே வாங்கி வந்திட்டாங்க என்று சொன்னேன். Sorry

பங்களாதேஷத்தில தொடரை இழந்தாலும் டோனி பெருமூச்சு விட்டதா ஒரு தகவல்.




அது என்னண்ணா 'நல்ல வேலை நாம நூடில்ஸ் விளம்பரத்தில நடிக்கல' என்று தான் அந்த பெருமூச்சு.

**"இந்தியாவில நூடில்ஸ்சுக்கு தடை விதிச்ச நேரத்தில டோனி ரீம் பங்களாதேஷில நொந்து நூடில்ஸாகிட்டே"**

என்று சமூக வலைத்தளங்கள டோனி அன் கோவை கழுவி ஊத்திட்டாங்கப்பா.

அதிலையும் " வழமையா நாம தான் நொந்து நூடில்ஸ் ஆகுவோம். ஆனால் இந்தத் தடவைதான் நூடில்ஸே நொந்திருக்கு" என்று போட்டு பின்னிட்டாங்க.

கடந்த வருடம் நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரில பலமான இந்திய அணி முக்கியமான லீக் போட்டியில பங்களாதேஷை வென்ற போதிலும் பங்களாதேஷ் அணி வீரர்களின் ஆட்டமிழப்புக்கள் பல சர்ச்சையை உண்டுபண்ண, நடுவர்கள் தவறான தீர்ப்பை வழங்கிவிட்டார்கள். இல்லையென்றால் பங்களாதேஷம் இந்திய அணியை வென்றிருக்கும் என்று ரசிகர்கள் கொந்தளித்து ஐ.சி.சி நிர்வாகிகள் நடுவர்கள் என பலரின் கொடும்பாவிகளை எரித்து அந்த நெருப்பில் சபதமிட்டார்கள் இந்திய அணியை வெல்வோம் என. வென்றிட்டாங்கப்பா!

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் ஒரு போட்டி மீதம் இருக்க டோனி டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றதும் கோலி கப்டனானார்.

ஆனால் இப்போ பங்களாதேஷ் தொடர் தோல்வியோட டோனி ஒரு நாள் போட்டியிலிருந்தும் ஓய்வு பெறனும் என்று நாலாபுறமும் செய்தி பறந்துவர நம்ம டோனி பதைச்சு போயிற்றாருங்க.

தோல்வியடைந்த இரண்டு போட்டியிலும் ஓட்டமெடுக்க கஷ்டப்பட்ட இந்திய அணி கடைசிப் போட்டியில் ஆறுதல் வெற்றிபெற்று அடக்கமாய் இருக்கு. அடுத்த தொடரில டோனி வெல்வாரா இல்லை விட்டுக்குச் செல்வாரா... பொறுப்போம்... பார்ப்போம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org